

"சினிமாவே வேண்டாம்!"

கல்கி

ஸ்வீட்டா...ஸ்டைலா...ஸ்மார்ட்டா...

KALKI • 11.10.2009 • ரூ.10.00 • 96 பக்கங்கள்



பவர் டெக். பலன்கள்!

- ஜி.டி.ஷர்மா

இலக்கியத்தில் அணிகலன்கள்!

- அழகு மினித் தொடர்


தீபாவளிக்குப்
புதுசு
லண்டன்
ஜார்ஜெட்
லண்டன் ஜார்ஜெட் இந்த தீபாவளியின் புதிய வரவு.
போத்திஸ்
அழகிய ஜவுளிகளின் ஆலயம்
ஸ்ரீவில்லிபுத்தூர் • நெல்லை • சென்னை • மதுரை
Online Shopping at www.pothys.com



அடுத்த இதழ்
தீபாவளி
ஸ்பெஷல்
சுதா சேஷய்யன்
எழுதும்
ஸ்ரீ லலிதா
பாகம்-4
ஆரம்பம்...
ஸ்ரீ மூகாம்பிகை தேவி
வண்டலூர்
இன்னும் ஸ்பெஷல் கடைசிப் பக்கத்தில்...

சினி சிப்ஸ்



கவர்ச்சி காலை வாரி விட, குத்துப் பாட்டு குப்புறத் தள்ளிவிட, ப்ரியாமணி மீண்டும் பருத்திவீரன் பாணிக்கு யதார்த்த ரோலுக்கு இடம் பெயர்கிறாராம்.

(சனிப்பெயர்ச்சி போல இந்த இடப்பெயர்ச்சி பலன் தந்தா சரி!)

தயாரிப்பாளர் பெயரைப் போட்டால் ராசியில்லைன்னு யாரோ வெடிகுண்டு பீதியைக் கிளப்ப, தயாரிப்பாளர் பெயர் போடாமலேயே ஐங்கரன் இன்டர்நேஷனல் பேராண்மையை வெளியிடுகிறது.

(படம், தயாரிப்பாளர் பெயரைச் சொல்ற மாதிரி இருந்தா சந்தோஷம்!)

அமைதியான குளத்தில் கல்லெறிந்தாதான் அலை வரும்னு டாப் ஹீரோ படம் மற்றும் கவனம் ஈர்க்கும் கலைப்படம் இல்லாத நேரத்துக்குக் காத்திருக்கிறாராம் அமீர். 'யோகி' படம் நல்ல சூழலுக்காக யோக நிலையிலுள்ளதாம்.

(சீக்கிரம் ரசிகர்களுக்குத் தரிசனம் தந்து வரம் வாங்கிக்கோங்க...)

இயக்குநர் பேரரசு டைரக்‌ஷனில் தொடங்கி, திரைக்கதைக்குத் தாவி, பாடல் எழுத ஆரம்பிச்சு இப்போ இசையமைப்பாளராகவும் மாறியிருக்கிறார். அது 'திருத்தணி'யில் எதிரொலிக்குமாம்.

(ஆல் இன் ஆல் அழகுராஜாவுக்கு, அடுத்த சாம்பிள் நீங்கதானா?)

விஷால் தயாரிப்பில் இயக்குநர் பாலா

படம் பண்ணுகிறார். விஷாலும் சூர்யாவும் இரட்டைக் குழல் துப்பாக்கி போல இரட்டைக் கதா நாயகர்களாக படத்தில் பின்னிப் பெடலெடுக்கப் போறாங்களாம். போட்ட பணத்தை எடுத்துடு வேன்னு விஷால் இப்பவே பெருமைப்பட்டுக் கிறாராம்.

(எங்கே செல்லும் இந்தப் பாதை...?)

ஹாலிவுட்டில் மட்டும்தான் பார்ட் - II படம் வருமா என்ன? லாரன்ஸ்... முனி - பார்ட் - II எடுக்கப் போறார். ''ஸார் எங்க படத்தில நடிக்க வாங்க''ன்னு யாராவது புது டைரக்டர்கள் கூப்பிடப் போனா, 'எம் படத்தில முதல்ல வொர்க் பண்ணிக் காட்டுங்க'ன்னு பிராக்டிகல் எக்ஸாம் வைக்கிறாராம்.

(பார்த்து ஸார்... எக்ஸாம் வைக்கற நீங்களே ஃபெயிலாகிடப் போறீங்க...)

தமிழில் 'கேடி' படத்தில் போனியாகாத நடிகை இலியானா தெலுங்கில் கோடி வாங்கும் ஹீரோயினா ஆயிட்டாங்க.

இலியானா 1 கோடி!

அவரை இப்போது, ஒரு கோடி சம்பளம் கொடுத்து தனக்கு ஜோடி சேர்த்துள்ளார் சிம்பு.

('கேடியிலிருந்து கோடிக்கு...'னு உங்க அனுபவங்களை எழுதலாமே...)

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

ஆசிரியர் : சீதா ரவி
உதவி ஆசிரியர்கள் :
கதிர்பாரதி, அமிர்தம் சூர்யா
வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன்,
பா.கோபால்
தொலைபேசி : 044 - 4343 8888
தொலைநகல் : 044 - 4343 8899

ஆசிரியர் குழு :
044 - 4343 8822
kalki@kalkiweekly.com

விளம்பரப் பிரிவு :
044 - 4343 8811
marketing@kalkiweekly.com

சந்தா பிரிவு :
044 - 4343 8833
subscription@kalkiweekly.com

விற்பனை பிரிவு :
044 - 4343 8844
sales@kalkiweekly.com

இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

இணையதளத்தில்...
வாங்கி, வாசித்து, மகிழ...
www.sangapalagai.com

சந்தா விவரம் (ஒரு வருடம்) :
உள்நாடு : ரூ.500/-
வெளிநாடு : ரூ.3,800/-

கல்கி பில்டிங்க்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஒரே கேள்வி... ஒரே பதில்...

அ.தி.மு.க. கூட்டணி

அ.தி.மு.க.வுடன் கூட்டணியில் இருப்பதால் ம.தி.மு.க. வளர்ச்சி பாதிக் கப்பட்டுள்ளதா?

நாஞ்சில் சம்பத் (ம.தி.மு.க. கொள் கைப் பரப்புச் செயலாளர்):



* நாஞ்சில் சம்பத்

"ம.தி.மு.க., லட்சியத் தாகமுள்ளவர்களின் வசந்த மாளிகை"

''எந்த வகையிலும் பாதிப் பில்லை. இதற்குச் சமீபத்தில் நாங்கள் திருச்சியில் நடத்திய அண்ணா நூற்றாண்டு விழாவே சாட்சி. அன்று எங்கள் தொண் டர்களும், பொதுமக்களும் அலை கடலெனத் திரண்டார்கள். அ.தி. மு.க. வேறு கட்சி. எங்கள் கொள் கைள் சில பொதுவாக இருக்கக் கூடும். கொள்கை அளவில் யாரோடும் சமரசம் செய்து கொள்ளவில்லை. உண்மை யோடும் நேர்மையோடும் எங்கள் பயணத் தைத் தொடர்வதால் சிறு சிறு கிராமங் களில்கூட வாலிபர்களை ம.தி.மு.க. வசமாக்கிக் கொண்டு வருகிறது. இலட்சிய தாகம் உள்ளவர்களின் வசந்த மாளிகையாக தமிழகத்தில் 'ம.தி.மு.க. மட்டுமே தனித்து ஒளி வீசுகிறது.'

ஆங்கில மாதப் பத்திரிகை தொடங்க வேண்டிய அவசியம்?


சரத்குமார்: ''பத்திரிகை நடத்துவது எங்கள் குடும்பத்து உணர்வு. எண்ணங்களை எழுத்தாக வடிப்பதில் எனக்கு எப் போதுமே ஆர்வம் உண்டு. அறிவைப் பரவலாக்குவதில் பத்திரிகைகள் செய்யும் பணி பிரமிக்கத்தக்கது. இப்போது நாடு இருக்கும் சூழலில் தேசப்பற்றை மீண்டும் புதுப்பித்துக் கொள்ளும் கட்டத்தில் இருக்கிறோம். நமக் குத் தெரிந்ததை நான்கு பேருக் குச் சொல்ல பத்திரிகையே சரியான வாகனம். கருத்துக்கள் அதிகாரத்தில் உள்ளவர்களை யும், உலக அளவிலும் சென்ற டைய வேண்டுமானால் ஆங்கிலப் பத்திரிகையே சரியான மீடியம். நாட்டை எதிர்கொண்டிருக்கும் பல்வேறு பிரச்னைகளை யும் அதிலிருந்து மீண்டு வருவதற்கான வழிகளையும் எடுத்து வைக்கும் வகையில் செயல்பட, பத்திரிகை சிறந்த ஆயுத மாக இருப்பதால் இதில் குதித்துள் ளேன்.''



* சரத்குமார்

"நமக்குத் தெரிந்ததை நான்கு பேருக்குச் சொல்ல பத்திரிகையே சரியான வாகனம்."

போலி ரேஷன் கார்டுகளைக் கண்டுபிடிக்க


எ.வ.வேலு

அமைச்சர்களே வீடுவீடாகப் போய்ச் சோதனை நடத்துவது விளம்பரத்துக்காகத்தானே?

அமைச்சர் எ.வ.வேலு: ''போலி ரேஷன் கார்டுகளைக் கண்டறியும் பணி நான்கு கட்டங்களாக நடக்கிறது. கணக்கெடுப்பாளர், அதற்கு மேல் தாசில்தார், அந்த இருவருக்கும் மேலே மண்டல மேலாளர். கணக்கெடுப்பவர் ஒழுங்காக எடுக்கிறாரா என்பது அடிப்படையாகப் பார்க்கப்பட வேண்டும். காரணம் உண்மையான பயனாளி எந்த விதத்திலும் பாதிக்கப்படக் கூடாது. எனவேதான் அதிகாரிகளுக்கு ஒரு விழிப்புணர்வு ஊட்டும் வகையில் எங்கள் சோதனை அமைகிறது. கணக்கெடுப்பாளர் எடுத்துள்ள விவரங்களை, சாம்பிள்களாகச் சில வீடுகளில் சென்று சோதனை செய்கிறோம். இதனால் கணக்கெடுப்பாளரும், மற்ற மேல்நிலை அதிகாரிகளும் எச்சரிக்கையாகவும் கடமையுணர்வோடும் செயல்படுகிறார்கள். இப்படிச் சோதனை செய்யும்போது பயனாளிகளிடம் ரேஷனில் சரியாகப் பொருட்கள் கிடைக்கின்றனவா என்று விசாரிக்கவும், அவர்கள் வாங்கிய பொருட்களைப் பார்த்துத் தரத்தைச் சோதிக்கவும் வாய்ப்புக் கிடைக்கிறது.''

"அதிகாரிகளுக்கு விழிப்புணர்வு ஊட்டும் வகையில் எங்கள் சோதனை அமைகிறது."


ம.தி.மு.க.வுக்கு ஆபத்தா?

''இனி எதிர்க் கருத்துக்கள் சொல்லி யாரையும் புண்படுத்த மாட்டேன்'' என்று சொல்லியிருக்கிறாரே கருணாநிதி!

உ.ரா.வரதராஜன் (மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தேசியக்குழு உறுப்பினர்): ''தீக்கதிர்' பத்திரிகையில் எனது கடிதமும், கட்டுரையும் கட்சி மாற்சர்யங்களைக் கடந்து, தமிழக அரசியல் மேடைகளில் கண்ணியம் காக்கப்படவேண்டும் என்ற உள்ளார்ந்த உணர்வோடு எழுதப்பட்டவை. அதில் கலைஞரையும் தி.மு.க.வையும் மட்டும் நான் விமர்சிக்கவில்லை. வைகோவின்


உ.ரா.வரதராஜன்

"முதல்வரின் இந்த நிலைப்பாடு தொடர வேண்டும்."



* டி.கே.எஸ். இளங்கோவன்

பேச்சையும், விஜயகாந்த் பற்றிய ஜெயலலிதாவின் விமர்சனத்தையும் எடுத்துக் காட்டி இவை தவிர்க்கப்படவேண்டும் என்றும் சொல்லியிருந்தேன். இப்படி நான் சொன்னதைக் கண்டித்து முரசொலியில்கூட பெட்டிச் செய்தி, கட்டுரைகள் போட்டார்கள். ஆனால், இப்போது என் கடிதம், உரிய பலனைக் கொடுத்திருக்கிறது. முதல்வரின் இந்த நிலைப்பாடு தொடர வேண்டும்.''

"அண்ணாவின் செயல்திட்டம்... கலைஞரின் ஆட்சி..!"

அண்ணா நூற்றாண்டு விழாவில் தம் புகழைப் பாடச் செய்கிறாரா கருணாநிதி?

டி.கே.எஸ். இளங்கோவன் (தி.மு.க. அமைப்புச் செயலாளர்)

''அண்ணா காலமாகி நாற்பது ஆண்டுகள் முடிந்துவிட்டன. அண்ணாவைப் பார்க்காத ஒரு தலைமுறை உருவாகி விட்டது. அண்ணா நீண்ட ஆயுளுடன் முதல்வராக நீடித்திருந்தால், தமிழ் நாட்டில் அவர் செய்ய நினைத்திருந்த பணிகளை அவரே செய்து முடித்திருப்பார். இப்போது அவரது கனவுகளைச் செயல்படுத்தி வருகிறார் முதல்வர் கலைஞர். அண்ணா நூற்றாண்டு விழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாட முழுத் தகுதியும், வாய்ப்பும் பெற்றிருக்கிறார் கலைஞர். அந்த வகையில் விழாவில் கலைஞர் ஆட்சிக் காலங்களில் செய்துள்ள சாதனைகளைச் சொல்லாமல் இருக்க முடியாது. ஏனென்றால் அவை அண்ணாவின் செயல் திட்டங்கள். இதற்காக, 'கலைஞரைப் புகழ்ந்து பேசுகிறார்கள்' என்று சொல்வது வம்புக் கிழுக்கும் வேலை.''

தொழிற்சங்கத் தகராறு, தனியார் நிறுவன மனிதவள மேம்பாடு அதிகாரி கொலையில் முடிந்திருக்கிறதே?

மகேந்திரன் (இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் துணைச் செயலாளர்):

''கொலை செய்யத் துணிந்தவர்களை வன்மையாகக் கண்டிக்கிறேன். இது ஓர் ஆரோக்கியமான போக்கும் அல்ல; தொழிற்சங்க வரலாற்றில் கொலைகளும், ரத்தம் சிந்துதலும் தவிர்க்கப்படவேண்டும். இது போன்ற செயல்கள் தொழிலாளர்களின் நியாயமான போராட்டத்தைக்கூட முனை மழுங்கச் செய்து எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தும். தொழிலாளர்களுக்குத் தீமை பயக்கும் செயல் இது. தொழிலாளர்கள் தங்கள் போராட்டங்களை எந்த வகையில் எடுத்துக் கொண்டு போக வேண்டும் என்ற தெளிவை உண்டாக்கும் பணியை இனி நாங்கள் தீவிரமாகச் செய்வோம்.''

"நியாயமான போராட்டம் முனை மழுங்கும்!"



* மகேந்திரன்

- ப்ரியன்


அறிமுகப்படுத்துகிறோம்
தெய்வ வழிபாடு தீபத்தின் துணையோடு.
நலம் சேர்க்கும் உங்களின் தெய்வ வழிபாடுகள் தீபம் விளக்கு எண்ணெய்யால் மேலும் பிரகாசிக்கட்டும். உள்ளத்தில் அமைதியும் இல்லத்தில் நறுமணமும் நிறையட்டும். உங்கள் மகிழ்ச்சி நிறைவாய் நீடித்து மென்மேலும் பெருகட்டும்.
தீபம் விளக்கு எண்ணெய்
DHEEPAM
Lamp Oil
Also available in 1ltr, 500ml, 250ml pet bottles, Rs. 3/- Pack
KALEESUWARI
REFINERY PRIVATE LIMITED
Customer Care : 044 - 6450 2413
DHEEPAM
Lamp Oil
தீபம்
தெய்வீக அனுபவம் என்றென்றும்

❖ மழையின்
ஈரத்தை தண்ணீரின்
தாய்மை என்பர் கவிஞர் குழாம்.
அந்த ஈரமே களத்தில் இறங்கி மனிதர்களைக் காவு வாங்கினால் என்னவாகும் என்பதுதான் ஈரம் படத்தின் ஹைலைட். அதில் காதலையும் த்ரில்லையும் புகுத்தி கதையை வலுவேற்றியிருக்கிறார் புதுமுக இயக்குநர் அறிவழகன்.

❖ மிருகம் படத்தின் ஆதிதான் ஹீரோ. மனிதருக்கு இன்ஸ்பெக்டர் ரோலைவிட காதல் ரோல் கனகச்சிதமாகப் பொருந்துகிறது. காக்கியில் விறைப்பும், காதலில் குழைவும் என மாறி மாறி ஆச்சர்யப்படுத்துகிறார்.

❖ சிந்துமேனன், சின்னச் சின்ன மேனரிசங்களில் சிந்தை கவர்கிறார். அய்யர் ஆத்துப் பொண்ணாக அவர் வரும் ஸீன் ஒவ்வொன்றும் கவிதை.

❖ ஓர் இடத்தில்கூட பேயைக் காட்டாமல் ஈரத்தின் மூலம் திரைக்கதையை நகர்த்தி முதுகுத்தண்டை ஜில்லிட வைக்கிறார் இயக்குநர்.

❖ மனோஜ் பரஹம்சாவின் கேமராதான் படத்துக்கு மிகப் பெரிய ப்ளஸ். அதுவும் ஆக்ரோஷமாகவும், அமைதியாகவும் நகரும் தண்ணீர்க் காட்சிகளில் கேமரா ஒரு கேரக்டராகவே மாறிவிடுகிறது.

❖ இருந்தும் இரண்டாம் பாதி கொஞ்சம் இழுவை. சிந்துமேனன் ஆவிதான் கொலைக்குக் காரணம் எனத் தெரிந்தவுடன் படம் முடிந்து விடுகிறது. ஆனால், ஹீரோ ஜெயிக்க வேண்டுமென கோடம்பாக்க ஃபார்முலாவுக்குள் விழுந்துவிடுகிறார் இயக்குநர்.

❖ பின்னணி இசையில் பின்னி எடுத்த தமன், பாடல்களில் ஏன் தயக்கம் காட்டினார்?

❖ ஈரம் - திரவத் தீ

ஈரம்







உன்னைப் போல் ஒருவன்

● பயங்கரவாதத்துக்கு அதைக் காட்டிலும் மேலதிக பயங்கரவாதமே தீர்வு[?] என்று சொல்லும் கமலின் படம்தான் உன்னைப் போல் ஒருவன்.

● தனி ஒரு ஆள் கட்டி முடிக்கப்படாத கட்டடத்தின் மொட்டை மாடியில் உட்கார்ந்து கொண்டு போலீஸ் டிபார்ட்மெண்ட்டையே ஆட்டிப் படைப்பது தமிழுக்குப் புதுசு என்றாலும் கொஞ்சம் கிக்லிபிக்லிதனமாக இருக்கிறது. எனினும், அந்த ஆள் கமல் என்பதால் அவர் கேரக்டரோடு மனம் ஒன்றி விடுவதை மறுப்பதற்கில்லை.

● மிடுக்கான தோற்றத்தில் வெடுக் வெடுக்கெனப் பேசும் மோகன்லால், காக்கிச் சட்டையில் செம விறைப்பு எனினும் அவர் தலைமைச் செயலருக்குக் கட்டளை இடுவது போலப் பேசுவதும் அதற்கு அவர் தலையசைப்பதும் கொஞ்சம் ஓவராத்தான் இருக்கு.

● காவல் துறையின் நடவடிக்கையை உடனுக்குடன் அறிய டீ.வி. ரிப்போர்ட்டரைக் களத்தில் இறக்கி விட்டுக் காய் நகர்த்துவது திரைக்கதையில் கச்சிதம்.

● கணேஷ், பரத்ரெட்டி இருவரும் போலீஸ் உடையில் அநியாயத்துக்கு விறைப்பு. அப்ளாஸுக்குப் பொறுப்பு.

● பாம் வைத்த கமலே, அதை எப்படிச் செயலிழக்க வைப்பது என பாம் ஸ்குவார்டுக்குப் பாடம் நடத்துவது கெக்கே பிக்கே.

● முக்கியமான ஸீனில் எல்லாம் பக்கம் பக்கமாக வசனம் பேசி கொஞ்சம் குழப்பித் தெளிய வைப்பது போலத் திணறடிப்பது கமலுக்கே உரிய கலை. இதிலும் தொடர் கிறது. உஸ் அப்பாடா...!

● தீவிரவாதிகளைக் கொலை செய்வதற்காக, கமல் சொல்லும் காரணங் களும் ஏற்புடையதாக இல்லை!

● மும்பை குண்டுவெடிப்புப் பிரச்னை களோடு நம்மூர்ப் பிரச்னைகளை முடிச்சுப் போட்டு முடிந்தவரை ப்ரைன் வாஷ் பண்ணு கிறார் கமல்! ரசிகர்கள் ஜாக்கிரதை.

● தன்னை முன்னிறுத்திக் கொள்ளாத கதையில் நடித்த கமலுக்குப் பூங்கொத்து.

- கபிலன்



"காங்கிரஸை விட்டு நான் விலகிய நேரத்தில் 'இனி நான் அரசியல் களத்தில் இறங்க மாட்டேன்' என்று சொல்லியிருந்தேன். இப்போது புதிய இயக்கம் தொடங்கப் போவதாகக் கேள்விப்பட்டதும் பலருக்குச் சந்தேகம். காந்திய அரசியல் இயக்கத்தின் பெயரில்தான் 'அரசியல்' இருக்கிறதே தவிர, இது ஓர் அரசியல் கட்சியல்ல. மதுவிலக்கு, தீண்டாமை, கதர், கிராமத் தொழில், சுதேசி பொருளாதாரம் போன்றவற்றைப் பேசுவதால் மட்டும்தான் காந்தியத்தை மக்களிடையே கொண்டு செல்ல முடியும் என்று நம்பி நடந்தார்கள், நமது சென்ற தலைமுறைத் தலைவர்கள். ஆனால், காந்திய அரசியல் என்னவென்பதை இளைய தலைமுறைக்குச் சொல்லத் தவறிவிட்டார்கள். அவர்கள் செய்த

பஞ்சாயத்துக்குப்

- தமிழருவி

"காந்திய அரசியல் இயக்கத்தில் பதவி ஆசை உள்ளவர்களுக்கு இடமே இல்லை!"

நாற்பது ஆண்டு கால பொது வாழ்க்கைக்குச் சொந்தக்காரர் தமிழருவி மணியன். மாசுபட்டுப் போன கட்சி அரசியலைக் கண்டு ஒதுங்கியவர் 'காந்திய அரசியல் இயக்கம்' என்ற அமைப்பைத் தொடங்கியிருக்கிறார். புது இயக்கம் ஆரம்பிக்க அப்படி என்ன அவசியம் வந்தது...? அவரே சொல்கிறார்...

தவறை நான் செய்ய விரும்பவில்லை. அரசியலைத் தூய்மைப்படுத்தாத வெறும் சமூக நிர்மாணத்திட்டங்களை மட்டும் முன்னிலைப்படுத்துவது காந்திய அணுகுமுறை அல்ல. நாம் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும், அரசியல் பாம்பு நம்மைத் தீண்டாமல் விடுவதில்லை. அரசின் விதியை எழுதுவது அரசியல்வாதிகள். அவர்களிடம் நேர்மை, நாணயம், நல்லொழுக்கம், தன்னிலமற்ற மக்கள்

பத்து பேர்!

மணியனின் புது இயக்கம்!

சமூகத்துக்குக் கொடுப்பார்களே தவிர சமூகத்திலிருந்து எதையும் எடுத்துக்கொள்ள விரும்ப மாட்டார்கள். சமூக நலனைக் கெடுக்கும் நலச் செயல்பாடுகள் ஆகியவை வேண்டும் என்பதுதான் காந்திய அரசியல் பார்வை.''

கொள்கைகள்...?

''பொது வாழ்க்கையில் சத்தியம், நேர்மை, நாணயம், கண்ணியம் ஆகியவற்றை மீண்டும் கொண்டு சேர்ப்பது, பண நாட்டமும், பதவி மோகமும் இல்லாதவங்களுக்கே இந்த இயக்கத்தில் இடம் உண்டு. இதில் இருப்பவர்கள் தங்கவிடமிருந்து நடவடிக்கைகள், நுகர்வெறி கலாசாரம் ஆகியவற்றை எதிர்த்துக் கடுமையாகப் போராடுவோம். தேர்தல் அரசியல் குறித்த விழிப்புணர்வு, மதுவிலக்குக்காகப் போராடுவது, பெண்களுக்கு அரசியல் விழிப்புணர்வு ஊட்டுவது என்பன செயல் திட்டங்கள்.''

ஆள் பலம்?

''தமிழ்நாட்டில் 12600 பஞ்சாயத்துக்கள். பஞ்சாயத்துக்குப்

பத்து பேர் போதும். இந்தப் பத்து பேரும் மக்கள் நலனுக்காக நேரத்தை அர்ப்பணிக்கும் அதே சமயத்தில் ஒழுக்கம் சார்ந்து, கறைபடியாதவர்களாக இருப்பார்கள். அப்படிப்பட்ட பத்துப் பேரைக் கண்டுபிடிப்போம். இவர்கள் மற்ற கட்சிகளில் இருக்கக் கூடாது; இருந்திருக்கக் கூடாது. அடுத்த காந்தி ஜெயந்திக்குள் ஒன்றரை லட்சம் பேர் தயாராகி விடுவார்கள். வட்ட, நகர, ஒன்றிய, மாவட்ட அளவில் பொறுப்பாளர்கள் உண்டு. இது ஒரு கட்டுக்கோப்பான, தீவிர அகிம்சையைக் கடைப்பிடிக்கும் இயக்கமாக



✱ மாடல் புகைப்படம்

"தலைக்கு ஒரு ரூபாய் கொடுங்க போதும்!"

இருக்கும். எங்களுக்கு வேறெந்தக் கட்சியோ அல்லது அரசியல்வாதிகளோ எதிரியல்ல!''

தேர்தலில் ஆதரிப்பது; எதிர்ப்பது போன்ற நிலைகள் இருக்குமா?

''காந்தியக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் எவரையும் இயல்பாகவே ஆதரிப்போம். அதற்கு மாறாக ஈடுபடும் கட்சிகளையும், நபர்களையும் கடுமையாக எதிர்ப்போம்.''

தேர்தல் ஜனநாயகத்தில் கரன்ஸியை ஒழிப்பீர்களா?

''திருமங்கலம் மற்றும் கடந்த இடைத்தேர்தல்களில் கடைப்பிடிக்கப்பட்ட ஆளும்கட்சியின் நடைமுறைகள் ஜனநாயகத்தின் ஆணிவேரையே அறுத்துவிட்டன. ஒரு கட்சியின் வெற்றியை கரன்ஸியும் டாஸ்மாக்கும் தீர்மானிக்க முடியும் என்றால் அது மக்களை அவமானப்படுத்தும் அவச்செயல் இல்லையா? தேர்தல் அரசியல் குறித்த விழிப்புணர்வைக் கொண்டு வருவது எங்கள் முக்கியப் பணி.''

இயக்கம் நடத்தப் பணம்?

''என்னிடம் பணம், பதவி, அதிகாரம் எதுவுமில்லை. ஆனால், என் நெறி சார்ந்த வாழ்க்கையில், மிகுந்த நம்பிக்கை, மதிப்பு கொண்ட மனிதர்கள் மாநிலம் முழுதும் இருக்கிறார்கள். அவர்கள் இயக்கம் வளர பின்பலமாக இருப்பார்கள். இது தவிர, இந்த உன்னதப் பணியில் எல்லோரது பங்கும் இருக்க வேண்டுமென்பதற்காக, தலைக்கு ஒரு ரூபாய் கொடுங்கள் என்று கேட்டிருக்கிறோம்.''

எதிர்காலம்?

''நிச்சயமாக ஆட்சியில் அமரவோ சட்டமன்றத்தில் நுழையவோ திட்டம் இல்லை. அந்த எண்ணத்துடன் வருவோருக்கு எங்கள் இயக்கத்தில் இடமும் இல்லை.''

- ப்ரியன்

வட்டமேஜை

✉ நீதிபதி தினகரன் விவகாரம் சம்மந்தமான கார்ட்டூன், இன்றைய நீதித்துறையின் நிலைமையை வெளிப்படுத்துகிறது. - **வி.ஜி.சத்தியநாராயணன், சென்னை - 51** ✉ பத்தே வாரங்களில் முடிந்து 'முற்றும்' போடப்பட்டபோதும், டால்மியாபுரம் கணேசனின் சங்கராபுரம் **கல்கி** வாசக நெஞ்சங்களில் பக்தியையும் தத்துவ விசாரங்களையும், மானுடநெறிகளையும் பக்குவமாய்ப் பதிந்து பண்பட வைத்தது!- **சாந்திசுந்தர், நெய்வேலி -3** ✉ இறையுணர்வுச் சிறப்பிதழ் படிக்க மனத்துக்கு நிறைவு தருகிறது! - **எஸ். பங்கஜம், சென்னை - 88** ✉ நீதித்துறைக்கே சோதனை ஏற்பட்டுவிட்ட அபாயத்தைச் சுட்டிக்காட்டிய தலையங்கம், சரியான எச்சரிக்கை மணி! - **புலவர் எஸ்.கே. மூர்த்தி, கும்பகோணம்** ✉ இஸ்லாமியர் செதுக்கும் தேர்' கட்டுரை, செய்யும் தொழிலே தெய்வம் என்று நினைப்பவர்களுக்கு மதங்களும், தெய்வங்களும் ஒரு பொருட்டல்ல என்பதை உணர்த்தியது. - **இரா.முனீஸ்வரசர்மா, கூத்தப்பாக்கம்** ✉ 'சுண்டல், கிண்டல், தண்டல் - ஆஹா எதுகை, மோனையில் எங்க டி..ஆரையே, தராசு மிஞ்சிடுவார் போலிருக்கிறதே ! - **சி. விஜயாம்பாள், கட்டிகானப்பள்ளி** ✉ இலங்கை அசோகவனமான நுவரேலியா பற்றிப் படித்ததும் இராமரையும், சீதையையும் நேரில் பார்த்த பரவசத்தைத் தந்தது. இறையுணர்வு சிறப்பிதழ் வாழ்க!- **உமா மோகன்தாஸ், திண்டுக்கல் - 1** ✉ இறை உணர்வு என்பது வேறு; மதம் என்பது வேறு; பகுத்தறிவு என்பது வேறு... என்ற கல்கி ராஜேந்திரனின் வரிகள் மனத்தில் பதிக்க வேண்டியவை. - **ஏ.பி.எஸ். ரவீந்திரன், நாகர்கோவில்** ✉ விஜயகாந்த் பேட்டியில், 'தனித்துத்தான் இயங்குவேன்' என்ற அவரது தைரியத்தைப் பாராட்டியே யாக வேண்டும். -**எம்.மிக்கேல்ராஜ், சாத்தூர்** ✉ விலை பேசியவர்களின் விவரத்தை வெளிப்படையாக வெளியிட்டிருக்கலாமே விஜயகாந்த்? மறைக்க வேண்டிய அவசியம் என்ன? - **லோ. மோகனசுந்தரிகோபி, கிருஷ்ணகிரி - 1**

துப்பறிய வாங்க போட்டி - 13 முடிவு

சரியான விடையை எழுதியவர்களுள் குலுக்கல் மூலம் தலா ரூ.200/- பரிசு பெறுவோர்:

1. **ஸ்ரீ. சத்யபாமா, சென்னை - 45**
2. **எம். மீராபாய், தஞ்சாவூர்**
3. **சி. கலைவாணி, வேலூர்**
4. **எம். சுரேந்தர், திண்டுக்கல்**
5. **வி. வேதவல்லி, சென்னை - 94**





கல்கி



2009 அக்டோபர் 11
விரோதி புரட்டாசி 25
மலர் : 68
இதழ் : 11

தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - பாரதியார்


தழைக்கும் வன்முறை; பெருகும் குற்றங்கள்!

சென்னை அசோக் நகரில் பட்டப்பகலில் ஒரு தாயும் மகனும் கொலை செய்யப்பட்டிருப்பது அதிர்ச்சியுடன் வேதனையையும் அச்சத்தையும் ஏற்படுத்துகிறது. கொலைக்கான காரணம் எதுவாயினும் சரி, தலைநகரின் பாதுகாப்பின்மைக்கான பொறுப்பை அரசுதான் ஏற்றாக வேண்டும். நீலாங்கரை இரட்டைக் கொலை, மாதவரம் நகராட்சி முன்னாள் தலைவர் வீரமணி (அ.தி.மு.க.) வெட்டிக் கொலை என்று விதவிதமான கொலைக் குற்றங்கள் தினசரி நிகழ்வுகளாகிவிட்டன.

ஒருபுறம், 'மாநில டி.ஜி.பி.க்களுக்குக் கூடுதல் அதிகாரம் கொடுங்கள்' என்று மத்திய அரசு சுற்றறிக்கை அனுப்புகிறது. இன்னொரு பக்கத்தில், அண்ணா நூற்றாண்டு கொண்டாட்டங்களின் ஓர் அங்கமாக கோவை குண்டுவெடிப்புச் சம்பவக் குற்றவாளிகள் விடுதலையாகிறார்கள்! காவல்துறையின் சுதந்திர இயக்கத்துக்கு அரசியல் இடையூறு மிகப்பெரிய தடையாக இருக்கிறது என்பதற்கு இதைக்காட்டிலும் சான்று தேவையில்லை!

நன்னடத்தையின் பயனாக சராசரி குற்றவாளிகளை விடுதலை செய்வதென்பது வேறு. திட்டமிட்டுக் கொலை புரிந்து தேசிய ஒருமைப்பாட்டுக்கும் அமைதிக்கும் கேடிழைத்த கொடிய குற்றவாளிகளுக்குத் தண்டனைக் குறைப்பு அல்லது ரத்து என்பது வேறு. ஆனால், அரசியல் நோக்கில் பின்னதை முன்னதுபோல பாவித்து ஆதாயம் தேடுவது நடைமுறையாகிவிட்டது. இது கண்டனத்துக் குரியது. ஆட்சியில் உள்ளவர்கள், தங்களுக்கு இவ்விஷயத்தில்





அளிக்கப்பட்டுள்ள சிறப்புரிமையை துஷ்பிரயோகம் செய்வதைக் காண்கையில், தேசிய / மாநிலக் கொண்டாட்டங்களின் ஓர் அங்கமாக கைதிகளை விடுதலை செய்யும் நடைமுறையையே தடை செய்துவிடுவது நல்லது என்று தோன்றுகிறது.

தலைவர்கள் அரசியல் நோக்கில் செயல்பட்டு காவல்துறையின் செயல்பாட்டிலும் நீதி பரிபாலனத்திலும் தலையிடுவதால், காவல்துறையின் திண்மையும் வலிமையும் நீர்த்துப் போகின்றன. அத்துறையில் லஞ்ச-ஊழல் பெருகுகிறது. சமூக விரோதிகளுக்கோ எந்தத் தவறையும் இழைத்துவிட்டு லஞ்சம் கொடுத்தோ அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தியோ தப்பிவிடலாம் என்கிற மனோபாவம் வளர்கிறது. இந்தச் சூழ்நிலையில் கொலை, கொள்ளை போன்ற பல குற்றங்கள் பெருகுவதில் ஆச்சர்யம் என்ன?

போதாத குறைக்கு, மீடியா வேறு வன்முறையை அளவுகடந்து தினந்தோறும் காட்சிப் படுத்துகிறது. இதனால் சமுதாயத்தில் இருக்கும் கொஞ்ச-நஞ்சம் மெல்லுணர்வுகளும் மழுங்கடிக்கப்படுகின்றன. பிறர் வலியை உணர்வது குறைந்து, பிறருக்கு வலியும் கொடுமையும் இழைக்கும் போக்கு அதிகரிக்கிறது.

போலீஸார் அத்து மீறி நடந்துகொள்ளக்கூடாது என்பது ஒரு பக்கம் இருப்பினும் மறு பக்கத்தில் அரசு கறாராகவும் பொறுப்புடனும் நேர்மையுடனும் சட்ட - ஒழுங்கு பரிபாலனத்தை இரும்புக் கரம் கொண்டு செயல்படுத்துவது ஒன்றுதான் குற்றங்களைக் குறைக்கும். இதை அரசு நடைமுறைப்படுத்தாவிட்டால் அது இந்தச் சமுதாயத்துக்கே இழைக்கப்பட்ட துரோகம், அநீதி என்பதுடன், ஆட்சியாளர்களின் வீழ்ச்சிக்கே இப்போக்கு விரைவில் வழிவகுக்கும். ●

வின்ஸ்டன் சர்ச்சிலின் எண்பதாவது பிறந்த நாள் விழா நடந்துகொண்டிருந்தது. நிகழ்ச்சியைப் புகைப்படம் எடுக்க வந்திருந்த புகைப்படக் கலைஞர் ஒருவர் அவரிடம், ''இன்னும் இருபது வருடங்கள் கழிந்து உங்களின் நூறாவது பிறந்த தினத்தின்போது நான் உங்களைப் புகைப்படம் எடுக்கும் பாக்கியம் எனக்குக் கிட்டும் என்று நம்புகிறேன்'' என்றார்.

சர்ச்சில் சிரித்தபடி சொன்னார் : ''அதிலென்ன சந்தேகம்! நல்ல ஆரோக்கியத்துடனும். உடற்கட்டுடனும்தானே இருக்கிறாய்.''

ரீடர்ஸ் கார்னர்!



ஜப்பானின் இருண்ட காலம் அது. நகரத்தை எப்போதும் இல்லாத அளவு பெரும் பூகம்பம் உலுக்கியது. லட்சக் கணக்கான மக்கள் தங்கள் வீடுகளை இழந்தனர். பஞ்சம் பசி, பட்டினி தலைவிரித்தாடியது. அமைதி குலைந்து ஒழுங்கான முறையில் உணவு வழங்குதல், தேவையான மருத்துவ வசதிகள் செய்து தரல், வீடு இழந்து தவிப்பவர்களுக்குத் தங்க இடமும் மாற்று ஏற்பாடுகளும் செய்தல் போன்ற புனரமைப்புத் திட்டங்களைச் சரியான முறையில் நிர்வகிக்க, திறமையான செயல்களைச் செய்ய சரியான ஒருவர் வேண்டும் என ஜப்பானின் அப்போதைய அரசர் நினைத்தார். இத்தகைய திறமை உள்ள ஒரே நபர் 'ககாவா டோயோஷிகோ.'

துரதிர்ஷ்டவசமாக ககாவா அப்போது சிறையில் இருந்தார். அரசின் விசேஷ ஆணைப்படி அவர் சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டார்.

அவர் இந்தப் புனரமைப்புப் பணிக்கு ஒப்புக்கொண்டால், அவருக்கு அரசாங்கம் நிறைய சம்பளம், பெரிய வீடு, போக வர கார் மற்றும் வேண்டிய வசதிகள் என யாவும் தரத் தயாராக இருந்தது.

ககாவா ஒரு சமூக சீர்திருத்தவாதி தலைவர். ஏழைகளை மிகவும் நேசிப்பவர். அவர் சொன்னார்:

''இந்தப் பெரிய பொறுப்பை ஏற்பதில் எனக்கு மகிழ்ச்சியே! ஆனால், எனக்குச் சம்பளமோ, வேறு வசதிகளோ வேண்டாம். ஏழைகளுக்குப் பணிபுரிய நான் ஏழையாகவே இருக்க விரும்புகிறேன்.''

- ஜி.லக்ஷ்மிபதி,
சென்னை

"போன வருஷம் உங்ககிட்ட வாங்கின வெடி ஒண்ணுகூட வெடிக்கல!"
"அது சத்தத்தை விரும்பாதவங்களுக்காகத் தயாரிச்சது!"



"தலைவருக்கு இவ்வளவு பந்தா கூடாது!"
"என்ன விஷயம்?"
"ஏ.டி.எம். கவுண்டருக்குள்ள அவரோட சிலைய வைக்கணுமாம்!"



சத்தமில்லா சைலண்ட் பாம்

சிரிப்பு : அம்பை தேவா



"தீபாவளிக்கு ஐஸ்கீரிம் செய்யப் போறீங்களே, ஏன்?"
"நீதானே சொன்னே... எது செஞ்சாலும் வாயில போட்டா கரையணும்னு!"



"இந்த ஜவுளிக்கடை ரொம்ப மோசம்..."
"என்ன விஷயம்?"
"எந்தப் புடைவையை விரிச்சுக் காண்பிச்சாலும் அதை நம்மையே மடிச்சுத் தரச் சொல்றாங்க!"

"தகவல் தொழில்நுட்பப் பிரிவு இந்தியர்களின் வேலைவாய்ப்பு அதிகரிப்பில் ஒரு பெரிய புரட்சியையே உருவாக்கிவிட்டு இப்போது கொஞ்சம் ஓய்ந்திருக்கிறது. இந்த நிலையில் 'வருங்காலத்தில் வேலை வாய்ப்புகள் கொட்டிக் கிடக்கும் பிரிவாக இருக்கப்போவது மின்நிலையங்கள்தான்'' என்கிறார் ஜி.டி.ஷர்மா. டாடா கல்வி மையத்தின் மேலாண்மைப் பட்ட மேற்படிப்பில் தங்கப் பதக்கம் பெற்ற ஷர்மா, பி.ஜி.ஆர். எனர்ஜி சிஸ்டம்ஸ் எனும் நிறுவனத்தில் மனித வளப்பிரிவின் தலைவராக இருக்கிறார். அவரோடு பேசியதில் சில துளிகள்...

உங்கள் நிறுவனத்தைப் பற்றிச் சொல்லுங்களேன்?

''அனல் மின் நிலையங்களில் மூன்று பரிணாமங்கள் உண்டு. 'E.P.C.' எனப்படும் இவை வடிவம் (Engineering), தேவைப்படும் பொருட்களை ஒருங்கிணைத்தல் (Procurement) மற்றும் கட்டுமானம் (construction) என்று வரிசைப்படுத்தப்படுகின்றன. ஒரு மின்நிலையத்துக்கு டர்பைன் மற்றும் பாய்லர் மிக முக்கியம். நிலையத்தில் மீதி எல்லாவற்றையும் Balance of Plant (BOP) என்போம். இதில் எங்கள் நிறுவனம்தான் முன்னணியில் உள்ளது. கூடிய விரைவில் பாய்லர், டர்பைன் வடிவமைத்தல் மற்றும் உற்பத்தியிலும் தடம் பதிக்க உள்ளோம்.''

"இந்தியாவில் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்துக்கு மின்சாரம் செல்லும்போது நாற்பது சதவிகிதம் வீணாகிறது!"

இந்தியாவில் மின் வெட்டைச் சமாளிக்க மின் நிலையங்கள் என்ன செய்ய வேண்டும்?

''உலக அளவில் சராசரி மனிதனின் மின்சார பயன்பாடு 3000 கிலோவாட். ஆனால் ஒரு சராசரி இந்தியன் பயன்படுத்தும் மின்சாரம் 735 கிலோவாட் மட்டுமே. ஃபிரான்ஸ், ஜெர்மனி ஆகிய முன்னேறிய நாடுகளில் தனி மனிதப் பயன்பாடு 10000 கிலோவாட்டாக உள்ளது. இதெல்லாம் இப்போதைய நிலை.

இந்தியாவின் இப்போதைய மின்சாரத் தேவையே 125 கிகாவாட் (ஒரு கிகாவாட் என்பது ஆயிரம் மெகாவாட்டாகும்). இன்னும் பத்து வருடங்களில் இது இரண்டு மடங்கு அதிகமாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் தேவைக்கேற்ப உற்பத்தியைப் பெருக்க, மாற்றுமுறைகளையும் மேற்கொள்ள வேண்டும். உதாரணத்துக்கு கரும்பாலை கழி



வான பகாஸேவைக் கொண்டு மின்சாரம் தயாரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.''

சூரிய சக்தி, அணுசக்தி போன்றவை இருந்தும் எதனால் நாம் அதிக அளவில் அனல் மின்நிலையங்கள் பற்றியே பேசுகிறோம்?

''நம்மிடம் உள்ள நிலக்கரி இன்னும் 25-30 வருடங்களுக்கு வரும். மற்றவற்றைவிட நிலக்கரியிலிருந்து கிடைக்கும் வெப்பம் (Calorific Value) அதிகம். அதற்காகப் பிற சக்திகளைக் குறைத்து எடைபோடக்கூடாது. முக்கியமாக சூரிய சக்தி எல்லையற்றது. சீனாவில், சில பிரதான நகரங்களின் முக்கிய சாலைகளில், விளக்குகள் சூரிய சக்தியைக் கொண்டுதான் எரிகின்றன. பகலில் சூரிய சக்தியைச் சேமித்து வைத்துக் கொண்டு இரவில் மின்சாரம் அளிக்கிறார்கள். சூரிய மின் நிலையங்களை அமைக்க எக்கச்சக்கச் செலவு பிடிக்கும் என்பதால், நம் நாட்டில் இதற்கான முதலீடு செய்யத் தயக்கம் இருக்கிறது. ஆனால் அதற்குப் பிறகு மிகக் குறைவான செலவில் மின்சாரம் தயாரிக்க முடியும்.

காற்றின் மூலம் மின்சக்தி பெறுவது ஏறக்குறைய முழு



''பலனுண்டு 'பவர் டெக்'னாலே!''

— ஜி.டி.ஷர்மா

மையான அளவு நம் நாட்டில் நடந்து விட்டதாகவே கொள்ளலாம். காற்றின் மூலம் மின்சாரத் தயாரிப்பில் உலக அளவில் இந்தியா ஐந்தாமிடத்தில் உள்ளது.''

மின்சாரத்தை ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்துக்குக் கொண்டு செல்லும் போது நிறைய மின்சக்தி விரயமாகிறதே...

''உண்மை. சுமார் நாற்பது சதவிகிதம் மின்சாரம் இப்படி இந்தியாவில் வீணாக்கப்படுகிறது. Transmission and Distribution Loss எனப்படும் இதை சுருக்கமாக T & D என்போம். இதைக் கிண்டலாக Theft and Dacoity *(கொள்ளை, வழிப்பறி)* என்றும் எங்கள் வட்டத்தில் குறிப்பிடுவதுண்டு. தெரு ஓரமாகத் தண்ணீர் பைப்புகள் போட்டிருப்பார்கள். ஆனால், நடுநடுவே அதிலிருந்து தண்ணீர் பிடித்துக் கொள்வார்கள் இல்லையா, அது போலத்தான் மின்கசிவும் மின்திருட்டும். மின்கசிவுகளைக் கண்டுபிடிக்க மேலும் சிறப்பான மின்னணு இயந்திரங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. ''



''காற்றின் மூலம் மின்சாரம் தயாரிப்பதில் இந்தியா. உலகிலேயே ஐந்தாவது இடத்தில் இருக்கிறது!''

இந்தத் துறையில் வேலைவாய்ப்பு...?

''ஒரு மின்நிலையம் கட்ட சிவில், மெக்கானிக்கல், எலக்ட்ரிக்கல், எலட்ரானிக்ஸ் போன்ற பொறியியல் துறைகளைச் சேர்ந்தவர்கள் தேவைப்படுவார்கள். கூடவே தொழில்நுட்ப அடிப்படை இல்லாத நிதி மேலாண்மை, தர ஆய்வு, மனிதவள மேலாண்மை, சட்டம், வரி, நிர்வாகம் போன்றவற்றிலும் எக்கச்சக்கமாகத் தேவைப்படுவார்கள். ஐ.டி.ஐ. படிப்பிலிருந்து ஆராய்ச்சிப் படிப்பு வரை படித்த பலரும் தேவைப்படுவார்கள். அனல் மின்நிலையத்துறையில் மட்டுமே 140 நிலையங்கள் கட்டத் திட்டமிட்டிருக்கிறார்கள். அடுத்த பத்து வருடங்களில் மின்சாரத் தேவை முழுவதையுமே பூர்த்தி செய்துவிடமுடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

மின்நிலையங்களை உள்ளடக்கிய உள்கட்டமைப்புப் பிரிவில் (Infrastructure sector) சுமார் 24 லட்சம்கோடி ரூபாய் செலவழிக்கப்பட உள்ளது. இதன் மூலம் நேரடியாக ஆறு கோடி மக்களுக்கும், மறைமுகமாக எட்டு கோடி மக்களுக்கும் வேலைவாய்ப்பு கிடைக்கும். சமீபகாலமாக இந்தியாவை உலக அரங்கில் முன்னணியில் வைத்திருந்தது தகவல் தொழில்நுட்பப் பிரிவுதான். எனினும் இப்போதிலிருந்து உள்கட்டமைப்புப் பிரிவுதான் நம் நாட்டின் முன்னேற்றத் துக்குப் பெருமளவில் உதவப்போகிறது. இந்தப் பிரிவுதான் நம் தேசத்தை உயர்ந்தெழ வைக்கப் போகிறது.''

- ஜி.எஸ்.எஸ்.



ஈரோடு மாவட்டம் தூக்கநாயக்கன் பாளையத்தில் மத்தாளக் கொம்பு என்றழைக்கப்படும் 500 ஆண்டுகள் பழைமையான நீரூற்று உள்ளது. இது தோன்றியதிலிருந்து இதுவரை வற்றியதில்லை என்று சொல்லப்படுகிறது. சுற்றிலும் பச்சைப்பசேலென வயல்களுக்கு மத்தியில் விநாயகர் கோயிலுக்குப் பக்கத்திலேயே இந்த நீரூற்று அமைந்திருக்கிறது. புனித நீரூற்று மாசுபடக் கூடாது என்பதற்காக நீரூற்றுக்குள் எவரும் காலணிகளுடன் இறங்குவதில்லை. சோப்பு, ஷாம்பூ போட்டுக் குளிப்பதில்லை. ஸ்படிகத் தூய்மையுடன் மின்னுகிறது ஊற்று நீர். இந்நீரூற்றில் குளித்தாலோ, நீரைக் குடித்தாலோ சளி போன்ற தொந்தரவுகள் வருவதில்லை என்று சொல்கிறார்கள். கோடைக்காலங்களில் குளிர்ச்சியாகவும், குளிர்காலங்களில் வெதுவெதுப்பாகவும் காணப்படும் இந்நீரின் தட்பவெப்ப நிலை மற்றுமொரு சிறப்பு.

- கி.ச.திலீபன்

இந்திய கிரிக்கெட் அணியின் கேப்டனாக இருப்பதன் வசதிகள் தனி. ஆனால், அணி மோசமாக ஆடுகிறபோது அதுவரை அனுபவித்த சுகங்கள் எதுவும் துணைக்கு வராது. தலையைக் காவு கொடுக்க வேண்டியிருக்கும். அப்படியொரு பரிதாப நிலையில் சிக்கிக் கொண்டுள்ளார் தோனி.

தொட்டதெல்லாம் பொன்னாகும் தோனிக்கு தென் ஆப்பிரிக்காவில் நிறைய சிக்கல்கள். சாம்பியன்ஷிப் டிராஃபியில் இந்தியப் பந்து வீச்சாளர்களைச் சுளுக்கு எடுத்துவிட்டார்கள். பேட்ஸ்மேன்கள் பிட்ச்சுக்கு நடுவே அங்குமிங்கும் ஓடி, ரன் அவுட் ஆனார்கள். ரன்களைத் தடுத்து நிறுத்த, சரியான இடத்தில் ஃபீல்டர்களைப் பொருத்த மிகவும் தடுமாறினார் தோனி. கூலிங்கிளாஸ் அவர் கண்களின் பதற்றத்தை மறைத்தாலும் உடல்மொழி காட்டிக்கொடுத்துவிட்டது.

ஆஸ்திரேலியாவுடனான ஆட்டம் நடக்கும்போதே இந்திய டி.வி. சேனல்கள் கையில் கத்தியை வைத்துக்கொண்டு தோனியைக் கூறு போட்டுக்கொண்டிருந்தன. ஆட்டம் முடிந்தபிறகு விமர்சிப்போம் என்கிற அடிப்படைப் பண்பு, தொழில் நியாயம்கூட இல்லை. 'இரண்டு மாத ஓய்வு கிடைத்தபோதும் இஷாந்த் சர்மா நாலு நாள் தூங்காதவர்போல இருந்தார். ஹர்பஜனுக்குத் துணைத்தலைவர் பதவி கிடைக்காத கோபத்தில் மோசமாக ஆடினார் என்றும் அவர்மீது ஒரு சந்தேகக் கண். யூசுப் பதான் லாயக்கு ஆகமாட்டார். வீரத் கோலி தண்டம், ஆர்.பி. சிங்கை வெளியேற்றி விடலாம்' என்று ஒட்டுமொத்த அணியின் தலையையும் இப்போது உருண்டு கொண் டிருக்கிறது. ஆனால், நகைமுரண் என்னவென்றால் சேம்பியன் டிராஃபியின் முதல் வாரத்தில் இந்தியாதான் உலகின் நெ.1 அணியாக இருந்தது.

ஒரே போட்டியில் தோனியை ஒதுக்கிவிட வேண்டியதில்லை. கடந்த இரண்டு வருடத்தில் தோனி கொண்டு வந்த வெற்றிகள் எந்த ஒரு இந்திய கேப்டனும் சாதிக்காதவை. ஜாகிர் கான், ஷேவாக், யுவ்ராஜ் போன்ற பெரிய திறமைசாலிகள் இல்லாதபோது பயணம் சிக்கலாகத்தான் அமையும். தோனியை விலக்கிவிட்டு யோசித்தால், அவரவருக்குரிய பொறுப்பை யாரும் உணராததால், கடும் உழைப்பை வெளிப்படுத்தாததால் உண்டான ஏமாற்றம்தான் அத்தனையும்.

அடுத்ததாக ஏழு ஒருநாள் போட்டிகளில் ஆஸ்திரேலியாவுடன் ஆட இருக்கிறது இந்திய அணி. வேடிக்கை காத்திருக்கிறது!


செய்வார்
தோனி?
ச.ந.கண்ணன்



மதன்

* "என் தாய்மொழி தமிழ். படித்து வளர்ந்த தெல்லாம் சென்னைதான். இருந்தாலும் கன்னடத்தில் முன்னணி ஹீரோவான என்னால், தமிழில் அந்த இடத்தைப் பிடிக்க முடியவில்லை. அந்த வருத்தம் எனக்குள் ரொம்ப நாளாகவே இருக்கு. அதை என்னு டைய 'மதன்' படம் போக்கும் என்று நம்புகிறேன்" - இது ஹீரோ ஜெய் ஆகாஷின் ஸ்டேட்மெண்ட்.

* படத்தை இயக்குவதும் ஜெய் ஆகாஷ்தான். காரணம் கேட்டால், "எனக்கு என்ன கதை வேண்டும் என்பதை என்னைத் தவிர வேறு யார் சரியாகத் தீர்மானிக்க முடியும்? அதனால் நானே ஆக்ஷன், நானே டைரக்ஷன்" என்கிறார்

* அய்யாவுக்கு ரெண்டு ஹீரோயின்ஸ். ஒண்ணு கேரளத்துப் பட்டாசு, மற்றொன்று சுனேனா.

* "நான் படத்துல நடிக்கவே இல்லை. ஆரம்பத்துல நடிக்க ஒத்துக்கிட்டது உண்மைதான். ஆனா அப்புறம் விலகிட்டேன். என் ஸ்டில்ஸைப் படக்குழு பயன்படுத்தக் கூடாது"ன்னு முன்பு அலறிய சுனேனா பின்பு என்ன ஆனதுன்னு தெரியலை அடங்கிட்டார்.

* செட்டில்மெண்ட் செமயா இருக்குமோ என கோடம்பாக்கம் கிசுகிசுக்கிறது.

● "அரைமணி நேரத்துல கதையைச் சொல்லுங்க" என்று சொல்லிவிட்டு இரண்டு மணி நேரம் கதையைக் கேட்டிருக்கிறார் மீரா ஜாஸ்மின். கதையில் இம்ப்ரஸ் ஆன அவர் புதுமுகம் சஜனுடன் ஹீரோயினாக நடிக்கச் சம் மதம் தெரிவித்திருக்கிறார்.

● ஹீரோ சஜன் மென் பொருள் என்ஜினீயர். சினி மாவுக்காக கம்ப்யூட்டருக்கு இப்போது சுதம்சுதம்.

● 'செகண்ட் ஹீரோவாக வந்து காமெடியில் டரியல் ஆக்குகிறார் கருணாஸ். இவருக்கு ஜோடியாக வைஷ் ணவா காலேஜ் பொண்ணு இஷிதா களமிறக்கப்படுகிறார்.

● கருணாஸ், இஷிதா... இருவரும் 'கருப்பாயி கருப் பாயி எங்க போற...' என்ற பாடலுக்குப் போட்டிருக்கும் குத்தாட்டம்தான் இனி கோடம்

ஆதி நாராயணா



பாக்கத்தில் தேசிய கீதம் என்கிறது படக் குழு.

● கருப்பாயி பாடலைப் பாடியது தொழில் முறை பாடகரல்ல. சாட்சாத் லிட்டில் சூப்பர் ஸ்டார் சிலம்பரசன்தான்.

● இதற்கென எந்தச் சம்பளமும் பெற்றுக் கொள்ள வில்லை. கேட்டால், ''இசைக்காக, நட்புக்காக'' என்று டய லாக்கில் டச் செய்கிறார்.

● ''மீரா ஜாஸ்மின் நேரத்துக்குப் படப்பிடிப்புக்கு வராம இழுத்தடிப்பாங்கன்னு எல்லாரும் பயமுறுத்தினாங்க. அதிர்ஷ்டவசமா எங்களுக்கு அப்படி எதுவும் நடக்கலை. ஜாஸ்மின் உண்மையிலேயே குணத்துலயும் ஜாஸ்மின்தான்'' என்று புகழாரம் பாடுகிறார் இயக்குநர்.



★ க்ரைம் எழுத்தாளர் ராஜேஷ்குமாரின் 'இரவில் ஒரு வானவில்' நாவலின் திரைவடிவம்தான் அகராதி.

★ ராஜேஷ்குமாருக்கு கோடம்பாக்கத்தில் இது புதுப் பிரவேசம்.

★ ''என் கதையைத் திரையில் பார்க்கறபோது தோள்களின் ரெண்டு புறமும் இறக்கை முளைத்த உணர்வு. சினிமாவுக்குப் போனா கதையைச் சிதைச்சுடுவாங்கன்னு பயமுறுத்தினாங்க. ஆனா அப்படி எதுவும் நடக்கலை. என் கதையின் ஓட்டம் திரைக்கதையால் ஓர் அங்குலம்கூட பாதிக்கப்படவில்லை'' என்கிறார் ராஜேஷ்குமார்.

★ ''க்ரைம் சப்ஜெக்ட் நிறைய வந்தாலும், ரொம்ப மலினமா இருக்கு. காட்சிக்குக் காட்சி ரத்தம் ஓடிக்கிட்டே இருக்கு. என் படத்துல அப்படி இருக்காது. இதுல சூழ்நிலைதான் ரொம்ப க்ரைமா இருக்கும். குடும்பத்தோட பார்க்கலாம்'' என்கிறார் இயக்குநர்.

★ இம்சை அரசன் 23ம் புலிகேசி, அ ஆ இ ஈ படத்தின் நாயகி மோனிகாதான் இப்படத்தின் ஹீரோயின். அம்மணிக்கு போலீஸ் இன்ஃபார்மர் கேரக்டராம். 'சிலந்தி' போன்ற படங்களில் க்ளாமரா நடித்ததற்கு ரொம்பவும் வருந்துகிறார் அம்மணி.



★ தீபாவளிக்குப் பிறகு திரைக்கு வரலாம் அகராதி என்கிறது படப்பிடிப்புக்குழு.

★ அது சரி... அது என்ன இயக்குநர் ஸார் படத்துக்குப் பேர் அகராதி?

- கமலி

சென்னைவாசிகளுக்கும், சென்னை நேசிகளுக்கும் ரொம்பவும் பிடித்தமான ஒரு நபர் வி.ஸ்ரீராம். ஒவ்வொரு ஆண்டும், சென்னை வாரத்தை சென்னையின் பாரம்பரியத்தையும், வரலாற்றையும் போற்றும் வண்ணம் இவர் சென்னை வரலாற்றுச் சுற்றுலாவாக நடத்தும் விதம் அனைவராலும் பாராட்டப்பெற்று வருகிறது. கர்னாடக இசை தொடங்கி, சென்னையின் வரலாற்றை விளக்கும் விதத்தில் இவர் எழுதிய புத்தகங்கள் எல்லாமே மக்களிடம் அதீத வரவேற்பைப் பெற்றுள்ளன.

புத்தகம் படிக்கும் பழக்கம் இவருக்கு எப்படி ஏற்பட்டது?

''நான் ஆறு வயதுச் சிறுவனாக இருந்தபோது முதன்முதலாக பிரிட்டிஷ் கவுன்சில் நூலகத்தில் ஜூனியர் பிரிவில் உறுப்பினராகச் சேர்ந்தேன். நான் படித்த பள்ளியும் புத்தகம் படிக்கும் ஆர்வத்தை ரொம்பவே வளர்த் தது! எனது பள்ளியில் (வித்யா மந்திர்), அந்தக் காலத்திலேயே, லைப்ரரி பீரியட் என ஒன்று தனியாக இருந்தது. இதில் நாங்கள் படிக்கும் புத்தகத்தில் ஏதாவது அச்சுப்பிழை இருந்தால் அதைக் கண்டுபிடித்துச் சொல்ல வேண்டும்; புரியாத வார்த்தைகளுக்கு அர்த்தத்தை ஆசிரியரிடம் கேட்க வேண்டும். இப்படி ஒரு சுவாரஸ்யம் அந்த லைப்ரரி பீரியட்டில் இருந்ததால், எடுத்த புத்தகத்தை ஆர்வமாகவும், ஆழமாகவும் படிக்கும் பழக்கம் எனக்கு ஏற்பட்டது. புத்தகம் இருந்தால் போதும்; சுற்றி இருக்கும் உலகத்தை மறந்துவிடுவேன்.

என் அப்பா கொல்கத்தாவுக்கு வேலை நிமித்தம் சென்றபோது, அங்கிருக்கும் அலிப்பூர் தேசிய நூலகத்தைப் பார்க்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. விலைமதிப்பற்ற நூல்கள் அங்கே இருந்தாலும் அந்த நூலகம் ரொம்பவே மோசமான நிலையில் இருக்கும். அங்கே நமக்கு விருப்பமான புத்தகங்களைத் தேடிக் கண்டுபிடித்துப் படிப்பது பெரிய சவால்.

கொல்கத்தா பிரிட்டிஷ் கவுன்சில் லைப்ரரி மிகப் பெரிது. எல்லா விதமான புத்தகங்களும் அங்கே கிடைக்கும். அதேபோல கொல்கத்தாவில் காலேஜ் சாலையில் உள்ள ஒரு நூலகத்தில், என்னைப் போன்ற புத்தகப் பிரியர்களுக்காகவே ஏற்படுத்தியிருந்த ஒரு நல்ல திட்டம் - ஒரு முறை 100 ரூபாய் டெபாசிட் பணம் கட்டி

நூலகமும்




விட்டால் போதும், திரும்பத் திரும்ப எவ்வளவு புத்தகங்கள் வேண்டுமென்றாலும் எடுத்துச் செல்லலாம்.

நான் மேற்படிப்புக்காக டில்லி சென்றேன். அங்கிருந்த ஷாஜஹான் நூலகத்தை என்னால் மறக்கவே முடியாது. அங்கே அத்தனை பாலிவுட் நடிகர் நடிகைகளின் சுயசரித்திரம் அடங்கிய புத்தகங்களும் இருந்தன.

1993-ஆம் ஆண்டுக்குப் பிறகு நீண்ட வருட இடைவெளிக்குப் பின் திரும்பவும் சென்னை பிரிட்டிஷ் கவுன்சிலுக்குள் உறுப்பினராக நுழைந்தேன். ஆனால் அந்த நூலகம் ஏனோ மனத்துக்குள் ஒரு திருப்தியே கொடுக்கவில்லை. புத்தகங்களின் அருமை பெருமை யாருக்கும் புரிவதில்லை. மரத் தரையின் டப் டப் சத்தம், போதாக் குறைக்கு இந்த செல்ஃபோன் செய்யும் இடைவிடாத இரைச்சல். ஒரு நூலகத்துக்குள் நுழைந்தால் அங்கே முதலில் அமைதி இருக்க வேண்டும். அதுவே இங்கே இருப்பதில்லை.

நானும்!



தரமணியில் இருக்கும் ரோஜா முத்தையா ஆய்வக நூலகம் தமிழ் ஆர்வலர்களுக்கு ஏற்ற ஒரு அதிஅற்புதமான இடம். அங்கே இலவசமாகவே உறுப்பினர் ஆகலாம். எனது முதல் புத்தகமான "carnatic summer"க்கான அத்தனை அற்புதமான தகவல்களும் எனக்கு அங்கேதான் கிடைத்தன.

அதேபோல நமது தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தின் நூலகம், ஆசியாவிலேயே மிகப் பழைமையான புத்தகங்களைக் கொண்டது. 1650-ல் ஆரம்பித்து இன்று வரை பல ரெக்கார்ட்கள் அங்கு இருக்கின்றன. கடந்த பத்து வருடங்களாக சென்னையில் வரலாற்றுச் சிறப்பை விளக்கும் வண்ணம் நாங்கள் மேற்கொள்ளும் சென்னை நடைப் பயணத்துக்கு வேண்டிய அத்தனை விஷயங்களையும் தெரிந்து கொள்ள புத்தகங்கள்தான் உதவி புரிந்தன.

சென்னை வரலாற்றை விளக்கும் புத்தகங்கள் எல்லாமே பிரிட்டிஷாரின் பார்வையில் எழுதப்பட்டவை. தமிழரின் பார்வையில் ஒரு புத்தகம் கூட இல்லை. இது பெரும் குறைதான்'' என்கிறார் ஸ்ரீராம்.

சந்திப்பு :
நளினி சம்பத்குமார்

இந்தியாவின் பெருமைமிகு கொண்டாட்டங்களில், சகோதரத் தன்மையை விதைக்கும், பரப்பும் ரக்ஷா பந்தனும் ஒன்று. சக நண்பர்களின் கையில் வண்ணக் கயிற்றைக் கட்டி சகோதரி சகோதரனாக உறவு எல்லைக்குள் உட்படுத்தும் சித்தாந்தத் திருவிழா.

இத்தகைய உன்னத மனநிலை சங்க இலக்கியத்திலிருந்தே தொடர்ந்து வரும் ஒன்றுதான்.

இறைவனின் இணையடி நிழலுக்கு அடியவர்கள் உவமை சொல்லி மகிழ்ந்தது மரங்களைத்தான்.

''கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் வகை கிடைத்த குளிர் தருவே'' எனப் பாடிப் பரவசமடைந்தனர்.

மரத்தை வைத்து மாபெரும் தத்துவத்தைச் சொல்கிறார் திருமூலர்.

'மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தில் மறைந்தது மாமத யானை'

என்பது திருமந்திரம்.

மனித குலம் வாழத் தேவையான நீராதாரங்களை உருவாக்குவன காடுகளே! பெய்கின்ற மழையினை மலையிலே உள்ள மரங்களின் வேர்கள் இருத்தி வைத்து, தேவையானபோது ஒரு 'ஸ்பாஞ்ச்' போல வெளியேற்றுகின்றன. சுருக்கமாக வனங்கள் ஒரு மேல்நிலை நீர்த்தொட்டி எனலாம்.

பயோ-டைவர்சிடி எனச் சொல்லப்படும் பல்லுயிர்ப் பெருக்கக் கோட்பாட்டுக்கு அடித்தளம் காடுகளே! எத்தனை வகையான மாபெரும் மரங்கள், சிறு மரங்கள், புதர்கள், செடிகள், கொடிகள், தரையிலே படரும் புல் பூண்டுகள் என விதவிதமான வினோதங்களைக் காடு தன்னகத்தே கொண்டிருக்கிறது! அக்காடுகளில் வாழ்ந்திடும் விலங்குகளில்தான் எத்தனை விதங்கள்! எத்தனை வகைகள்!

இவையேயன்றிக் காளான் வகைகள்,



• லதானந்த் •

கண்ணுக்கே தெரியாத நுண்ணுயிரிகள் என்று வனத்தில் வாழ்ந்திடும் உயிரினங்கள் கணக்கில் அடங்காதவை.


சிங்கம், புலி போன்ற மாமிச பட்சிணிகள், அவற்றுக்கு இரையாகும் மான், காட்டெருமை போன்றவை, காட்டிலே துப்புரவுப் பணி செய்து தூய்மை செய்யும் செந்நாய், கழுதைப் புலி, காட்டுப்பன்றி போன்றவை... இப்படிக் கலவையான ஒரு மெகா கூட்டுக் குடும்பம்தானே காடுகள்!

பல வகையான பறவைகள், பயமுறுத்தும் பாம்புகள், புழுக்கள், பூச்சிகள்... இப்படி பறப்பன, ஊர்வன என விதவிதமாய் வாழ்ந்திடும் வனங்கள் விந்தை மிகு இடங்கள் அன்றோ?

ரப்பர், தேன், மூங்கில், மூலிகைகள், அரக்கு, பிசின், எண்ணெய் வித்துக்கள், காய்கள், உண்ணும் பழங்கள், எரிபொருளாகும் விறகு, கட்டுமானத்துக்கு உதவும் தடி மரங்கள்... இப்படி காடுகளின் கொடைகள் ஏராளம்.

மண் அரிமானத்தைத் தடுப்பதிலும் காடுகள் பெரும்பங்காற்றுகின்றன.

ஆறு மற்றும் ஓடைகளின் ஓரத்தில்



வனதேவதை!

இருக்கும் தாவரங்கள் நீருடன் சேர்ந்து வரும் மண்ணை நிலைநிறுத்தி, அணைகளில் சேறு சேரா வண்ணம் காக்கின்றன.

காடுகள் பல்வேறு வன உயிரினங்களின் வாழிடமாக இலங்குகின்றன.

அன்றாட வாழ்வில் சோர்வடையும் மக்களுக்கு அலுப்பை நீக்கித் தூய்மையான காற்றைச் சுவாசிக்கவும் எழில் காட்சிகளைத் துய்த்திடச் செய்யவும் வாய்ப்பளிப்பது வனங்களே!

இயற்கை எழிலினைத் துய்த்திடும் அதே வேளையில் காட்டு விலங்குகளை, அவை வாழும் இடத்திலேயே கண்டுகளிக்கவும் வாய்ப்பினை ஏற்படுத்தித் தருவதால், சுற்றுலாப் பயணிகளைச் சுண்டியிழுத்து நம் நாட்டுக்கு அந்நியச் செலாவணியை ஈட்டித் தருகின்றன.

சங்க இலக்கியத்திலே ஒரு காட்சி!

மலையும் மரங்களும் கொஞ்சிக் குலாவும் இயற்கை எழில் சார்ந்த நிலம் அது. அங்கே மகிழ்ச்சிப் பிரவாகத்தில் இயற்கை அன்னையின் உடலிலே ஊறிய உவப்புச் சுரப்பெனப் பொங்கிப் பெருகி நீர்ச் சாலையாய் வழியும் தெள்ளிய நீரருவி தன்னுடைய தண்குரலில் தாலாட்டென ஓசையிட்டுக் குதித்தோடி ஆறென்று பேர் மாறி, அற்புதமாய்த் தவழ்ந்தோடும் கரையருகே ஒரு குடில். அக்குடிலின் முன்றிலில் தாயொருத்தி தன் இடையிலே சேய் பொருத்தி உணவினை ஊட்டிட முயல்கிற நேரம்.

அச்சின்னஞ்சிறு பெண்மகவோ உண்ண மறுத்துச் சிணுங்குகிறாள். இங்கும் அங்கும் ஓடுகிறாள். தாய் சுற்றும்முற்றும் பார்க்கிறாள்.

ஓ! அவள் கண்ணில் படுகிறது அங்கே ஒரு புன்னைச் செடி. சிறுமியர் விளையாட்டாய்ப் புன்னை விதையொன்றை மணலில் ஒளித்து விளையாடியபோது தப்பிப் பிழைத்து முளைத்த செடி அது.

தன் மகளை நோக்கித் தாய் கூறுகிறாள். ''கண்ணே கனியமுதே! கட்டாணி முத்தே! என் செல்வமே! அருகில் வாராய். இதோ இப்புன்னைச் செடியினைப் பாராய். இதற்கு இப்போது நான் நீரூற்றுவேன். நிகழ்வதைப் பாரடி என் கண்மணி'' எனச் சொல்லி, சிறிது சோறுடன் கலந்து நிறைய நீரினைப் புன்னைச் செடிக்கு ஊற்றுகிறாள்.

தண்ணீர் மண்ணிலே கலந்து காணாமல் போகிறது. ''இந்தச் செடி உன் தங்கையன்றோ? - உன்னைவிட எவ்வளவு நல்லியல்பு வாய்க்கப் பெற்றவளாய் இருக்கின்றாள்? சோறும் நீரும் மறுப்பின்றி உண்கிறாளே! நீயும் உன் தங்கை போலிருக்க மாட்டாயா?'' என்று அன்பும் அர



வணைப்புமாய்ச் சோறூட்டுகிறாள் தன் சேய்க்கு.

காலம் செல்கிறது. எத்தனை விந்தைகள்! சிறு செடி புன்னை இப்போது குறுமரமாகிறது. குறுமரம் கொப்புங்குலையுமாய்ப் பூத்துக் குலுங்குகிறது; பூவாய்ச் சொரிகிறது.

செடியோடு வளர்ந்தாள் நம் சிறுமியும். காலத்தச்சன் கை வினையால் சின்னப் பெண் வளர்ந்து திமிர்ந்த ஞானச் செருக்கோடு திகழ்கிறாள். ஞானம் மட்டுமா திமிர்கிறது? இளமை அவளுடலில் எண் ணற்ற பொலிவை ஏற்றுகிறது.

பருவமும் உருவமும் பக்குவப்பட்ட பின் காதல் மெல்லவே வந்து கன்னியின் உள்ளத்தில் கள்வன் போல் நுழைகிறது.

ஒருநாள் இனிய மாலைப் பொழுது அவள் அந்தப் புன்னை மரத்தடியில் நின்று கால் விரலால் மண்ணிலே கோலமிட்டு எதிர்நோக்கியிருக்கிறாள் தன் உள்ளம் கவர் கள்வனை.

வருகிறான் தலைவன். தலைவியைப் பார்க்கிறான். மெல்ல அருகிலே வருகிறான். எட்பூ ஏசிய நாசியும், விற்புருவமும், காதருகே தொங்கும் கருங்குழலுடன் கார்மேகம் போல் கணுக்கால் வரை தொங்கும் கூந்தலும் கிறுகிறுக்க வைக்கின்றன. பாடாய்ப்படுத்துகின்றன அப்பாட்டுடைத் தலைவனை!

"கண்ணே கட்டழகி! உன் பேரெழிலை மாந்தி மகிழ்ந்திட வந்தேனடி! காதல் கல்வெட்டினைக் கட்டாயம் செதுக்கி இந்தக் காலக் கல்வெட்டில் பொறிப்போமடி! வா! வந்து தேனள்ளித் தா!"

"நிறுத்தும் பித்தரே! நீர் பெரிய காதற் சித்தர் போலும். மானே தேனே என்றெல்லாம் குறுஞ்செய்தி சொன்னாலும் கூடாதையா உமதாசை"

"ஏனடி ஏந்திழையே! கூட என்ன தயக்கம் என்கூட?"

"இங்கே நாமிருப்பது எங்கே எனப் பாரும். இப்புன்னை யார் தெரியுமா? மரம் அன்று! என் தங்கை! தங்கை அருகிருக்கத் தமக்கையுடன் தாகம் தணிக்க நினைப்பது தவறன்றோ? நான் சிறுமியாயிருக்கிற போது என் அன்னை இப்புன்னையை என் உடன்பிறந்தாளாகவே உணரச் செய்திட்டாள். எனவே காதல் கல்வெட்டினை இங்கே செதுக்க முயலாதீர்!

நும்மினும் சிறந்தது நுவ்வை
ஆகுமென்று
அன்னை கூறினள் புன்னையது நலனே
அம்ம நாணுதும் நும்மொடு நகையே"

○



தெரியாமத்தான் கேட்கறேன்...

சுருளிப்பட்டி தைலா



"**த**மிழகத்தில் மாணவ - மாணவிகளில் 70 சதவிகிதம் பேருக்கு ரத்தசோகை நோய் உள்ளது. இந்தியாவில் 25 சதவிகித இளை ஞர்கள் புகைப்பிடித்தல், மதுப் பழக்கம் உள்ளவர்கள். இந்த இரண்டு கெட்ட பழக் கங்களும்தான் எல்லாப் பிரச்னைகளுக்கும் தாயாக உள்ளன.''

- சுகாதாரத்துறைச் செயலர்
வி.கே.சுப்புராஜ்

அப்போ டாஸ்மாக்கெல்லாம் தாய் மடின்னு வைச்சுக்கலாமா?

நயன்தாரா செயலுக்குக் கண்டனம் தெரிவிக்கத் திட்டமிட்டுள்ள மாதர் சங்கங் கள், அவர் நடித்த படங்களைத் திரையிட விடுவதில்லை எனவும் அப்படித் திரையிட் டால் அத்திரையரங்கு முன்பு ஆர்ப்பாட்டம் நடத்தவும் திட்டமிட்டுள்ளன.

ஆத்தி! இப்படி ஒவ்வொரு கேஸுக் கும் வீதியில இறங்கினா நாடு கொள்ளுமா?

"**த**மிழகத்தின் அரியாசனத்தில் புரட் சித் தலைவியை ஏற்றி அழகு பார்க்காமல் இளைஞர் பாசறை ஓயாது.''

- அ.தி.மு.க. இளைஞர் பாசறை
செயலாளர் டாக்டர் எஸ்.வெங்கடேஷ்

2011ல் வரப்போறது தேர்தலா... யுத்தமா... தலிவா?

தந்தை ஆனவர்
தலைவனும்
ஆனவர்
தலைவர் கலைஞர்
நாத்திகரல்ல -
பக்தர்!
பெரியாரின் பக்தர்!
அண்ணாவின் பக்தர்!

- மு.மேத்தா கவிதை

மு.மேத்தா கவிஞரா? கலைஞரின் பக்தரா?


காஞ்சிபுரத்தில் நடைபெற்ற அண்ணா நூற்றாண்டு விழாவில் முதல்வர் கருணா நிதி, மு.க.அழகிரி உள்ளிட்டோருக்குத் தங்கச் சங்கிலிகள், நாணயம் பரிசு.

இது திராவிட முன்னேற்றக் கழகமா இல்லை திரவிய முன்னேற்றக் கழகமா?

"**இ**ந்தியாவில் பொருளாதார நெருக் கடி இல்லை.''

- பிரதமர்

வெள்ளம் தலைக்கு மேல போனபிறகு சாண் போனா என்ன... முழம் போனா என்னன்னு சொல்றீங்களா?



ஸ்ரீ சாரதா சக்தி பீடம்



72, காமராஜ் சாலை. பழைய பெருங்களத்தூர்.
(வழி) தாம்பரம். சென்னை - 63. போன் : 22760612, 22762299,29710350
City Office No.7, முதல் மாடி. வேலு தெரு. மேற்கு மாம்பலம்.
(அயோத்யா மண்டபம் அருகில்) சென்னை - 600 033. போன் : 23714942

தீபாவளி நல்வாழ்த்துக்கள்

ஏழை மாணவர்களுக்கு உதவுங்கள்

பேரன்புடையீர், வணக்கம்!

நம் சக்தி பீடத்தின் சார்பில் கடந்த 22 ஆண்டுகளாக நடைபெற்று வரும் "ஸ்ரீ ராமகிருஷ்ண சேவா குருகுலத்தில்" தாய் தந்தையற்ற திக்கற்ற மற்றும் வறுமை கோட்டின் கீழ் வாழும் 150 மாணவர்கள் தங்கி படித்து வருகின்றனர். மேலும் கூடுவாஞ்சேரியில் உள்ள எங்களது குருகுலத்தில் 30 மாணவிகள் தங்கி படித்து வருகின்றனர்.

நாள்தோறும் இறைவழிபாடு, கூட்டு பிரார்த்தனை, பகவத்கீதை பாராயணம் ஆகியவைகளுடன் நல்ல கல்வி, காலை மாலை உடற்பயிற்சி ஆகியவைகள் அளிப்பதுடன், உணவு, உடை, தங்குமிடம் ஆகியவைகளும் இலவசமாக வழங்கப்பட்டு, நல்ல முறையில் வளர்ந்து வருகிறார்கள்.

மேலும் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர், ஆகியோர்களின் உயர்ந்த லட்சியங்கள் போதிக்கப்படுவதுடன், சமுதாய சேவை பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

இக்குருகுலத்தின் பராமரிப்பு செலவு முழுவதும் நன்கொடையாளர்கள் அளிக்கும் உதவிகள் மூலம் மட்டுமே நடைபெற்று வருகிறது. ஆகவே தாங்கள் இப்புனிதப் பணிக்கு தங்களால் இயன்ற உதவியைச் செய்யும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

• காலை சிற்றுண்டி (200 பேருக்கு)	ரூ. 1,000/-
• மதிய உணவு	ரூ. 2,000/-
• இரவு சிற்றுண்டி	ரூ. 1,000/-
• இனிப்பு மற்றும் பால் வழங்குதல்	ரூ. 1,000/-
• ஒரு மாணவனுக்கு ஓராண்டிற்கு கல்வி உதவித்தொகை	ரூ. 1,000/-
• ஒரு மாணவனுக்கு பராமரிப்பு செலவு ஓராண்டிற்கு (உணவு, உடை, கல்வி)	ரூ. 12,000/-
• குருகுலத்தின் ஒரு மாதத்திற்கான பராமரிப்பு செலவு	ரூ. 2,00,000/-

நன்கொடைகளுக்கு 80G பிரிவின்படி வருமானவரி விலக்கு உண்டு

மேலும் தங்களின் பிறந்த நாள், திருமண நாள், குழந்தைகளின் பிறந்த நாள், தொழில் /வியாபாரம் தொடங்கிய நாள், மற்றும் இதர பண்டிகை நாட்களான தீபாவளி, பொங்கல், கிறிஸ்துமஸ், ரம்ஜான் போன்றவைகளில் மாணவர்களுக்கு சிறப்பு விருந்து ஒன்றை அளித்து அவர்களுடன் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளலாம்.

தாங்கள் அளிக்கும் தொகை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்கிறோம். தங்கள் நன்கொடைகளை ஸ்ரீ சாரதா சக்தி பீடம் என்ற பெயருக்கு Cheque / DD / MO மூலம் அனுப்பி வைக்கும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம். மேலும் எங்களிடமிருந்து ரசீதைப் பெற்றுக் கொள்வது அவசியம்.

இறைவன் தொண்டில்
சுவாமி ஸ்ரீ ஸர்வாத்மானந்தர் நல்லாசியுடன்
நிர்வாகம்.

மிட்டாயி

மதுமிதா




பப்பரப்பப்பரப்பாய்ங்க்க்க்க்
பப்பரப்பப்பரப்பாய்ங்க்க்க்க்
ஊதுகுழலின் உரத்த ஒலியில்
மிட்டாயிம்மா மிட்டாயிம்மா
என வீட்டின் உள்ளே குரல்கள் அலைமோதின
பசியெனக் கதறும் குழந்தையின் குரலாய்

திறக்கப்பட்டன
மூர்க்க வெயிலுக்காய் மூடப்பட்ட கதவுகள்
சொர்க்கவாசலைத் திறப்பதாய்

பரபரப்புடன் வெளியே ஓடிவந்தன குழந்தைகள்
கையில் சில்லறைக் காசுகளுடன்
திறக்கப்பட்ட அணையிலிருந்து
பெருக்கெடுத்தோடும் வெள்ளமாய்.
சற்றே பருத்த கம்பின் உச்சியில்
நீலவண்ண உடையணிந்த பொம்மையின் கரங்களில்
சிங் சாங் அடிக்கும் சின்ன ஜால்ரா
கம்பின் நடுவே பருத்த சர்க்கரை முடிச்சாய்
வெண்மை, ஆரஞ்சு, சிவப்பு,
பச்சை நிறம் பூசிய இனிப்பு மிட்டாய்
இழுக்க இழுக்க இனிப்புத் தகடாய்
இழுத்த இழுப்புக்கு இயைந்த வடிவாய்
வந்துகொண்டே இருந்தது வண்ண ஜவ்வுமிட்டாய்
திரௌபதியின் வண்ணச் சேலையாய்

இரண்டு ரூபாய் வாட்ச்சு உருப்பெற்றது
நான்கு ரூபாய் யானை



நான்கு ரூபாய் மயில் என சின்னஞ்சிறு கைகளில்
கட்டப்பட
நான்கு ரூபாய் இரயில்தான் அதிகமாய்க் கேட்கப்பட்டது.
இறுகிய முகத்துடன் மிட்டாய்க்காரன்
வேலையே கவனமாய்.
குறுகுறு பார்வையுடன் குமிழ் சிரிப்புடன்
குதூகலத்துடன் குழந்தைகள்.
இறுகிய முகமும் இளகியது
மென்மையாய் மௌனமாய் மொட்டு மலர்வதாய்
இனிய புன்னகை தவழ்ந்து மறைந்தது
மின்னல் கீற்றாய்.
கொசுறு கொசுறாய் இனிப்பு
இன்னும் இன்னும் இன்னும் கொஞ்சம்
கொடுக்கப்பட்டது.
பப்பரப்பப்பரப்பாய்ங்க்க்க்க்
பப்பரப்பப்பரப்பாய்ங்க்க்க்க்
ஊதுகுழலின் உரத்த ஒலி
மெதுவாய்க் காற்றில் கரைந்தது
இறுகிய முகத்துடன் ஏதோ ஒரு தெருவுக்கு.
எத்தனை காலங்கள் தொடரும் இனியும் இக்காட்சிகள்?
ரசீதுகளை இயந்திரங்களில் கிழித்துக் கொடுக்க
ஸ்பென்சர்ஸ், புட் வார்ல்ட், ஃப்ரெஷ்,
ரிலையன்ஸ்
ஸ்பெஷல் ஸ்வீட்ஸ், இனிப்புக் கடை,
இத்யாதிகள்
முளைத்துக் கொழிக்கும் இந்நாட்களில்!

கல்லறைமேடு

ஆ.மனோன்மணி, தோற்றம்:12.5.1945. மறைவு:10.7.2005 என்று பொறிக்கப்பட்ட சிலுவைக் கல்லில்தான் தினமும் ஆட்டைக் கட்டி வைத்திருப்பான் ஈசாக். இது அவன் அம்மாச்சி கல்லறை. இறந்து நான்கு வருடமாகிறது. உடம்பு நல்லாயிருக்கும்போது ஆடுகளையெல்லாம் அம்மாச்சிதான் ஓட்டியாரும். அம்மாச்சிக்குப் பிடித்த கறுப்பு ஆட்டைத்தான் அது கல்லறையில் கட்டி வைத்திருக்கிறான். மற்ற ஆடுகளை, பக்கத்திலுள்ள ஆவாரம் செடியிலும் எருக்கஞ் செடியிலும் கட்டி வைத்திருந்தான். கயிறு எட்டும் வரையிலும் அவை அசை போட்டுக் கொண்டிருந்தன. அதுவும் மதிய நேரத்தில் மட்டும்தான். மற்ற நேரமெல்லாம் கயிற்றை அவிழ்த்துவிட்டு இவன் பக்கத்திலுள்ள வனத்துச் சின்னப்பர் கல்லறையில் உட்கார்ந்திருப்பான்.

அது மூன்று ஆள் படுக்கும் அளவுக்கு சிமெண்ட் தளம் போட்டு கட்டி வைத்திருந்தார்கள். அதில் ஆடுபுலி ஆட்டம் ஆடுவதற்கென்று முள்ளு செடி இலையால் கட்டம் வரையப்பட்டு கிடக்கும். இவனைப் போலவே ஆடு ஓட்டியாரும் எஸ்தரோடு போட்டி போடுவான். இப்போதெல்லாம் ஏதோ தனிமையில் யோசித்துக் கொண்டே படுத்துக் கிடந்தான். கைகள் இரண்டையும் தலைக்குப் பின்னால் முட்டு வைத்துப் படுத்தவாறே மேலே உள்ள மரத்தைப் பார்த்தபோது, குருவிகளின் சந்தோஷம் இவனை என்னவோ செய்தது.

வனத்துச் சின்னப்பர் கல்லறைக்குப் பக்கத்தில் பெரிய ஆலமரம் ஒண்ணு இருக்கும். அதில் தொங்கும் விழுதுகளைப் பிடித்துக் கொண்டு குறுக்காலே ஓடுகின்ற வாய்க்காலைத் தாண்டி அங்கிட்டுப் போய் இறங்குவான். இது அவனுக்கு மிகவும் பிடித்த விளையாட்டு. சனி, ஞாயிறு விடுமுறைன்னாலே கூட்டாளிகளோடு சேர்ந்துகொண்டு ஒவ்வொரு விழுதுகளையும் ஒரு வழி பண்ணிவிடுவான்.

ஆலமரத்துக்குக் கொஞ்ச தூரம் தாண்டி ஒரு நவ்வா மரம் இருக்கும். இவன் மரம் ஏறத்தெரியாமல் கீழே கிடக்கும் பழங்களைப் பொறுக்கித் தின்று கொண்டிருப்பான். பக்கத்துத் தெரு ராமு முதன்முதலாக மரம் ஏறியபோது காற்றில் அடித்து விழுந்து கிடக்கும் நவ்வாபழத்தைப் பொறுக்கி அதை மரத்தின் அடியில் பெருக்கல் குறிபோட்டுக் காவல் கொடுத்துட்டு ஏறினான். இரண்டு மூன்று முறை தடுமாறி கீழே விழுந்து எப்படியோ ஏறிவிட்டான். அவன் மேலிருந்து உலுக்கும்போது நிறைய பழங்கள் விழுந்தன. குமார்தான் சொன்னான்,

''இது மேலிருந்து தமிழரசன் செய்கிற வேலை. அதனால்தான் நிறைய பழம் விழுது. ஒல்லிபிச்சான் ராமு ஆட்டுனா இவ்வளவு பழம் விழாது'' என்றும் கூறினான். தமிழரசன், ஈசாக்குக்கு முந்தைய செட். போனவருஷம்தான் மரம் ஏறி விழுந்து மண்டை உடைஞ்சு இறந்து போனான்.

கல்லறையைச் சுத்தி நிறைய நொனா மரம் உண்டு. பழம் கறுப்பா சாப்பிடுவதற்கு நல்லாயிருக்கும். ஃபுட்பால், வாலிபால் மாதிரி பழம் ஒரு வரைபடத்தோட இருக்கும். பக்கத்துத் தெருவுல கூட்டாளி முருகன், விநாயகர் சதுர்த்திக்கு

அவங்க தெருவுல 15 அடி உசரத்துல பிள்ளையார் வச்சிருக்கிறதைப் பார்த்து, அவனும் களிமண்ணுல ஒரு பிள்ளையார் செஞ்சு வீட்டுலேயே முள்வேலியில இருக்கிற பூவெல்லாம் பறித்து மாலை போட்டு வச்சிருந்தான். அத இவனைக் கூப்பிட்டுக் காண்பிச்சிருக்கான்.

இவன் தெருவுல வணத்துச் சின்னப்பர் திருவிழா அன்னைக்கு மூணு சப்பரம் தெருவுல விடுவாங்க. பக்கத்தூர்லதான் கோயிலோட பங்கு. அங்கதான் சப்பரம் இருக்கும். இன்ன தேதியில வேணும்னு சொல்லிட்டு திருவிழாவுக்கு மொத நாள்ல ஓட்டி



அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டியில் பிரசுரத்துக்குத் தேர்வான கதை-8

சுரேஷ்மான்யா

வருவாங்க. இராத்திரி முழுக்க சீரியல் செட் லைட் போட்டு நீள் கூம்பு வடிவில மல்லிகைப் பூக்களைச் சுத்தித் தொங்கவிடுவாங்க. மாதாவுக்கு மல்லிகைப் பூ பிடிக்குமா தெரியாது; ஆனா ஈசாக்குக்கு ரொம்பப் பிடிக்கும்.

சப்பரம் முழுக்க ட்யூப் லைட், ஃபோக்கஸ் லைட்டுன்னு ஒரே வெளிச்சம். மாதா போலவே தெரு எங்கும் வெளிச்சமா இருக்குது. கூடவே பாபநாசத்துலருந்து கே.பி.எஸ்.

முத்துவோட கிளாரினெட் இசை வேற. பாட்டா பாடாம ஊதியே ஆள மயங்க வெச்சிடுவாரு. இவன ஒத்த சின்னப் பசங்க எல்லாம் அதிருகிற அந்த டிரம்செட்டையே பார்த்துக்கிட்டிருப்பாங்க. சப்பரம் ஊரையே சுத்தி விடியக்காலையில கோயிலுக்கு வந்து சேரும். போற பக்கமெல்லாம் சர்சர்ன்னு ராக்கெட் வேற விட்டுக்கிட்டே போவாங்க. கயிறுகட்டி வெடியைத் தொங்கவிட்டுப் பத்தவச்சா, மாதாவே பிள்ளையத் தூக்கிக்கிட்டு அங்கிட்டு ஓடிடும். அவ்வளவு சத்தம்!

அடுத்த நாளே ஈசாக்கை நொனா மரத்துல பார்க்கலாம். அவன் கூட்டாளியும் மரத்துல ஒரு காயி இல்லாம பறிச்சிடுவானுவ. எல்லா காயையும் வச்சுக்கிட்டு அஞ்சு காய் சப்பரத்துல இருந்து 25 காய் சப்பரம் வரைக்கும் செய்வான் ஈசாக். அப்புறம் அது முன்னால டொயின் நூலைக் கட்டி இவன் இழுத்துக்கிட்டுப் போனான்னா, அலெக்ஸ் மவன் ராபர்ட் தப்பை எடுத்துக்கிட்டு முன்னால அடிச்சுக்கிட்டே போவான்.

ஆரம்பத்துலல்லாம் வருஷம் தவறாம ஈசாக் தாத்தா வேளாங்கண்ணிக்கு நடைபயணம் கிளம்பிடுவார். கோயில் தெருவுல நாற்பது அம்பது பேரு கிளம்பிப் போவாங்க. ரெண்டு நாளைக்குத் தேவையான கட்டுச்சோறை எடுத்துக்கிட்டு துணிமணிய எடுத்துக்கிட்டு நடையைப் பிடிச்சுடுவாங்க. ஒரு தரம் ஈசாக்கும் போயிருந்தான். தஞ்சாவூர் தாண்டுறதுக்குள்ள காலை வெட்டிப் போட்டுலாம்போல அவ்வளவு வலி. ஒரு வழியா கடலைப் பார்த்த சந்தோஷத்துல எல்லாம் மறைஞ்சு போச்சு. அவனுக்குப் பிடிச்சதே பழைய கோயிலுக்குப் போற சிலுவைப் பாதை வழியில, இடதுபக்கமும் வலது பக்கமும் நடந்து போற பாதையில் சின்னச் சின்னதா கண்ணாடிக் கூண்டுல இயேசு பொறந்ததிலிருந்து உயிர்ப்பிச்ச வரைக்கும் உள்ள படங்கள்தான். இவன் எட்டாவது வரைக்கும் மீட்பர் பள்ளியில படிக்கும்போதே அங்குள்ள தேவாலயத்தில் சின்னதாய் இதைப் பார்த்திருக்கிறான்.

சனிக்கிழமை பள்ளிக்கூடம் இல்லாத நாட்களில் ஃபாதர் கூப்பிட்டு சர்ச்சை சுத்தம் செய்யச் சொல்லுவார். ஈசாக்கும் ஒருமுறை இருந்திருக்கிறான். எல்லாப் பொருட்களையும் துடைத்து வைத்துக் கொண்டிருக்கும்போது, அப்பம் வழங்கும் கிண்ணம் அவன் கண்ணில் பட்டது. அம்மா அப்பாவோடு ஞாயிறு பிரார்த்தனையில் கலந்துகொண்டபோது, அவர்களுக்கு மட்டும் ஃபாதர் வாயில் ஊட்டுவதையும் இவனுக்கு மறுத்துவிட்டதையும் நினைத்துப் பார்த்தான். இப்பொழுதுதான்





மந்திரம் படித்துக் கொண்டிருக்கிறான். இருந்தாலும் ஃபாதர் மந்திரிக்காத அப்பம் எப்படியிருக்கும் என்ற யோசனையே அவனைத் திங்க வைத்தது. கூட வேலை செய்து கொண்டிருந்த ஆல்பர்ட்டுக்கும் கொடுத்தான். ''டேய்! வேண்டாம்டா, ஃபாதர் மன்னிக்கமாட்டாரு''ன்னான். ''அதனால் என்ன? இயேசு மன்னிச்சுடு வாரு''ன்னான்.

வளத்துச் சின்னப்பர் கட்டையில் இவன் சோகத்தோட படுத்துக் கிடப்பதற்குக் காரணம் இருந்தது. போன வாரம் இவன் தாத்தா உடம்புக்கு முடியாமல் இறந்து போனார். நெருங்கிய உறவான மாமா மட்டும் பக்கத்துத் தெரு ஆளுங் களை வைத்துப் பந்தல் போட்டுக் கொண்டிருந்தார். தெரு சனங்கள் வந்து வந்து பார்த்துவிட்டுப் போனார்கள். யாரும் அதிக நேரம் தங்கவில்லை. இவனுக்கும் காரணம் புரியவில்லை. மாமாவைப் போய்க் கேட்டான். ''உங்கப்பன் ஊரோடு ஒத்துப்போயிருக்கணும். இல்ல உறவோட உண்டு வாழணும். தான் தான் பெரிசுன்னா இப்படிக் கிடக்க வேண்டியதுதான்'' என்றார்.

மற்ற வீட்டில் எழவு நடந்தபோது பார்த்திருக்கிறான். அந்த வீட்டுப் பெரியவர் கோவில்புள்ளையைக் கூப்பிட்டு முறையா சொல்லிவிட்டதும், தெருவுல இருக்கிற இளசுகளைக் கூப்பிட்டு எந் தெந்த ஊர்க்கு யார்யார்க்குச் சொல் லணும்னு கேட்டுப் பெயர் எழுதி அவன வனுக்குக் காசு பிரிச்சுக் கொடுத்து வாடகை சைக்கிள் கொடுத்து அனுப்பி விடுவாங்க.

ஒருத்தருக்கு ஒத்தாசையா இருந்தாத் தானே தனக்கு ஏதாவதுன்னா வருவாங் கன்னு எல்லோரும் பொறுப்பாக அந்த வேலையைச் செய்வாங்க. ஆனால், இவன் வீட்டில் மட்டும் அது நடக்கவில்லை. ஏன்னு காரணம் இவனுக்கும் புரியல. ஆனால், அவன் அப்பா மட்டும் தெருப் பாதையையே பார்த்துக் கொண்டிருந்தார். தூரத்தில் ஃபாதர் வந்துகொண்டிருந்தார்.

கோயில்புள்ளை ஃபாதரைக் கூப்பிட்டு கோயிலில் அமரச் செய்தார். ''பேசிப் பார்த்தீங்களா?''ன்னார் பாதர்.

''எவ்வளவோ பேசியாச்சு. பெரிய திமிரு பண்றான். நீங்க வேணா பேசிப் பாருங்க'' என்றார். அப்பாவை அழைத்து ஃபாதர் அருகில் அமரச் சொன்னார். ''ஏன் ஊர்து! காலங்காலமா இந்தத் தெருவுல பொறந்து வளர்ந்து ஒண்ணுமொன்னா இருக்கிறீங்க. இந்தக் காரியத்துக்குகூட நீ தெருவுல சொல்லலைன்னா என்ன மனுஷன் நீ? இதுதான் நீ பைபிள்ல படிக் கிறியா?''

ஓர்துவின் முகத்தில் இறுக்கம் இருந்தது. சோகம் என்பது துளியும் இல்லை. தன் அப்பாவையும் ஏதோ தூக்கிப் போட்டால் போதும் என்று ஏதோ ஒன்றுக்காகக் காத்திருந்தார். எதிரே பார்த்து, ''வாங்க... பாஸ்டர் இவ்வளவு நேரம் உங்களுக்காகத் தான் காத்திருந்தேன். நீங்கள் ஜெபத்தை ஆரம்பிக்கலாம்'' என்றார். உட்கார்ந்திருந்த ஃபாதரின் முகத்தில் வெறுமை படர்ந்தது.

இயேசு ஒருவரே என்று சொல்லிக் கொண்டிருக்கும் பாஸ்டரையும், இயேசுவும், மாதாவும் எல்லாம் கடவுள் தான் என்று சொல்லிக்கொண்டிருக்கும் ஃபாதரையும், ஏன் அந்தக் கிறிஸ்துவத்தின் முக்கியக் கடவுள் பார்க்காமல் இருக்கிறார்? இல்லை ஏதும் அற்புதங்கள் நிகழ்த்தாமல் இருக்கிறார்? ஏன் அவரைக் கேட்டால் அவர் தந்தையைக் கை காட்டுகிறார்? கிறிஸ்துவத்தின் உண்மையான கடவுள் யார்? எதுவும் புரியவில்லை ஈசாக்குக்கு. தெருக்காரர்கள் வெளியில் நின்றுகொண்டிருந்தார்கள். பக்கத்துத் தெரு ஆட்களும், சபைக்காரர்கள் சிலரும் ஜெபம் முடிந்து பாஸ்டரோடு வெளியில் வந்தனர்.



கூடியிருந்த கூட்டத்தைக் கலந்து கொண்டு ஓர்துவைப் பார்த்து, கோயில் புள்ளை சொன்னார்: ''தம்பி! உங்களுக்குத் தெரிஞ்சதை நீங்க செஞ்சிட்டீங்க. எங்களுக்குத் தெரிஞ்சதை நாங்களும் செய்யறோம். ஊருக்கு வெளியில இருக்கிற கல்லறை, பொதுவா சாமி கும்பிடறவங்களுக்குச் சொந்தமானது. உங்க அப்பாவை நீங்க எங்க கொண்டு போய்ப் பொதைக்கணுமோ அங்க கொண்டு போய்ப் பொதைங்க. அவ்வளவுதான்'' என்றார்.

ஓர்து எதையும் மாற்றிக் கொள்ளாமல், உறுதியோடேயே இருந்தார். ஊர்ப் பஞ்சாயத்துத் தலைவரைப் பார்த்து, கல்லறைக்கு அருகில் இருக்கிற குட்டைக்குப் பக்கத்தில் புதைத்துக் கொள்ள சம்மதம் வாங்கினார். கோயில் கூம்பாவை எடுத்துப் போகாமல் பாடையிலே கொண்டு போய் புதைத்துவிட்டு வந்தனர்.

வழக்கம்போல கல்லறைத் திருநாள் வந்தது. வருஷாவருஷம் அவன் அம்மா அப்பாவோடு கல்லறைக்குப் போவான். தீபாவளிக்கு முன்னாலேயே வர்றதுனால வெடி, பட்டாசு, மத்தாப்புன்னு அமர்க்களப்படுத்துவான். அன்னைக்குத்தான் புல், குப்பையெல்லாம் சுத்தம் செய்யப்பட்டு, ஏதோ நேத்துதான் புதைச்ச மாதிரி மண் மேடுகளா கிடக்கும். வசதிபடைச்சவன் கல்லுல சிலுவைக் கட்டையும், ஏழைங்க பூசரங்குச்சியில சிலுவைக் கட்டையும் தலைமாட்டுல குத்தி மாலை போட்டுக் கும்பிடுவாங்க. எல்லோரும் ஒண்ணுமொன்னா சந்தோஷமா இருப்பாங்க. நேத்து இவன் கல்லறைக்குப் போனபோது அம்மாச்சியின் கல்லறை சுத்தம் செய்யப்படாமல் கிடந்தது. அவன் அப்பாவும் இவனும் தாத்தா கல்லறைக்கு மட்டும் மாலை போட்டுக் கும்பிட்டுக் கொண்டிருந்தார்கள். இவன் திரும்பிப் பார்த்தபோது தாத்தாவின் கல்லறைக்கும் அம்மாச்சியின் கல்லறைக்கும் தூரம் இருப்பது தெரிந்தது. ●

சாந்தம்

அருள்வாக்கு



சந்தோஷமாக இருப்பதாகச் சொல்வது மனசின் அனுபவங்களை வைத்துத்தான். ஆனால், சந்தோஷானுபவம் பெறுகிற இந்த மனசுதான் நாமா என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டாமா? எதெதையோ தெரிந்து கொள்வதிலும் எதெதையோ ஆராய்ச்சி பண்ணி உண்மைகளைக் கண்டுபிடிப்பதிலும்தான் மனித ஜீவனின் பெருமையே இருக்கிறது என்று சொல்லிக் கொள்கிறோம். அணுவிலிருந்து galaxy வரையிலும் எல்லாவற்றையும் ஆராய்ந்து அவற்றின் உண்மைகளைத் தினந்தினமும் தெரிந்துகொண்டு கர்வப்படுகிறோம். இப்படித் தெரிந்துகொள்கிற நாம் வாஸ்தவத்தில் யார் என்று ஆராய்ச்சி பண்ணித் தெரிந்துகொள்ள வேண்டாமா? தன்னுடைய சத்யமான ஸ்திதியையே தெரிந்து கொள்ளாமல் மற்றவற்றைத் தெரிந்துகொண்டு, 'சயன்ஸால் சத்யங்களைத் தெரிந்து கொள்கிறோமாக்கும்!' என்று மார்தட்டிக் கொள்வது பரிகாசத்துக்கு இடமானதல்லவா? சத்ய சத்யமானதைத் தெரிந்துகொள்ள வேண்டும். அறிகின்ற அறிவை அறியவேண்டும் என்றால் ஆத்ம சாஸ்திரத்தைப் பழகிக்கொள்ள வேண்டும்.

ஆத்ம சாஸ்திரங்களை இப்போதே தீவிரமாகப் பழகிக்கொள்ளாத பெரும்பாலாருங்கூட, மெய்யான ஆத்மாவை அடியோடு மறந்து பொய்யான மனசுக்காகவே சதாவும் பாடுபட்டுக் கொண்டிருக்கக் கூடாது! அப்படியிருந்தால் நாம் ஏமாளி என்று ஆகிவிடும். அதனால்தான், எப்படிப்பட்டவராயிருந்தாலும், தினம் ஒரு அஞ்சு நிமிஷம் பத்து நிமிஷமாவது, 'நம்முடைய காரியம், எண்ணம், லோகம் முதலான சகலமும் பொய்யாகப் போய்விடும். ஒரு பெரிய சாந்த பதம் ஆத்மா ஆத்மா என்று இருக்கிறது' என்பதாக நினைவூட்டிக் கொண்டு, அந்த அஞ்சு பத்து நிமிஷம் சாந்தமாக உட்கார்ந்திருக்கவேண்டும்.

– ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்



"சின்னப் பிரச்னை
உடம்பில இருந்தாலும்
முதல்லேயே நல்லா ட்ரீட்மெண்ட்
எடுத்துடணும்."

"இருந்தாலும்... ஜலதோஷம்னு
வந்த எனக்கு
மூக்கை ஆபரேஷன்
பண்ணணும்னு சொல்றது
ரொம்ப ஓவர் டாக்டர்..."

- எம். மிக்கேல்ராஜ்

"மன்னா! நமது
பட்டத்துக் குதிரையைக்
காணவில்லை!"

"நல்லவேளை அமைச்சரே!
காணாமல் போகும்போது நான்
அதை ஓட்டிச் செல்லவில்லை,
இல்லையென்றால்
நானும் காணாமல்
போயிருப்பேன்!"

- தென்றல் சண்முகசுந்தரம்





"திருக்குறளை இயற்றியது
யார்?"

"இங்கிலீஷ்லேயா?
தமிழ்லேயா சார்?"

- எஸ்.கோபாலன்

"வீட்டுப் பாடத்தில் சந்தேகம்னா அம்மாவைக் கேளு."

"ஆனா, அப்பா! இதில் சுருக்கமாக விடையளினு கேட்டிருக்காங்க!"

- **தென்றல் சண்முகசுந்தரம்**





"நேத்து நாம, கொள்ளையர்களைப் பிடிச்சு, அவங்களோடு எடுத்துக்கிட்ட ஃபோட்டோ இன்னைக்கு எல்லா பத்திரிகையிலும் வந்திருக்கே... ஜனங்க என்ன பேசிக்கிறாங்க?"

"இதுல யாரு போலீஸ், யாரு கொள்ளைக்காரங்கன்னு தெரியலையேன்னு பேசிக்கிறாங்க!"

- **சம்பத்குமாரி**

"ஜாதகப்படி உன்னோட காதலுக்கு, பொண்ணோட அப்பாதான் முழு ஒத்துழைப்பு கொடுப்பாரு!"

"ரொம்ப தேங்க்ஸ் மாமா!"

- **ஜி.சுந்தரராஜன்**



பாலுசத்யா



விளையாட்டு

'ஆம்பளைங்களோட முகம் வேற வேறயா இருக்கலாம். ஆனா மூளை ஒண்ணுதான்.' இது 'மாற்றம் வரும்' குறும்படத்தில் வரும் வசனம். இந்தச் சின்ன வாசகத்தில் உள்ள பேருண்மையை நோக்கி நகர்கிறது படம்.

உமா தகவல் தொழில்நுட்ப நிறுவனம் ஒன்றில் பணியாற்றுபவள். அம்மா, அப்பா, பாட்டி, தன் துறையிலேயே பணி யாற்றும் கண் நிறைந்த கணவன் என அழகான குடும்பம். அது ஒரு நவராத்திரி தினம். அக்கம்பக்கத்தில் இருப்பவர்கள், வீட்டு ஹாலில் உட்கார்ந்திருக்க, கொலு பொம்மைகளுக்கு நடுவே பாட்டி 'நானொரு விளையாட்டு பொம்மையா?' பாடலை அழகாகப் பாடிக் கொண்டிருக் கிறாள். அம்மா பாடலை ரசித்துக் கொண் டிருக்கிறாள். ஆனால், எதிலும் ஒட்டா மல், வாசலையே பார்த்தபடி இருக்கிறார் கள் அப்பாவும் கணவனும். எல்லோரும் போனபிறகு, தாமதமாக வருகிறாள் உமா. அவளுக்கு ஆன் சைட்டில் அமெரிக்காவுக் குப் போக வாய்ப்பு வந்திருக்கிறது. கணவன், ''நீ வெளிநாடு போறது எனக் குப் பிடிக்கலை'' என்று சொல்லி விட்டு, பாதிச் சாப்பாட்டில் எழுந்து போகிறான்.

அம்மா ராஜிக்கு, பழைய நினைவு வருகிறது. அவளுக்கு ஒரு வங்கியில் வேலை. ஈரோட்டுக்குப் பக்கத்தில் இருக் கும் ஒரு கிராமத்தில் ப்ரமோஷன் கிடைக் கிறது. கணவன் 'நீ சாதாரண குமாஸ்தாவா இருந்தாலே போதும். வீட்டோட அடங்கி இரு!' என்று சொல்கிறான். ஆனால், அவளோ ரீஜினல் மேனேஜர், டெபுடி ஜெனரல் மேனேஜர். ஜெனரல் மேனேஜர் என... மேலே, மேலே உயர்வதுதான் தன் லட்சியம் என்று பிடிவாதமாக கிரா மத்துக்குக் கிளம்புகிறாள். கூடவே மகளும், மாமியாரும். சொன்னபடி வாழ்க்கையில் உயர்ந்த நிலைக்கு வந்து விட்டாலும், அவளுக்கும் கணவனுக்கும் இடையே விழுந்த இடைவெளி நிரந்தர மாகிப் போகிறது.

பாட்டியின் கதை இன்னொரு சோகம். சபாவில் பாடுவதற்கு வாய்ப்பு கிடைத் துப் பாடப் போகிறாள். 'இதெல்லாம் குடும்பப் பொம்பளைக்கு லாயக்கில்லை' என்று கோபித்துக்கொண்டு காசிக்குப் போன அவள் கணவர், அதன் பிறகு வீடு திரும்பவில்லை. உமாவின் கணவன் இந்தத் தலைமுறையைச் சேர்ந்தவன். முதலில் கோபப்பட்டாலும் கடைசியில் அவள் வெளிநாடு போகச் சம்மதிக்கிறான்.

''எல்லா காலத்துலயும் பெண் களோட சுயத்துக்கும் தனித்துவத்துக்கும் இடைஞ்சலா கணவர்கள் இருக்காங்க. ஆனா, ஒவ்வொரு தலைமுறையிலயும் தர ரீதியான மாற்றங்கள் ஏற்பட்டுக் கிட்டுத்தான் வருது. இந்தக் கதையில மூணாவது தலைமுறையைச் சேர்ந்த



பொம்மைகள்




ஆண், மனைவியைப் புரிஞ்சுக்கறான். அதனால உதவுறான்'' என்கிறார். 'மாற்றம் வரும்' குறும்படத்தின் திரைக்கதை ஆசிரியரும் இயக்குநருமான பாலு மணிவண்ணன். இவர் இயக்குநர் ஞான ராஜசேகரனின் 'மோகமுள்', 'பாரதி', 'பெரியார்' ஆகிய படங்களில் இணை இயக்குநராகப் பணியாற்றியவர். அதற்கு முன் இயக்குநர் கே.விஜயனின் பல படங்களில் உதவி இயக்குநராக இருந்தவர். தற்போது தினமலரில் உதவி ஆசிரியராக இருக்கிறார். கைபேசி எண்: *9841407440*

மங்கையர்மலரில் 1989ம் ஆண்டு வெளிவந்த ஒரு சிறுகதைதான் குறும்படமாக உருமாற்றம் பெற்றிருக்கிறது. அந்தக் கதையை எழுதிய ஈஸ்வர் இதில் வசனமும் எழுதியிருக்கிறார். ஓர் இடத்தில் ராஜி கணவனிடம் சொல்கிறாள்: 'உங்களுக்கு வேலைங்கறது காசு கணக்கு; எனக்கு லட்சியக் கனவு.' கொஞ்சம் சினிமாத்தனமான பழைய காலத்து வாசனை வசனங்களில் அடிக்கத்தான் செய்கிறது. மற்றபடி, கச்சிதமான விஜய் திருமூலத்தின் ஒளிப்பதிவு, காட்சிகளுடன் பொருந்திப் போகிற எம்.என்.சுரேந்தரின் அடக்கமான இசை, லலிதாவின் குரலில் இனிமையான பாடல் என இந்தக் குறும்படத்தைப் பாராட்ட நிறைய உள்ளன. உமாவின் கணவன் அவளை வெளிநாடு அனுப்ப முன் வந்த பிறகும், 'மாற்றம் வரும்' என்கிற தலைப்பு பொருத்தமாகப்படவில்லை.

கடந்த ஞாயிற்றுக்கிழமை, சென்னை ஃபிலிம் சேம்பரில் இந்தக் குறும்படத்தின் வெளியீட்டு விழா நடந்தது.

'நானொரு விளையாட்டுப் பொம்மையா?' பாடல் கொலுக் காலங்களிலும், சபாக்களிலும் பாடவும், கேட்கவும் மட்டுமல்ல; ஒவ்வொரு பெண்ணும் தன்னைத் தானே சுயபரிசீலனை செய்து கொள்வதற்காகவும் கேட்கப்பட வேண்டிய ஒரு கேள்வி. அதை அழுத்தமாக உணர்த்துகிறது இந்த இருபது நிமிடக் குறும்படம். ○




ஓர் அம்மன் சன்னிதியின் வெளிமண்டப ஆளோடி, நல்ல பாம்புடன் சேவல் ஒன்று சண்டையிடுகின்றது. இறுதியில் பாம்பு இறந்துவிட சேவல் 'கொக்கரகோ' என வெற்றிக் கூவல் எழுப்புகிறது.

புராண காலப் படத்தில் வரும் காட்சியல்ல இது; உறையூர், பஞ்சவர்ணேசுவர சுவாமி கோயிலில் நடந்த உண்மைச் சம்பவம்! அதை நேரில் பார்த்த பக்தர் உமாபதி கூறுகிறார்:

''நான் கோயிலில் தொண்டு செய்றவன். சொந்தமா டூவீலர் பெண்டு சரிசெய்யும் கடை வெச்சிருக்கேன். இருந்தாலும் தினமும் காலை அஞ்சு மணிக்கு

சேவல்



கோயிலுக்கு வந்து பிராகாரங்களையும் சன்னிதியையும் சுத்தம் பண்ணுவேன்.

ஒரு நாள் காலையில் கோயிலுக்கு வந்தப்ப உள்ளே சேவல் கூவற சத்தம் கேட்டுது. அம்பாள் சன்னிதி மண்டபத்துல அந்தச் சேவல் நின்றது. விரட்டினாலும் போகலை. அப்புறம் கோயிலைச் சுத்தம் செய்துட்டு வந்து பார்த்தா அதிர்ச்சியாகிட்டேன்'' என்று அவர் விவரித்த காட்சிதான் மேலே சொன்னது.

''இந்தக் கோயில்ல ஐந்து இடங்கல்ல சேவலும் யானையும் சேர்ந்த கற்சிற்பங்கள் இருக்கு. ஒவ்வொண்ணும் ஒவ்வொரு விதம். இந்த உறையூருக்கு ஒரு காலத்துல 'கோழியூர்'னு ஒரு பேரே இருந்திருக்கு'' என்கிறார் திருக்கோயில் அலுவலக ஊழியர் ஜெயராமன்.

ஐந்து சிற்பங்களையும் பார்க்க நம்மை அழைத்துச் சென்றார்.

முகப்பு மண்டப வாசல் உட்புறத்தில் மேலே; முகப்பு கோபுரம் உள்ளே தூணில்; கொடி மரத்துக்குத் தெற்கே உள்ள மண்டபத் தூணில் (இதில் யானை மீது சோழ மன்னர் அமர்ந்திருக்க, யானையின் தலையில் அமர்ந்துள்ளது சேவல்); மூலவர் சன்னிதிக்குப் பின்புறம் உள்ள முருகன் சன்னிதி எதிரேயுள்ள தூணில் என நான்கு சிற்பங்களைக் கண்டோம். ஐந்தாவது சிற்பம் வரலாற்றுச் சிறப்புடையது என அம்பாள் சன்னிதியில் சுற்றுச்சுவர் கல் பிராகாரத்துக்கு அழைத்துச் சென்றார். யானையின் தலையில் அமர்ந்துள்ள சேவல் அதன் நெற்றிப் பொடில் கொத்திக் கொண்டிருக்கிறது.


''சோழ மன்னர் பட்டத்து யானைமீது வலம் வருகையில் யானைக்கு மதம் பிடிக்கிறது. அதை அடக்க முடியாமல் சிவனை வேண்ட, சிவன் சேவல் வடிவில் வந்து யானை மீதமர்ந்து, அதன் நெற்றிப் பொட்டில் கொத்தி மதத்தை அடக்குகிறார். அன்று சேவல் வடிவில் வந்த சிவன்தான் இன்றும் பாம்பிடமிருந்து பக்தர்களைக் காப்பாற்ற அதே வடிவில் வந்துள்ளார்'' என்கிறார் கோயில் அர்ச்சகர் சோமசுந்தர குருக்கள்.

இது எதுவுமே தெரியாமல் கோயிலின் உள்ளே கூவிக் கொண்டிருக்கிறது அந்தச் சேவல்!

– ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

வடிவில் சிவன்!





உறையூருக்கு 'கோழியூர்'-னு ஒரு பெயர் இருந்திருக்கு.

"எனக்கு சினிமாவே வேண்டாம்!"

- நிலா அதிரடி



நிலாவின் அடுத்த தமிழ்ப் படம் - ஜகன்மோகினி. ''ஆனால் சினிமாவே வேண்டாம், ஒதுங்கிச் செல்கிறேன்'' என்கிறார் நிலா.

என்ன ஆச்சு?

''தமிழ் சினிமாவுல எனக்கு ஒரே மாதிரியான கதா பாத்திரங்கள்தான் கிடைக்குது. ஆரம்பத்திலிருந்து இன்னைக்கு வரைக்கும் கிளாமரா நடிச்சு நடிச்சு எனக்கு ரொம்பப் போரடிச்சுப் போச்சு. சினிமாவுல நடிக்காட்டி என் உயிர் போயிடாது. சினிமாவை நம்பியும் நான் இல்லை. நான் எதிர்பார்க்கற கதாபாத்திரங்கள் கிடைச்சா மட்டும்தான் நடிப்பேன். பணத்துக்காக நான் படத்துல நடிக்கலை. என் எதிர்பார்ப்பு நிறைவேறும் வரைக்கும் இனிமேல் என்னை நீங்க சினிமாவுல பார்க்கமுடியாது.''




உங்க முதல் படமே பெரிய படமாச்சே?

''நான் என்.டி.டி.வியில வேலை செஞ்சிட்டு இருந்தபோதுதான் 'அன்பே ஆருயிரே' பட வாய்ப்பு வந்துச்சு. என்னை அடுத்த சிம்ரன்னு எஸ்.ஜே.சூர்யா சொன்னார். சிம்ரனுக்கு நான் ஈடாக மாட்டேன். எஸ்.ஜே.சூர்யாவோட ஊக்கத்தை என்னால மறக்கமுடியாது. அவர்தான் இன்னைக்கும் வரைக்கும் என் பெஸ்ட் டைரக்டர். பெஸ்ட் ஃப்ரெண்ட்.''

தமிழ் சினிமாவில் ஏதும் கசப்பான அனுபவங்கள்?



''தமிழ் சினிமாவுல நான் சந்தோஷமா இருந்தேன்னு சொல்லமுடியாது. நல்ல நடிகர்கள், இயக்குநர்கள் கிடைச்சும் எனக்கு இங்கே திருப்தி இல்லை.





எல்லாமே ஒரே மாதிரியான ரோல்கள். கடந்த இரண்டு வருஷங்கள்ல நான் இருபது வாய்ப்புகளை வேண்டாம்னு சொல்லியிருக்கேன். ஒரு தெலுங்கு படத்துல பத்து நாள் நடிச்சுட்டு கதாபாத்திரம் பிடிக்காம விலகிட்டேன். சினிமா மட்டுமே என் விருப்பம் கிடையாது. நான் இப்போ பிஸினஸ்ல இறங்கியிருக்கேன். நியூயார்க்ல எங்களுக்கு ஹோட்டல் இருக்கு. இப்போ இந்தியாவிலயும் கிளைகளைத் திறக்க முடிவு செஞ்சிருக்கோம்.''

தமிழ்ல நீங்க யார்கூட நடிக்க ஆசைப்பட்டீங்க?

''அஜித். தமிழ் சினிமாவுல இருக்கிற ஒரே சர்வதேச அந்தஸ்துள்ள நட்சத்திரம் அவர்தான். அவரால பாலிவுட், ஹாலிவுட் வரைக்கும் போக முடியும். அவர் கூட நான் நடிக்க ஆசைப்பட்டேன். ஆனா அது கடைசி வரைக்கும் நிறைவேறலை.''

- செந்தில்



ராகவேந்திரா நகர் எக்ஸ்டன்ஷன் அந்த நள்ளிரவு இருட்டில் கரைந்து போயிருக்க, விநோத் பைக்கின் வேகத்தைக் குறைத்தான்.

நீலாங்கரையின் வால்பகுதி அது. வீடுகள் அவ்வளவாக இல்லை. இருந்த ஒரு சில வீடுகளும் மனஸ்தாபம் கொண்ட கூட்டணிக் கட்சித் தலைவர்களைப் போல், தள்ளித் தள்ளி ஒவ்வொரு திசையைப் பார்த்தபடி இருந்தன.

விநோத் பைக்கை அந்த வீட்டுக்குப் பின்புறமாய் இருந்த மரத்துக்குக் கீழே நிறுத்திவிட்டு சுற்றும் முற்றும் பார்த்து எந்தத் திக்கிலும் எந்த அசைவும் இல்லை என்று உறுதிசெய்து கொண்டதும், கைகளுக்கு க்ளவுஸ் அணிந்துகொண்டு குட்டையான அந்த காம்பவுண்ட் சுவர் ஏறிக் குதித்து, வாழை மரங்களுக்கு நடுவில் நடந்து வீட்டின் பின்பக்கக் கதவுக்கு வந்தான்.

கதவில் தொங்கிய பூட்டை இடது கையால் பிடித்துக்கொண்டு தன் பாண்ட் பாக்கெட்டில் இருந்த மாஸ்டர் கீ பன்ச்சை எடுத்து ஒவ்வொரு சாவியாய் பூட்டின் வாய்க்குக் கொடுக்க, ஒரு சாவியின் நிர்ப்பந்தத்துக்குப் பூட்டு பணிந்தது.

அது விநோத்துக்குப் பழக்கமான வீடு என்பதால் இருட்டாக இருந்தாலும் சரளமாய் நடந்தான். படுக்கையறைக்குள் நுழைந்தான்.

படுக்கையறை நீலநிற ஜீரோ வாட்ஸ் வெளிச்சத்தில் நிரம்பி உள்ளேயிருந்த பொருட்களைத் தெளிவாய்க் காட்டியது.

சுவர், ஃபோட்டோவில் பூர்ணிமா சிரித்தாள்.

கண்களில் சிவப்பு பரவ, விநோத் அந்த ஃபோட்டோவையே பார்த்தான். ''சிரி... சிரி...! நாளைக்கு இந்நேரம் இந்தச் சிரிப்பு

ராஜேஷ்குமார்

டிக்...டிக்... லிப்ஸ்டிக்...

உன்னை விட்டு நிரந்தரமாய்ப் போயிருக்கும். உன்னோட சின்னத் திரை சங்கத்தைச் சேர்ந்த நடிகர்களும் நடிகைகளும் கூட்டம் கூட்டமாய் வந்து உனக்கு மலர்வளையம் வெச்சு இறுதி அஞ்சலி கூட்டம் நடத்தி...!''

விநோத்தின் ஷர்ட் பாக்கெட்டில் இருந்த செல்ஃபோன் வைப்ரேஷனில் கூப்பிட்டது.

''சொல்லு சிவா...!''

''என்ன போன வேலை முடிஞ்சுதா...?''

''இப்பத்தான் வீட்டுக்குள்ளே நுழைஞ்சேன். இனிமேத்தான் வேலையை ஆரம்பிக்கணும். என்னோட மாஜி பெண்டாட்டி சீரியல் ஷூட்டிங்குக்காக கொடைக்கானல் போயிருக்கா. நாளைக்குக் காலையில் பத்து மணிக்குத்தான் சென்னை திரும்பறா. போட்ட திட்டப்படி வேலையை நிறுத்தி நிதானமாய்ப் பண்ணிட்டு வர்றேன்...''



''ரெண்டு கைக்கும் க்ளவுஸ் போட்டுக்கிட்டியா?''

''ம்... போட்டுக்கிட்டேன்... வீட்டைத் தலைகீழாய்ப் புரட்டிப் போட்டாலும் என்னோட ஃபிங்கர் பிரிண்ட் ஒரு பிட்கூட கிடைக்காது.''

''சரி வேலையை முடிச்சுட்டு உடனடியாய் வீட்டுக்குப் போயிடு. லிக்கர் யூஸ் பண்ணிடாதே. ஈ.சி. ஆர்ல போலீஸ் ரோந்து இருக்கும்.''

''எனக்குத் தெரியாதா..?''

மறுமுனையில் சிவா சிரித்தான். ''நீ ஏற்கெனவே செய்ன் ஸ்மோக்கர்.. உன் மாஜி ஒய்ஃப் பூர்ணிமா செத்துட்டதாய் நியூஸ் வரும்போது அந்த சிகரெட் புகைதான் உனக்கு மூணு வேளை சாப்பாடாய் மாறியிருக்கும். எது எப்படியோ.. போலீஸுக்கு உன்

பேர்ல எந்தவிதமான சந்தே கமும் வராதபடி பார்த்துக்க.''

''நீ பயப்படற மாதிரி எதுவும் நடக்காதுடா. பூர்ணிமா சாகப் போறது ஹார்ட் அட்டாக்ல! நான் லீகலாய் அவகிட்டயிருந்து டைவோர்ஸ் வாங்கி ரெண்டு வருஷமாச்சு. கடந்த ரெண்டு வருஷமாய் எனக்கும் அவளுக்கும் எந்தப் பேச்சுவார்த்தையும் கிடையாது. நிலைமை இப்படி இருக்கும் போது என் பேர்ல போலீஸுக்கு எப்படிச் சந்தேகம் வரும்?''

''சரி... சரி...! பழைய விஷயங்களைப் பேச ஆரம்பிச்சுட்டா உனக்கு டென்ஷன் ஏறிடும். நீ எந்த வேலைக்காகப் போனியோ அந்த வேலையை முடிச்சுட்டு வா. ஒரு விஷயத்தை மட்டும் நல்லா ஞாபகம் வெச்சுக்கோ...''

''நீ எதைச் சொல்றே?''

''நான் உனக்குக் கொடுத்து விட்டிருக்கிற பாய்ஸன் பாட்டிலைத் திறக்கும்போதும் சரி... அதை உபயோகிக்கும் போதும் சரி... அதிகப்படியான நிதானம் வேணும். ஒரு ட்ராப் தெரியாத்தனமாய்த் தெறிச்சுக் கையில பட்டு அது தவறுதலாய் வயிற்றுக்குள் போனாலும் விபரீதமாயிடும். அது ஒரு அரிய வகை பாய்ஸன். பேரு 'டார்டர் எமிடிக்'. அந்த பாய்சனுக்கு நிறமோ, ருசியோ, வாசனையோ கிடையாது.''

விநோத் சிரித்தான். ''இதையே நீ பத்து தடவை சொல்லிட்டே. உதட்டுல பட்டாலும் சரி; நாக்குல பட்டாலும் சரி... உமிழ்நீர் வழியாய் ரத்தத்துல கலந்து பத்து நிமிஷத்துல ஹார்ட் அட்டாக். அதைத் தொடர்ந்து மரணம். ஹார்ட் அட்டாக் ஏற்படும் போது உடம்பு வியர்க்கும். அந்த வியர்வை மூலம் உள்ளே போன விஷம் வெளியே வந்துடும். போலீஸ் சந்தேகப்பட்டு போஸ்ட்மார்ட்டம் பண்ணினாலும் அது கொலைன்னு கண்டுபிடிக்க முடியாது. உடம்புல விஷம் இருந்ததுக்கான அடையாளமே தெரியாது. நீ கொடுத்த விஷத்துல இப்படிப்பட்ட ஏகப்பட்ட ப்ளஸ் பாயிண்ட்டுகள் இருந்த காரணத்தினால்தானே பூர்ணிமாவைத் தீர்த்துக்கட்ட ஒத்துக்கிட்டேன்.''

''ஓ.கே!'' மறுமுனையில் சிவா செல்ஃபோனை அணைத்துவிட, விநோத்தும் செல்ஃபோனை அணைத்துவிட்டு, தன் பேண்ட் பாக்கெட்டில் பத்திரப்படுத்தி வைத்திருந்த பாலியூரீன் கவருக்குள்



உங்களுக்குத் தெரியுமா?

அமெரிக்க 'லாஸ்-ஏஞ்சல்ஸ்' நகரில் பிரபல நகைச்சுவை நடிகர் சார்லி சாப்ளின் போல் மாறுவேடப் போட்டி... நிறையப் பேர் கலந்து கொண்டு அசத்தினர். இதில் உண்மையான சார்லி சாப்ளினும் கலந்து கொண்டார்! அவருக்குக் கிடைத்தது என்னவோ மூன்றாம் பரிசுதான்...

- சுஜாதா கணேஷ்

தூங்கிக் கொண்டிருந்த அந்தச் சிறிய பாட்டிலை வெளியே எடுத்தான்.

பூர்ணிமாவின் ட்ரஸ்ஸிங் டேபிளை நெருங்கினான். உள்ளே பலவித சிவப்பு நிறங்களில் லிப்ஸ்டிக்குகள் ஒரு பிளாஸ்டிக் டப்பாவுக்குள் தெரிந்தன.

விநோத் ஒவ்வொரு லிப்ஸ்டிக்காய் வெளியே எடுத்து பாய்ஸன் பாட்டிலுக்குள் நுழைத்து, அதன் முனைகளை நனைத்தான். அந்த நிறமற்ற, ருசியற்ற, வாசனையற்ற விஷ திரவத்தில் பூர்ணிமா உபயோகப் படுத்தும் லிப்ஸ்டிக்குகள் முங்கிக் குளித்தன. எல்லாவற்றையும் பழையபடி ப்ளாஸ்டிக் டப்பாவில் வைத்தான். பின் வெளியே வந்தான். காத்திருந்த பைக்கில் பரவி கிக்கரை உதைத்து விரட்டினான். பைக் இருட்டில் பறந்தது.

மறுநாள் மாலை. ஆறு மணி.

சோபாவுக்குச் சாய்ந்து நொறுக்குத் தீனியோடு டீ.வி. பார்த்துக் கொண்டிருந்த விநோத், காலிங்பெல் கதறும் சத்தம் கேட்டு எழுந்து போய்க் கதவைத் திறந்தான்.

கதவுக்கு வெளியே நின்றிருந்த சாதுர்யா விநோத்தைப் பார்த்ததும், ''நீங்க மிஸ்டர் விநோத்...?'' என்றாள்.

''யெஸ்''

''நான் சாதுர்யா.. போலீஸ் க்யூ ப்ராஞ்ச்...''

இருதயம் உதைத்துக் கொண்டாலும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் முகத்தை இயல்பாய் வைத்துக்கொண்டு கேட்டான்.

''என்ன விஷயம்...?''

''உங்ககிட்டே ஒரு சின்ன என்கொய்ரி..''

''ப்ளீஸ் கம்... உட்காருங்க...''

சாதுர்யா உட்கார்ந்தாள்.

''மிஸ்டர் விநோத்.. உங்க மனைவி பூர்ணிமாவுக்கு இன்னைக்குக் காலையில் திடீர்னு ஹார்ட் அட்டாக் ஏற்பட்டதும் உடனடியாய் ஹாஸ்பிடலில் அட்மிட்டானதும் உங்களுக்குத் தெரியுமா?''

''தெரியும்.''

''எப்படி?''

''என் மாஜி மனைவியோட ஃப்ரண்ட் வைதேகி. ஃபோன் பண்ணிச் சொன்னா. நேர்லயே வந்தும் சொன்னா.''

''ஏன் போய்ப் பார்க்கலை...?''

''கடந்த ரெண்டு வருஷமாய் எங்களுக்குள்ளே எந்தப் பேச்சுவார்த்தையும் கிடையாது. டைவர்ஸூம் ஆயிடுச்சு. எதுக்காக அவளைப் போய்ப் பார்க்கணும்?''

''நீங்க சொல்றது சரிதான் மிஸ்டர் விநோத்... பட்... ஹார்ட் அட்டாக் வந்து சீரியஸான நிலைமையில் ஹாஸ்பிடலில் அனுமதிக்கப்பட்ட உங்க மனைவி சிகிச்சை பலனில்லாமல் இறந்துட்டாங்க...''



சாதுர்யா பேசறேன்...

கொலை செய்யப்பட்ட டாக்ஸி ட்ரைவர் எத்திராஜின் கையில் ஒட்டியிருந்த வட்ட வடிவமான பளபளப்பான பொருள் காண்டாக்ட் லென்ஸ். அதை ஒரு ஆப்டிக் சென்டரில் காட்டியபோது, அரிய வகையான BAUSCH - LOMB லென்ஸ் என்றும், சமீபத்தில்தான் வாங்கப்பட்டது என்றும் தெரிய வந்தது. மேலும் விவரங்களைத் தெரிந்துகொள்ள கண் டாக்டர் ஹரிகிருஷ்ணனை அணுகினேன். அவர் தந்த தகவலின் மூலம் மெடிக்கல் சென்டரில் சென்று விசாரித்ததில், அந்த லென்ஸை சமீபத்தில் வாங்கிய புவனைப் பற்றிய தகவல் கிடைத்தது. சரியான விடையை யூகித்து எழுதிய வாசகர்கள் விவரம் வட்ட மேஜை பக்கத்தில்..



''ஓ.. அவளோட மரணத்துக்கு என்னுடைய ஆழ்ந்த அனுதாபங்கள்.''

''ஸாரி மிஸ்டர் விநோத். நீங்க நினைக்கிற மாதிரி அவங்க இயற்கையான முறையில் ஹார்ட் அட்டாக் வந்து இறந்து போகலை.''

''பின்னே..?''

''பாய்ஸன்.''

''எப்படி...?''

- நடுக்கமாய்க் கேட்டான்.

''பூர்ணிமா உதட்டுக்கு லிப்ஸ்டிக் தீற்றிக்கிட்டிருந்த போது கூரியர் பையன் தபால் ஏதோ கொடுக்க வந்திருக்கான். பாதி உதட்டுக்கு லிப்ஸ்டிக் பூசிய நிலையில் பூர்ணிமா வாசலுக்கு வந்து லெட்டர் வாங்கும்போது அப்படியே மயக்கம் போட்டு விழுந்திருக்காங்க. உடனே கூரியர் பையன் ஆம்புலன்ஸுக்கு ஃபோன் பண்ணியிருக்கான்.''

விநோத்தின் இருதயம் குதிரை ரேஸ் மைதானமாய் மாறியிருக்க, சாதுர்யா தொடர்ந்தாள்.

''பூர்ணிமாவுக்கு டாக்டர்ஸ் ட்ரீட்மெண்ட் கொடுத்துட்டு இருக்கும்போதுதான் உதட்டில் இருந்த இந்த லிப்ஸ்டிக் பூச்சை நோட் பண்ணி, டெஸ்ட் பண்ணியிருக்காங்க. லிப்ஸ்டிக்கில் பாய்ஸன் இருந்தது சோதனையில் தெரிய வந்திருக்கு. டாக்டர்ஸ் இந்தத் தகவலை எனக்கு இன்ஃபார்ம் பண்ணினாங்க. நான் உடனே பூர்ணிமாவின் வீட்டுக்குப் போய் 'ஸீன் ஆஃப் க்ரைம்' பார்த்தேன். பூர்ணிமா உபயோகப்படுத்தின மற்ற லிப்ஸ்டிக்குகளையும் சோதனைக்கு உட்படுத்திப் பார்த்தப்ப அதிலும் பாய்ஸன் இருந்தது உறுதியானது. ஸோ... இப்ப என்னோட சந்தேகமெல்லாம் பூர்ணிமா வீட்ல இல்லாதபோது யாரோ வீட்டுக்குள்ளே வந்து அவள் உபயோகப்படுத்தற லிப்ஸ்டிக்கில் பாய்ஸனைச் சேர்த்திருக்காங்க. அது யாராய் இருக்கக்கூடும்ன்னு விசாரிக்கத்தான் உங்களைத் தேடி வந்திருக்கேன்.''

''நீங்க என் மேல சந்தேகப்படறீங்களா?''

சாதுர்யா புன்னகைத்தாள். ''நோ... நோ... இது ஜஸ்ட் முதற்கட்ட விசாரணைதான். ஆனால், உங்களோட முழு ஒத்துழைப்பு எனக்குக் கிடைக்குமா?''

''கண்டிப்பாய்க் கிடைக்கும்.''

''கடந்த இரண்டு வருஷமாய் நீங்க பூர்ணிமாவைப் பார்க்கவேயில்லையா?''

''இல்லை.''

''ஆனா நேத்து மிட் நைட் நீலாங்

கரைக்குப் போய் வந்திருக்கீங்க... சரியா?''

''எ...எ... என்ன சொல்றீங்க?''

''நேத்து மிட் நைட் நீங்க உங்க பைக்ல நீலாங்கரைக்குப் போயிருக்கீங்க. போயிட்டுத் திரும்பற வழியில் நீலாங்கரை பஞ்சாயத்து ஆபீஸுக்குப் பக்கத்தில் பாண்டிச்சேரிக்குப் போகும் பஸ்கள் நிற்கிற இடத்தில் ஒரு பெட்டிக் கடையில் சிகரெட் வாங்கியிருக்கீங்க. நீங்க ஒரு செயின் ஸ்மோக்கர். உங்களால சிகரெட் பிடிக்காம கொஞ்ச நேரம் கூட இருக்க முடியாதுன்னு பத்து நிமிஷத்துக்கு முன்னாடிதான் தெரிஞ்சுக்கிட்டேன்.''

''நோ...ஓ...ஓ...!'' என்று விநோத் நீளமாய்க் கத்தி ஏதோ பேச முயல, சாதுர்யா கையமர்த்தினாள்.

''பொறுங்க விநோத்...! நான் சொல்ல வந்ததை முழுசா சொல்லிடறேன். நீங்க அந்தப் பெட்டிக் கடையில் சிகரெட் வாங்கியிருக்கீங்க. பெட்டிக் கடைக்காரன் கிட்டே நூறு ரூபாய் நோட்டைக் கொடுத்தப்ப அவன் சில்லறை இல்லேன்னு சொல்லியிருக்கான். நீங்க உடனே மீதிப் பணத்துக்கு அன்னைக்கு வந்த ரெண்டு வார இதழ்களை வாங்கியிருக்கீங்க. சரியா?''

விநோத் உள்ளுக்குள் வியர்த்தான்.

''விநோத்... இதெல்லாம் எனக்கு எப்படித் தெரிஞ்சதுன்னு நீங்க யோசனை பண்ணலாம். இதைச் சொன்னது யார் தெரியுமா...? பூர்ணிமாவோட ஃப்ரண்ட் வைதேகி. பூர்ணிமா ஹாஸ்பிடலில் அட்மிட்டாகியிருக்கான்னு உங்க கிட்ட சொல்றதுக்காக வைதேகி இங்கே வந்தபோது, நீங்க உள்ளே கிச்சன்ல காப்பி போட்டுக்கிட்டிருந்தீங்க. நீங்க வர்ற வரைக்கும் வைதேகி டீபாய் மேலிருந்த அந்த ரெண்டு வார இதழ்களைப் புரட்டிப் பார்த்துட்டு இருந்திருக்கா. வார இதழ்களின் பின் அட்டையைப் பார்த்ததும் வைதேகிக்குப் பயங்கர அதிர்ச்சி. உடனே அந்த இரண்டு புத்தகங்களையும் எடுத்து வைச்சுக்கிட்டா. உங்களுக்குச் சந்தேகம் வராத முறையில் பேசிட்டுக் கிளம்பிட்டா.''

விநோத் குழப்பமாக சாதுர்யாவைப் பார்க்க, அவள் சிரித்தாள்.

''அந்த வார இதழ்களின் பின் அட்டையில் என்ன இருந்ததுன்னு உங்களுக்குச் சொல்றதுக்கு முந்தி இன்னொரு அதிர்ச்சியான விஷயத்தையும் உங்களுக்குச் சொல்லிடறேன். பூர்ணிமா இன்னமும் ஐ.ஸி.யூனிட்டில்தான் இருக்கா. அவ இறந்துட்டதாய் நான் சொன்னது பொய். நீங்க கொஞ்ச நேரமாவது சந்தோஷமாய் இருக்கட்டும்னுதான் அப்படியொரு பொய்யைச் சொன்னேன். இனி அந்த வார இதழ்களின் பின்அட்டைகளுக்கு வருவோம்.''

சாதுர்யா பேச ஆரம்பித்தாள்.

துப்பறியும் போட்டி-14

வாசகர்களே!

விநோத் நீலாங்கரைக்குச் சென்று வந்த உண்மை வெளிச்சத்துக்கு வரக் காரணமாய் இருந்த அந்தத் தடயம், அன்றைய தினம் வெளிவந்த வார இதழ்களின் பின் அட்டையில் இருந்தது.

அந்தத் தடயம் எதுவாக இருக்கலாம்? கண்டுபிடித்து எழுதுங்கள்.

க்ளு: நம் இந்திய ஜனாதிபதிக்கு மக்கள் வைத்திருக்கும் செல்லப் பெயர்.



சரியான பதிலை போஸ்ட் கார்டில் எழுதி, துப்பறியும் போட்டி - 14 என்று குறிப்பிட்டு கல்கி முகவரிக்கு அனுப்புங்கள்.

ஆசிரியர் தீர்ப்பே இறுதி. கடைசி தேதி : 07.10.09.

அடித்தட்டு மக்களின் அனுதாபி!

"ஒரு வருமானச் சான்று வாங்கணும்னாகூட ஆர்.ஐ.கிட்ட அலைஞ்சு, தாசில்தார்கிட்ட போறதுக்குள்ள பெரும்பாடாயிடுது. இடையிலே எத்தனை பேர்கிட்ட கையெழுத்து வாங்கணும்னு எதுவுமே தெரியாமே, மத்தவங்க பதிலை நம்பிக் காத்திருக்கிற பாமர மக்களோட நிலைமை பரிதாபமா இருக்கும். இவங்க அறியாமையைச்



★ வசந்தி

சாதகமாகப் பயன்படுத்திக்கிட்டு ஐம்பது, நூறுன்னு லஞ்சம் வாங்கற ஒரு சில அதிகாரிகளை நினைச்சா கோபம்தான் வரும்.

இது ஏன் என்னோட களமா இருக்கக்கூடாதுன்னு யோசிச்சேன். சீரியலைப் பார்த்து பொழுது போக்கறதைவிட வாழ்க்கையில கஷ்டப்படுற அடித்தட்டு மக்களுக்கு நம்மாலான நல்லது பண்ணலாமேன்னு யோசிச்சேன். கையெழுத்தே போடத் தெரியாதவங்களுக்கு ரேஷன் கார்டு வாங்கறதுக்கான விதிமுறை எங்கே தெரிஞ்சிருக்கப் போகுது? அதனால அது மாதிரி வேலைகளை பத்து பைசாகூட லஞ்சம் கொடுக்காம என்னோட முயற்சியாலே வாங்கிக் கொடுத்து அவங்க சந்தோஷத்துல நானும் மன நிம்மதி அடைஞ்சிருக்கேன். அந்த நிம்மதியில, நான் பட சேவைங்கறது செய்யச் செய்ய இனிக்குது'' என்று தன் சேவை ஆர்வம் துளிர்விட்ட கதையை, பெருமையோடும், புன்னகையோடும் சொல்கிறார் சமூக சேவகி வசந்தி.

இவருக்கு தமிழ்நாடு சிற்றூராட்சி தலைவர்கள் சங்கம் 'கிராம சேவா ரத்னா' விருது வழங்கியுள்ளது. பெண்ணாக இருந்தாலும் எந்தப் பிரச்னையையும் துணிவாய் எதிர்க்கிற மன உறுதி இவரிடம் நிறையவே இருக்கிறது.

கவுண்டம்பாளையம் கிராமத்தில் அரசு அனுமதி பெறாமல் இயங்கிக் கொண்டிருந்த கல்குவாரியை மக்களை ஒன்று திரட்டிப் போராடி நிறுத்திக் காட்டினார். இன்று அங்கு காமாட்சி நகர் என்கிற ஒரு கிராமமே உருவாகியிருக்கிறது.

ஈரோடு மாவட்டம் கோபி வட்டம் கொங்கர்பாளையம் இவரது சொந்த ஊர். அங்கே உள்ள நடுநிலைப்பள்ளியை உயர் நிலைப் பள்ளியாக மாற்ற பல லட்ச ரூபாய் தேவைப்பட்டது. அதற்காக கல்விக் குழு கூடியபோது, வசதி படைத்தவர்கள்கூட இந்தச் செயலில் பின் வாங்கினர். இவர் தாமாகவே முன் வந்து முதல் லட்சத்தை மக்களின் ஆதரவோடு திரட்டினார். அப்பள்ளி உயர் நிலைப் பள்ளியானதில் இவருக்கும் முக்கியப் பங்கு உண்டு. ''பணத்தால் மட்டும் செய்வது சேவை அல்ல. உழைப்பாலும், உள்ளத்தாலும் செய்வதுதான் மிகப் பெரிய சேவை'' என்கிறார் வசந்தி. அந்த மிகப் பெரிய சேவையால் தான் இவர் இன்று சுற்றுவட்டார அடித்தட்டு மக்களின் அபிமானி!

படங்கள், செய்தி:
கி.ச.திலீபன்



கதைகள், கவிதைகள், பரிசுப் போட்டி...

கோகுலம்

அக்டோபர் 2009 விலை ரூ.8/-

குழந்தைகளின் குதூகலம்!

பட்டு என்றாலே நம் பெண்களுக்குத் தெரிந்ததெல்லாம் காஞ்சி, ஆரணி, தர்மாவரம், போச்சம்பள்ளி, பனாரஸ்... போன்ற பட்டுப் புடைவைகள்தான்! ஒரே மாதிரி பட்டுப் புடைவையே வாங்கி போரடித்தவர்களுக்கு வேறு மாதிரி யான சில பட்டுப் புடைவைகளைப் பற்றிச் சொல்கிறோம். கட்டிக்கிட்டு கலக்குங்க.

பாகல்பூர் சில்க்: பீகாரிலிருக்கும் பாகல்பூரில் தயாராகும் சில்க் மிக நேர்த்தியானது. சுமார் 100 வருடங்களாக நெசவாளர்கள் நெய்து வரும் பாகல்பூர் பட்டுக்கு வெளிநாட்டில் ஏக கிராக்கி! சுமார் நூறு கோடி பிஸினஸாம் வருடத்துக்கு... சில்க் சிட்டி என்ற செல்லப் பெயருடைய பாகல்பூர் கர்நாடகாவுக்கு அடுத்து பட்டு ஆடை தயாரிப்பில் இரண்டாம் இடத்திலிருக்கிறது. பாகல்பூர் சில்க் புடைவைகளின் விலை சற்றே அதிகம். மூவாயிரத்துக்கு மேலேதான்...

கர்ச்சோலா (Gharchola): குஜராத்தின் பாரம்பர்ய சில்க் கர்ச்சோலா. கண்ணைப் பறிக்கும் கலர்கள், ப்யூட்டிஃபுல் டிஸைன்ஸ், இதன் ப்ளஸ் பாயிண்டுகள். குஜராத்திய மணப்பெண்கள் திருமணத்தன்று கண்டிப்பாகக் கட்டும் புடைவை கர்ச்சோலா. இவ்வகைப் புடைவையில் ஹிட் காம்பினேஷன் ரெட் அண்ட் வொயிட்! பொதுவாக பெரிய பெரிய ஜரிகை கட்டத்தினுள் சின்னச் சின்ன கோல்டு டிஸைன்ஸ் இருக்கும். மிக பாப்புலரான டிஸைன் என்றால் மயில், தாமரை! .

குஜராத்தில் இப்புடைவை எங்கு நெய்யப் பட்டாலும், ஜாம் நகரில்தான் சாயம் போடப்படு

உடையழகு...நடைபழகு...

கிறது. ஏனென்றால் இங்குதான் மாசுபடாத தண்ணீராம். ராஜ்கோட்டிலும் இப் புடைவைகள் அதிக அளவில் தயாராகி உலகெங்கும் போகின்றன.

ப்ளாக் ப்ரின்ட் மற்றும் டை (Tie) அண்ட் டை (Dye) டெக்னிக் டிஸைன்கள் பாரம்பர்யம் + கான்டெம்பரரி லுக் கொடுக்கும். இப்புடைவைகளின் விலை ஆயிரத்திலிருந்து முப்பதாயிரம் ரூபாய் வரை.

தான்ச்சோய் (Tanchoi): பனாரஸ் பட்டு எவ்வளவு ஃபேமஸோ அதே அளவு தான்ச்சோய் புடைவைகளும் பிரபலம். இப்புடைவையில் போட்டிருக்கும் டிஸைன் மற்றும் சில்க்கின் மென்மையினால் பெண்கள் மயங்கிப் போகிறார்கள். இப்புடைவையின் பின்னே ஒரு கதையே நெய்யப்பட்டருக்கிறது. மூன்று பார்ஸி சகோதரர்கள் சீனா போயிருந்தபோது ப்ரோகேட் வீவிங் டெக்னிக்கைக் கற்று சூரத்தில் அறிமுகப் படுத்தினர். 'தான்ச்சோய்' என்றால் 'மூன்று சோயி' (மூன்று சகோதரர்கள்) என்று பொருள். முதலில் பார்ஸி இனத்தினரே இவ்



வகைப் புடைவைகளை அதிகமாக உபயோகித் தனர். பிறகு பனாரஸ் நெச வாளர்கள் இதைக் கற்று சற்றே குறைந்த விலையில் தயாரித்தனர். இரண்டாயிரம் ரூபாய் கொடுத்தால்தான் ஓரளவு நல்ல டிஸைன் கிடைக்கும்.

தான்ச்சோய் சில்க் புடைவைகளில் மினியேச்சர் டிஸைன்கள் - பூக்கள், பறவைகள் போன்ற மோடிஃப் பிரபலம். பிரைட் ப்ளூ, பர்ப்பிள், கிரீன், ரெட், மரூன் போன்ற கலர்களில் பாட்டர்ன்ஸ் கண்களை அள்ளும்.

கோட்டா டோரியா: ராஜஸ்தான் கோட்டாவில் தயாராகும் புடைவை. இதற்கு 'மசூரியா மல்மல்' என்று செல்லப் பெயரும் உண்டு. மசூரியா என்றால் மைசூர். 17, 18ம் நூற்றாண்டுகளில் மைசூரிலிருந்து நெசவாளர்கள் கோட்டா வரவழைக்கப்பட்டனர். கூடவே அங்கிருந்து இந்த ரகப் புடைவைகள் நெய்வதற்கான மெட்டீரியலும் கொண்டு வந்தனர். ட்ரான்ஸ்பரண்ட் + லேசுத் தன்மை இதன் ஸ்பெஷாலிட்டி.


இவ்வகைப் புடைவைகள் காட்டன் + சில்க் மிக்ஸ்ட். காட்டன், புடைவைகளுக்கு உறுதி தரும். சில்க், கண்ணாடி போலிருக்கும் ட்ரான்ஸ் பரன்ஸிக்கு! பொதுவாக இதில் ஜ்யோமெட்ரிக் பாட்டர்ன்களே அதிகம். உலகெங்கும் கோட்டா டோரியா என அறியப்படும் புடைவை, கோட் டாவில் மட்டும் மசூரியா என்றே இன்றுவரை அழைக்கப்படுகிறது. வொயிட்தான் கோட்டா டோரியாவில் டிரெஷனல் கலர். இன்று



கர்ச்சோலா பட்டுடுத்தி...

பல்வேறு கலர்கள் மட்டுமல்லாமல் பாக்ரு மற்றும் சாங்னேர் ப்ளாக் பிரிண்டுகள் போடப்பட்டு வரும் கோட்டா டோரியா வுக்கு ஏக மவுசு. ஆயிரம் ரூபாயி லிருந்து கிடைக்கும். ''ராஜஸ்தானுக் குப் போறியா கோட்டா டோரியா வாங்கியா...'' என பெண்கள் பாட ஆரம்பிச்சுட்டாங்க...

– லதா சேகர்



அக்கம் பக்கம்

வழக்கம் போல இந்த வருடமும் குஜராத்தில் 'வைப்ரன்ட் குஜராத்' என்று நவராத்திரிக் கொண்டாட்டம் நடந்தாலும், கடந்த ஆண்டு காந்தி நகர் எம்.பி.யும் பா.ஜ.க. மூத்த தலைவருமான அத்வானி தம் மனைவியுடன் கலந்து கொண்டார். இந்த ஆண்டு ரொம்ப சிம்பிளாக ஏற்பாடு செய்து, நரேந்திர மோடியே தலைமை தாங்கிவிட்டார். ***(ஏங்க! ஜஸ்வந்த்சிங் கூட ஃப்ரீயாத்தான் இருக்காரு! அவரைக் கூப்பிட்டிருக்கலாமே!)***

குஜராத் கிரிக்கெட் சங்கத்துக்கான தேர்தல் விவகாரம் சுப்ரீம் கோர்ட் வரை போக, தாமதம் இல்லாமல் தேர்தல் நடத்த அங்கே

குஜராத் 50 மோடி 60 !

உத்தரவிட்டார்கள். அண்மையில் நடந்த தேர்தலில் பத்தாண்டு காலம் கு.கி. சங்க செயலாளர் பதவியில் ஸ்ட்ராங்காக உட்கார்ந்திருந்த காங்கிரஸ்காரரான நரஹரி அமீனை ஜெயித்து, நாற்காலியைக் கைப்பற்றிவிட்டார் நரேந்திர மோடி. ***(ம்... மோடி சிக்ஸர் சிக்ஸர் அடிச்சாலும், ஜட்ஜுங்க 'நோ பால்'ன்னு சொல்லிடறாங்களே!)***

அண்மையில் மாணவர்களுடன் வீடியோ கான்ஃபரன்சில் பேசிய முதலமைச்சர் மோடி, 'ஒவ்வொரு மாணவரும் வருடத்தில் நூறு மணி நேரம், எழுதப் படிக்கத் தெரியாதவருக்குப் படிப்பு சொல்லித் தரச் செலவிட வேண்டும். அடுத்த வருடம் குஜராத் மாநிலத்தின் பொன்விழா. அப்போது நூறு சதவிகித எழுத்தறிவுள்ள மாநிலமாக இருக்க வேண்டும்'' என்று கூறி இருக்கிறார். ***(பொன்விழாக் கொண்டாட்டத்தின்போது தாய்க்குலத்துக்கெல்லாம் இலவச தங்க நாணயம் குடுங்க! அடுத்த எலெக்ஷன்ல ஈஸியா கெலிச்சிடலாம்!)***

தமது 60வது பிறந்த நாளன்று அரசியல் வட்டாரத்தில் ஓர் இன்ப அதிர்ச்சி கொடுத்தார் மோடி. அவரது அரசியல் எதிரியாக இருந்த முன்னாள் குஜராத் முதலமைச்சர் கேசுபாய் பட்டேல் வீட்டுக்குச் சென்று அவரது ஆசி பெற்றார். மோடிக்காகப் பிரத்யேகமாக மிர்த்யுஞ்சய ஜபம் செய்து, யந்திரம் ஒன்றையும் அளித்து வாழ்த்தினார் கேசுபாய் பட்டேல். ***(கல்யாண வீட்டுக்குக் கூட அரசியல் எதிரிகள், வெவ்வேறு நேரத்துல போய் வாழ்த்தறதுதான் எங்க ஊர் கல்ச்சர்!)***

சமீபத்திய இடைத்தேர்தல்களில் காங்கிரஸ் தோற்றாலும், காங்கிரஸ்காரர்கள், ''பா.ஜ.க தோற்றதற்கே மோடியின் பிரசாரம் தான் காரணம். தோல்வி பயத்தில்தான், மோடி இடைத்தேர்தல் பிரசாரத்துக்கே வரவில்லை. குஜராத்தின் வளர்ச்சியில் முந்தைய காங்கிரஸ் முதலமைச்சர்களுக்கும் பங்கு உண்டு'' என்றெல்லாம் ஸ்டேட்மெண்ட் விட்டிருக்கிறார் குஜராத் காங்கிரஸ் கமிட்டி தலைவரான சித்தார்த் பட்டேல். ***(பேசாம வோட்டிங் மிஷின் மேல புரட்சிகரமா பழிபோட வேண்டியதுதானுங்களேழு டியர் தம்பி!)***

அடுத்த இரண்டு ஆண்டுகளில் பத்து, பன்னிரண்டு சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் குஜராத்தில் வரவிருக்கின்றன. அங்கே தொழில் புரட்சி மட்டுமல்லாமல் மதுப் புரட்சியும் நடக்கப் போகிறது! ஆம்! மதுவிலக்கை அமல்படுத்தும் மாநிலமான குஜராத்தில் சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் மதுவிலக்கு விதிகள் தளர்த்தப்படுகின்றன. ***(மகாத்மா காந்திக்கு ஜே! வாழ்க குடிமக்கள்!)*** **– கௌதம்ராம்**

'தொடர்ந்து பிரமாண்டமான வெற்றிப் படங்களா எடுத்துக்கிட்டிருக்காரு! அவருக்கு உடம்பெல்லாம் மச்சம்!' இதுதான் 'ஜென்டில்மேன்', 'காதலன்', 'இந்தியன்' படங்களைப் பார்த்தபோது டைரக்டர் ஷங்கர் பற்றி, சாதாரண ரசிகனாக எனது அபிப்ராயம். அவர் 'ஜீன்ஸ்' படத்தை எடுத்துக்கொண்டிருந்த சமயத்தில் ஆர்ட் டைரக்டர் தோட்டா தரணியிடமிருந்து ஷங்கர் என்னைச் சந்திக்க விரும்புவதாக ஃபோன் வந்தது. தோட்டா தரணியின் அலுவலகத்தில் ஷங்கரைச் சந்தித்தேன். ''ஜீன்ஸ் படம் முடிந்தபின் நான் இயக்கும் படத்துக்கு நீங்கள் ஒளிப்பதிவு செய்ய வேண்டும்'' என்று கேட்டார். நான் சம்மதித்தேன்.

''ஒரு சாதாரண மனிதன் ஒரே ஒரு நாள் முதலமைச்சராவதுதான் கதை'' என்று ஒற்றை வரியில் அவர் சொன்னதைக் கேட்டு ஆச்சரியப்பட்டேன். கதையை முழுக்கக் கேட்டு விட்டு ''இது அரசியல் கதை. படத்தை எப்படி விஷுவலாக கலர்ஃபுல்லாக்குவது என்பது பற்றி நிறைய யோசிக்க வேண்டும்'' என்றேன்.

அந்த ஒரு மணி நேரத்தில் ஷங்கர் பற்றி பல வித்தியாசமான விஷயங்களைக் கவனித்தேன். நான் பேசும்போது மிக ஆர்வமாகவும் உன்னிப்பாகவும் கவனித்தார். சில விஷயங்களைச் சொன்னவுடன், தன் பாக்கெட்டில் வைத்திருந்த சின்ன குறிப்பு நோட்டில் எழுதி வைத்துக் கொண்டார். ஏதாவது புரியவில்லை என்றால், இன்னொரு முறை கேட்டுத் தெரிந்து கொள்ள சற்றும் ஈகோ பார்க்கவில்லை.



14

கே.வி.ஆனந்த்

ஸ்டார்ட்... கேமரா... ஆனந்த்!



''லூசாப்பா நீ!''

சிம்பிளான அவரது அணுகுமுறை என்னை ஆச்சரியப்படுத்தியது.

அவருடைய வெற்றியின் ரகசியமே, 'கூலித்தொழிலாளி முதல் அயல்நாட்டு இந்தியர்கள் வரையிலான தம்முடைய பலதரப்பட்ட ரசிகர்கள் அனைவரும் எதிர்பார்க்கும் விஷயங்கள் எவை என்று கண்டறிந்து அவற்றைத் தம் படங்களில் இடம் பெறச் செய்யும் அவரது பிரமாண்டமான ஸ்டைல்தான்' என்று தெரிந்தது. ஷங்கர் பற்றிய என் ஆரம்பக் கருத்து எத்தனை அபத்தம் என்று புரிந்து கொண்டேன்.


முதல்வன் படப்பிடிப்பு நடந்து கொண்டிருந்தபோது, ஒரு நாள் இரவு எட்டு மணிக்கு ஷூட்டிங் முடிந்து எல்லோரும் புறப்பட்ட சமயத்தில் ''ஆனந்த்! நாளைக்கு ரகுவரனை அர்ஜுன் டீ.வி.யில் பேட்டி காணும் ரொம்ப முக்கியமான ஸீன்! படத்திலேயே அதிரடியான ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தப்போகும் இந்த ஸீன், திரையில் பன்னிரண்டு நிமிடம் வரும். ஒரு வினாடி போரடித்தாலும், படத்தையே அது பாதித்துவிடும். அதை எப்படி விறுவிறுப்பாக எடுப்பது என்று கொஞ்சம் டிஸ்கஸ் பண்ணிடலாமா?'' என்று கேட்டார். காட்சி, வசனம், கேமரா கோணம், கேமரா மூவ்மென்ட் என்று பல்வேறு அம்சங்களையும் பற்றிப் பேசி முடிவு செய்துவிட்டு நாங்கள் புறப்பட்டபோது நள்ளிரவாகி இருந்தது.

முதல்வன் படம் வெளியாகி பெரும் வெற்றி பெற்றதையடுத்து, அனில் கபூர் நடிக்க இந்தியில் நாயக் என்ற பெயரில் எடுக்கப்பட்டது! அதில் ஒரு சண்டைக் காட்சியில், அனில்கபூர் தரையிலிருந்து எழும்பி, அந்தரத்தில் இருக்கும் ஒரு வினாடியை அப்படியே ஃப்ரீஸ் செய்து, அதை டிராலி போட்டு 360 டிகிரியில் படம் பிடிக்க விரும்பினார் ஷங்கர்.

''லண்டனில் ஒரு ஃபோட்டோகிராஃபி ஸ்பெஷலிஸ்ட் நிறுவனம் இருக்கிறது. இரண்டு பேர் நூற்றுக்கும் அதிகமான கேமரா உபகரணங்களுடன் வந்து, தரையில் வட்ட வடிவில் ஸ்டில் கேமராக்களை நிறுத்தி வைத்து, ஹீரோ அந்தரத்தில் இருக்கும் கணத்தில் ஒரே கிளிக் மூலமாக அத்தனை கேமராக்களையும் இயக்கிப் படம்பிடிப்பார்கள். அப்படி எடுக்கப்பட்ட ஃப்ரேம்களை இணைத்து அந்தக் காட்சியை உருவாக்கலாம்'' என்றேன்.

அதற்கு சுமார் பத்து லட்சம் ரூபாய்

செலவாகும் என்று தெரிய வந்ததால், அதே காட்சியை, குறைந்த செலவில் எடுக்க முடியுமா என்று யோசித்தோம். நாமே வட்ட வடிவில் ஐம்பது மூவி கேமராக் களை நிறுத்திப் படம் பிடித்து, நமக்கு வேண்டிய ஃப்ரேம்களைத் தேர்ந்தெடுத்து, இணைத்துக் கொள்ளலாம் என்ற என் ஐடியாவை ஷங்கர் ஏற்றுக்கொண்டார். எவ்வளவோ முயற்சி செய்தும் ஐம்பது கேமராக்கள் கிடைக்க வில்லை. முப்பத்தெட்டு கேமராக்களை வைத்துச் சமாளித்தோம். செலவு மூன்றரை லட்சத்தில் முடிந்தது.





'கனாக்கண்டேன்' படத்தை முடித்து விட்டு, 'அயன்' படத்துக்கான ஆரம்பக் கட்ட வேலையைப் பார்த்துக் கொண்டிருந்தபோது, மீண்டும் டைரக்டர் ஷங்கரிடமிருந்து ஃபோன். ஏவி.எம்.முக் காக ரஜினி நடிக்க தாம் இயக்கும் 'சிவாஜி' படத்துக்கு நான் ஒளிப்பதிவு செய்ய வேண்டும் என்று சொன்னார்.

சிறுவயது முதலே நான் ரஜினி ரசிகன். என் திருமணத்துக்குப் பிறகு நானும் என் மனைவி சசியும் சேர்ந்து பார்த்த முதல் படம் பாட்ஷா. ஆனால் 'ரஜினி'படத்தில் அவர்தான் இருப்பார்; கேமராமேனுக்குத் தனி அடையாளமோ, அங்கீகாரமோ கிடைக்காது' எனத் தயங்கினேன். ''ஒரு நாள் டைம் கொடுங்கள்'' என்று ஷங்கரி டம் கேட்டேன்.

அன்று இரவு வீட்டில் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது, ரஜினி பட வாய்ப்பு வந்திருப்பதையும், நான் ஒப்புக்கொள்ளப் போவதில்லை என்றும் சொன்னேன்.

என் பெண்கள் சாதனா, ஸ்னேகா இரு வரும், ''லூசாப்பா நீ? ரஜினி படத்தை வேணாங்கறியே?'' என்று எதிர்ப்பு தெரிவித் தனர். சமையல் அறையி லிருந்து தோசை எடுத்து வந்த மனைவி சசி, ''என்

"ரகுவரனை அர்ஜுன் பேட்டி காணும் பன்னிரண்டு நிமிட ஸீன். அதை எப்படி விறுவிறுப்பாக எடுப்பது?"

னது... ஷங்கர் - ரஜினி காம்பினேஷன் பட சான்ஸை வேண்டாம்னு சொல்லப் போறீங் களா?'' என்று கேட்டபடியே தோசையைத் தட்டில் போட்டபோது, விட்டால் தோசைக் கரண்டியாலேயே அடித்து விடுவார் போல இருந்தது. ''ரஜினி படத்தை வேணான்னு சொல்லாதடா!''- இது என் அம்மா. ''ரஜினி படமும் ஒண்ணு பண்ணேன்! நல்ல அனு பவம் கிடைக்கும்!'' - இது அப்பா.

அரை மணி நேரத்தில் என் வீட்டுக் குள்ளேயே அனைவருக்கும் எதிரியாகி விட்டதுபோல உணர்ந்தேன். மறுநாள் காலை ஷங்கருக்கு ஃபோன் செய்து என் சம்மதத்தைத் தெரிவித்தேன்.

(ஆக்ஷன் அடுத்த இதழில் முடியும்)

எழுத்து வடிவம்: **எஸ்.சந்திரமௌலி**



- கே.ஆனந்தன்



- ஜி.சுந்தரராஜன்

ஜே.எஸ்.ராகவன்

அமெரிக்க யாத்திரை!

'கொலம்பஸுக்கு முன்னாலேயே அமெரிக்காவைக் கண்டுபிடிச்சாச்சு. இருந்தாலும் எதுக்கு இந்த விபரீதம்னு அமுக்கிட்டாங்க!' என்று ஆங்கிலேயர்களால் ஏளனத்துடன் கிண்டலடிக்கப்படும் அமெரிக்கா! அந்த நாட்டுக்குச் செல்ல பயண மற்றும் கடவுச் சீட்டுப் பதிவு, குடியேறல், சுங்கம் தொடர்ந்து பாதாதிகேச பாதுகாப்புத் தடவல்களை வில்லங்கமில்லாமல் முடித்துவிட்டு அண்ணா சர்வதேச விமானப் பயணிகள் கூடத்தில் உட்கார்ந்தபோது, பென்னே பாஸ்தா, டோநட், ஸ்டார்பக்ஸ் காபி, ஆஞ்சலினா ஜோலியைப் பற்றி அல்லாமல் சம்பந்தமே இல்லாத பிரம்மச்சரியம், கிரகஸ்தாஸ்ரமம், வானப்பிரஸ்தம் மற்றும் சன்னியாசம் பற்றிய சிந்தனை தோன்றியதன் காரணத்தை இங்கே பதிவு செய்ய வேண்டும்.

பிரம்மச்சரியம்

அதோ காஃபியை உறிஞ்சும் ஆறடி இளைஞனுக்கு பத்ரின்னு பெயர். சிறுசேரி மென்பொருள் கம்பெனியிலிருந்து அமெரிக்காவை நோக்கி ஏவிவிடப்பட்ட மனித-சாடிலைட். ஆறு மாதம் சுற்றிவிட்டுத் திரும்பி விட வேண்டும். www.அட்சதை டாட் காம் மற்றும் நங்கையர்மலரில் மணமாலைக்குப் பதிவுசெய்யப்பட்ட பிரம்மச்சாரி.

மன்ஹாட்டனில் இவனுக்கு டோனா என்கிற ஒரு பிரியசகி இருக்க வேண்டும். அமெரிக்கப் பளிங்குக் கிளி. மென்பொருள் கிரகிப்பில் 'ஜில்' கேட்ஸ்.

பத்ரியின் பிளாக்பெரி கைபேசியில் டோனாவின் இ-மெயில் இறங்குகிறது. சிருங்கார ரஸம் தளும்ப, 'வா, ஒரு ரவுண்ட் போய் பாரீஸுக்கு சிவப்பு வர்ணம் பூசிட்டு வரலாம்'னு அவள் கிளுகிளுப்பு அழைப்பு விடுத்திருக்கலாம். அடுத்த டிங்-டிங்' அலர்ட்டைத் தொடர்ந்து அவனுடைய தாத்தா ஆர்.ஏ.புரத்து ராதிகா பற்றி அனுப்பியுள்ள நீண்ட மெயில். இரண்டு மெகா பிக்ஸலில் டௌன்லோடு ஆகும் ராதிகாவின் படம் இதயத்தின் லப்- டப்பைத் துரிதப்படுத்துகிறது. 'உனக்கு ஷர்ட்டைக்கூட அப்பாதான் அழைச்சுண்டு போய், பார்த்து வாங்கித் தருவார். பெண்டாட்டிக்கும் அது பொருந்தட்டும்' என்கிற விபூதி இட்ட அம்மாவின் தழதழத்த வார்த்தைகள் அவன் காதில் மறு ஒலிப் பரப்பாகின்றன.

கிருகஸ்தாஸ்ரமம்


''ஏய், வசு! வசு! அதைப் பாரு! டிங்க்கு கிட்டேந்து சட்னு பிடுங்கு.''

நீண்ட வாழ்க்கையின் முதல் மைல் கல்லைக் கடந்ததை முன்னிட்டு குல தெய்வம் வைத்தீஸ்வரன் கோயிலில் முடி இறக்கப்பட்டு, நீல நட்சத்திரக் கடுக்கன்கள் பூட்டப்பட்ட டிங்க்கு என்கிற குழந்தை, வலது கையில் க்ரீம் பிஸ்கெட் இருந்தாலும், இடது கையில் அம்மாவின் கைப்பையிலிருந்து எடுத்த கருநீல நிறப் பாஸ்போர்ட்டின் வடக்கு மூலையைக் கேன்டியாகச் சுவைத்துக் கொண்டு இருக்கிறது.

''கோந்தே! அதைக் கடிக்காதேம்மா.

டாலரா ரெண்டு பேரும் சம்பாதிக்கிறோம்... யாருக்காக? உங்க நீசல் தங்கைக்காகவா?''

ரமணிக்குத் தன் மீது ஆசை இருந்தாலும், டாலர்கள் மீதும் சரி பங்கு இருக்க வேண்டும் என்பது வசுவின் கணிப்பு.



அது ஆய்! குடுத்துடு. அப்பா வைவா.''

''அய்!'' என்று குதூகலத்துடன் டிங்க்கு பால் போர்ட்டைக் கீழே வீசுகிறது.

சுமார் பத்து நிமிடத்துக்கு ஒரு முறை டிங்க்குவின் பின் பக்கத்தைச் சோதிக்கும் வசு, ''டயாபர் வேணும்'' என்று குரல் கொடுக்கிறாள்.

''ம்! இதுக்கு டயாபர் வாங்கியே நாம் போண்டி ஆக வேண்டியதுதான்.''

''ச்சே! என்ன பேத்தல் இது? டாலர்

''ஜே.எஃப்.கேக்கு ஷங்கர் மறக்காம பெரிய வண்டி கொண்டு வரணும்.''

''ரமணி! என்ன இது? கழட்டின டயாபரையே மறுபடியும் போடறே.''

''ஷங்கர் வரலேன்னா டாக்ஸிக்கு நூறு டாலர் அழணும்.''

''ஹலோ! எப்ப பார் பணத்தைப் பத்திய பேச்சு தானா? குழந்தை கக்கறது பாரு. அப்பவே சொன்னேன் நமுத்தப் போன பிஸ்கெட்டைக் கொடுக்காதேன்னு.''



வசு முணுமுணுத்துக் கொண்டு டயாபரைச் சரி செய்கிறாள். டிங்க்கு இழந்த சொத்தைக் தேடுவது போலத் தலையைத் தடவிக் கொள்கிறது.

வானப்பிரஸ்தம்

அதோ அசோக் நகர் ராமநாதன். பக்கத்தில் பரம சாதுவான மனைவி. பெயர் கோமதி.

இரண்டு பெண்கள். அவர்கள் மூலமா பேரன்கள். பேத்திகள். ஒரு பெண் சிகாகோ. மற்றவள் அட்லான்ட்டா. இரண்டு பேருக்கும் அப்பா அம்மாவின் உதவி ஒரே சமயத்தில் தேவை. ''நீங்க பேசி முடிவெடுங்க. கூப்பிடுங்க. அதன்படி மாறி மாறி இருக்கோம். ஆனா கண்டிஷன்ஸ் அப்ளை, நானும், கோமதியும் சேர்ந்துதான் வருவோம்'' என்பது ராமநாதனின் அருள்வாக்கு.

கோமதி மாமி பெருமூச்சு விடுகிறாள். ''எனக்குப் பரவாயில்லை. சமையல் உள்ளே புகுந்துண்டால் பொழுது போயிடும். உங்களுக்குத்தான் கஷ்டமா இருக்கும். அலசி அலசிப் படிக்க ஹிண்டு பேப்பர் கிடையாது. டிகிரி காஃபி கிடைக்காது. அருகம்புல் ஜூஸ் குடிக்கக் கிடைக்காது.''

''அதெல்லாம் படிப்படியா விடணும்னுதானே இந்த ட்ரிப். கொழந்தைகளோட ஒளிஞ்சிக்கற விளையாட்டு விளையாடலாம். காக்கா-நரி கதை சொல்லலாம். ஆனா எத்தனை நேரத்துக்கு அது சாத்தியம்? மிச்ச நேரத்துக்கு ஒருத்தர் மூஞ்சியை ஒருத்தர் பார்த்திண்டு...''

''அதைத்தானே இங்கேயும் ரெண்டு வருஷமா செஞ்சிண்டு இருக்கோம்.''

''வித்தியாசம் இருக்கே. நம்ம உடம்புன்னு ஒண்ணு இருக்கே. அது ஒழுங்கா ஓடலேன்னா இங்கே சட்னு அடுத்த தெரு கிளினிக்குக்கு ஓடலாம். டாக்டர் கே.பி. ஸ்டெத்தோட ரெடியா இருப்பார். ஆனா அங்கே அப்படியா? அப்பாயின்மென்ட் வாங்கணும். சிவனேன்னு காத்திருக்கணும். கர்ண கவச குண்டலமா ஹெல்த் இன்ஷ்யூரன்ஸ் பாலிஸி கைவசம் இருக்கணும். உன் சாமி லிஸ்ட்டிலே வைத்தீஸ்வரனையம் சேத்துண்டு அவர்கிட்டேயும் ஸ்ட்ராங்கா ஒரு மனு போட்டு வை. ஒரு இருமல், தும்மல், செருமல், விக்கல், அனத்தல்கூட வரக்கூடாதுன்னு. ஆமாம்.''

சன்னியாசம்

கேள்விக் குறியாக சோபாவில் சரிந்து

இருக்கும் அந்தப் பெரியவருக்கு சதாபிஷேகம் ஆகி அது மறந்தும் போயிருக்கலாம். சரித்திரப் பேராசிரியராக இருந்தவர்னு வெச்சுக்கலாம். தேவநாதன் என்கிற பெயர். மனைவி பூவும் பொட்டுடன் ஏற்கெனவே சிவலோகத்துக்கு டிரான்ஸ்ஃபர். மூப்பிலும் பெரியவர் அழகு.

''அப்படி என்னப்பா நங்கநல்லூரிலே இருக்கு? எனக்கு உங்களை விட்டா வேற யாரு? இங்கே எஸ்டேட் மாதிரி நாலு ஏக்கரிலே வீடு. உனக்காக நானியை ஏற்பாடு பண்ணியாச்சு. அடம்பிடிக்காம வந்து சேரு. என் ஃபிரெண்டு நாஸா நாணா வர்றான். உன்னைப் பூ மாதிரி ஜாக்கிரதையா அழைச்சிண்டு வருவான்'' என்று அதிகார வேண்டலுடன் அழைக்கப் பட்டவர்.



சிங்கப்பூர் செல்லும் விமானம் புறப் படத் தயாராக இருக்கிறது என்று ஒலிப் பெருக்கி முழங்குகிறது.

''ராமா, நாம சிங்கப்பூர்தானே போறோம். கூப்படறாங்களே.''

''ஸார், நான் ராமன் இல்லே. நாராயணன். நாணா, நாம போறது அமெரிக்கா. சிங்கப்பூர் இல்லே.''

''சிங்கப்பூர் இல்லியா? அமெரிக்காலே யாரு இருக்கா?''

''உங்க பிள்ளை ஸார். டாக்டர் சாமிநாதன்.''

''யாரு? சாமுவா? அங்கேயா இருக்கான்? எப்போ போனான்?''

''பத்து வருஷமா பாஸ்டன்லே இருக்கார் ஸார். அங்கேதான் போறோம்.''

மாஜி பேராசிரியருக்கு கறிவேப்பிலையா இருக்கும் ஒரே பிள்ளையைப் பற்றிய ஞாபகம் வழுக்குகிறது.

''ஸார். பசிக்கிறதா? வாழைப்பழம் இருக்கு. தரட்டுமா?''

''வேணாம். விழுப்புரம் ஜங்ஷனிலே சாப்பிடறேன்.''

''விழுப்புரமா?''

''கிளம்பறச்சே நா வர மாட்டேன்னு அடம்பிடிச்சேன். அது தப்பு. சரீரம்தானே இடம் மாறத் தயங்கறது? ஆத்மாக்கு அசோக் நகரிலே இருந்தா என்ன? அட்லான்டாவிலே இருந்தா என்ன? ரயில் எப்போ கிளம்பும்?''

நாணா அவரைப் பரிதாபத்துடன் பார்க்கிறான். ஃபிராங்க்பர்ட் விமானம் புறப்படத் தயாராக இருக்கிறது என்று அறிவிப்பு ஒலிக்கிறது.

பத்ரி, டிங்குவுடன்-வசு-ரமணி, ராமநாதன்-கோமதி தொடர்ந்து நாணாவின் கைப்பிடி பத்திரத்தில் ரிடயர்டு சரித்திரப் பேராசிரியர் தேவநாதனும் அமெரிக்க யாத்திரைக்கான அடுத்த அடிகளை ஏரோபிரிட்ஜை நோக்கி எடுத்து வைக்கிறார்கள்.

●

அழகுத் தொடர் 1

இலக்கியத்தில் அணிகலன்கள்!

''சுமார் நாற்பது வருடங்களுக்கு முன் டாக்டர் உ.வே. சாமிநாத அய்யர், திருச்சிராப்பள்ளிக்கு வந்து எஸ்.பி.ஜி காலேஜில் தமிழின் அருமையைப் பற்றியும் வளத்தைப் பற்றியும் பிரசங்கம் செய்தார்கள். நானும் பிரசங்கத்தைக் கேட்கப் போயிருந்தேன். ஐயரவர்கள் தமிழ் மகளின் நகை ஜாபிதாவை எடுத்துக் காட்டியபோது - அதாவது தலைக்குச் சூளாமணி, மார்புக்குச் சிந்தாமணி, காதுக்குக் குண்டலகேசி, கைக்கு வளையாபதி, இடைக்கு மணிமேகலை; கடைசியாக காலுக்கு சிலப்பதிகாரம் - என்று முடித்தார்களோ இல்லையோ... அப்படியே மயங்கிப் போய்விட்டேன்! அன்று இரவெல்லாம் ஒரே சொப்பனம்! தமிழ் அணங்கு வருகிறதும், தன் அபூர்வ அணிகலன்களை இப்படியும், அப்படியுமாகத் திருப்பித் திருப்பிக் காட்டுவதுமாய் இருந்தது!''

1935ம் வருஷம், ரசிகமணி டி.கே.சி. தாம் எழுதிய 'கால் மணி நேரம் தமிழுக்கு' என்கிற கட்டுரையில், தாம் அடைந்த பரவச நிலையை விவரிக்கும் பகுதியே நாம் மேலே காண்பது!

தமிழ் இலக்கியத்துக்கும் அணிகலன்களுக்கும் ஒரு விசேஷத் தொடர்பு இருக்கத்தான் செய்கிறது. இல்லையென்றால் இலக்கியங்களுக்கு அணிகலன்களின் பெயர்களைச் சூட்டுவார்களா?

1910ம் ஆண்டில் ஆ.சிங்காரவடிவேலு முதலியார் 'அபிதான சிந்தாமணி' என்கிற ஒரு பெரிய சிறப்புப் பெயர் அகராதியை வெளியிட்டார். 'சிந்தாமணி' என்பது, மனத்தால் நினைத்த மாத்திரத்தில் நினைத்த செல்வத்தை அளிக்கும் தெய்விக மணியின் பெயர். இந்த நூலில் இல்லாத செய்திகளே இல்லை என்று சொல்லும் அளவுக்கு அரிய பல தகவல்களைக் கொண்ட கருவூலம் இது! இதில் 'அணிகலன்கள்' என்ற தலைப்பில் ஒரு நீண்ட பட்டியலே காணப்படுகிறது. பெண்களின் அணிகலன்கள், ஆண்களின் அணிகலன்கள் என்று பிரித்து, ஒவ்வோர் அங்கத்துக்கும் உரிய அணி வகைகள் என்னென்ன என்று ஒரு பட்டியல் இடுகிறார் இதன் தொகுப்பாசிரியர். பொறாமையைத் தூண்டும் இந்த வரிசையில் சிலவற்றைப் பார்ப்போமே! கால் விரல்களுக்கு மகரவாய், பீலி, கால்மோதிரம் (மெட்டி?); கால்களுக்குப் பாதஜாலம், சிலம்பு. பாடகம், காற்சரி, பரியகம், நூபுரம்; தொடைக்கு இறங்குசெறி! இடைக்கு மேகலை (ஒட்டியாணம்?), காஞ்சி; தோள்களுக்கு மாணிக்கவளை, முத்துவளை; கைகளில் சூடகம், பொன்வளை, நவமணிவளை, சங்க வளை, பவள வளை; கைவிரல்களில் நெறி (நெளி?), மோதிரம், கணையாழி; கழுத்தில் வீர சங்கிலி, நேர்ஞ் சங்கிலி, பொன்னூல், சவடி, சரப்பளி; காதுகளில் தோடு, கடிப்பிணை, வாளி, குழை; தலைக்குச் சீதேவி, வலம்புரி, பூரப்பாளை, தென்பல்லி, வடபல்லி, புல்லகம், சூளாமணி, பொன்னரிமாலை, இவை பெரும்படி நகைகள். சிறு நகைகளாக பதக்கம், கங்கணம், ஐம்படைத்தாலி, குணுக்கு, சுட்டி, பட்டம், கிண்கிணி, சதங்கை, கலாபம், பருமம், விரிசிகை, அரைப் பட்டிகை, செவி மலர், செவிப்பூ, நுதலணி, தெய்வவுத்தி, தலைக்கோலம், தலைப் பாளை, இம்புரி, பெருஞ்சூட்டு, மதாணி என்று அடேயப்பா! இத்தனை வகை நகைகளா! கற்பனையும்

• த.கி.நீலகண்டன் •



சில அணிகலன்கள் சிறப்பான இடத்தைப் பெற்று இலக்கியத்தில் ஒரு கதாபாத்திரமாகவும் மாறி விடுகின்றன.

கைவண்ணமும் கைகோத்து நின்று வளர்ந்த கலை அணிகள் செய்யும் கலை!

சில அணிகலன்கள் சிறப்பான இடத்தைப் பெற்று இலக்கியத்தில் ஒரு கதாபாத்திரமாகவும் மாறி விடுகின்றன. சிலவற்றைப் பார்க்கலாம்!

தவக்கனலில் புடமிட்ட பொன்...

மார்கழி மாதம் பிறந்தாலே ஸ்ரீவில்லிப்புத்தூரில் பக்தி வெள்ளம்தான். ஆண்டாளுக்குத் தம் சொந்த ஊரே ஆயர்பாடி ஆய்விடும் அக்கம்பக்கத்துத் தோழிமார்கள் எல்லாம் ஆய்ச்சியர்கள் ஆகிவிடுவார்கள்! வடபெருங்கோயிலே நந்தகோபனின் அரண்மனை! அங்கு பள்ளிகொண்டிருக்கும் வடபத்ரசாயியே கண்ணன்! ஆயர்பாடியில் கோபிகைகள் அம்பிகையைக் குறித்து நோற்ற பாவை நோன்பினைப் போல் ஆண்டாளும் தன் பைந்தமிழ்ப் பனுவல்களால் நோற்ற நோன்பின் மாண்பே திருப்பாவை.

மண்ணால் சமைத்த அம்பிகையின் திருவுருவத்தைப் பிரதிஷ்டை செய்து, மாதம் முழுவதும் நோன்பிருந்து பூஜித்து நிறைவேற்றும் 'காத்யாயனீ விரதம்' என்னும் பாவை நோன்பின் நியமங்களை ஆண்டாள், தன்னையே ஒரு கோபிகையாக பாவித்துக் கடைப்பிடிக்கிறாள். ''நாமும் நம் பாவைக்குச் செய்யும் கிரிசைகள் கேளீரோ? நெய்யுண்ணோம்; பால் உண்ணோம்; மையிட்டு எழுதோம்; மலர் இட்டு நாம் முடியோம்'' என்று உணவிலும், உடையிலும், மொழியிலும், எண்ணத்திலும் தவம் ஒன்றே தலையாயதாய் நிற்கிறது. நோன்பின் நிறைவு நாள் அன்று நோன்பின் பயனாய் கண்ணனை அண்டி அவன் அருள் பெற்று பின் ஒரே கோலாகலம்தான்!

இத்தனை நாள் நோன்பின் அடையாளமாக ஆடம்பரத்தையும் அணிமணிகளையும் ஒதுக்கி வைத்தவர்கள் இன்று கண்ணனிடம் வேண்டியதைப் பெற்ற ஆனந்தத்திலே மூழ்குகிறார்களாம்! அதன் வெளிப்பாடாக எல்லோரும் தம்மை அலங்கரித்துக் கொள்கிறார்கள்.

'நாடு புகழும் பரிசினால் நன்றாக
சூடகமே தோள்வளையே தோடே
செவிப் பூவே
பாடகமே என்றனைய பல்கலனும்
யாம் அணிவோம்!'

அலங்காரத்திலும் ஓர் எளிமையான தன்மை மிளிர்கின்றது. பகட்டான அணிமணிகளாக இல்லாமல், இத்தனை நாட்கள் நோற்ற நோன்பு தந்த முதிர்ச்சியில், கைகளில் சூடகம் என்னும் வளையல்கள், தோள்களில் அணியும் கேயூரம் என்னும் தோள்வளை, காதுகளில் அணியும் தோடு, செவிப்பூ என்கிற சிறு ஆபரணம், கால்களில் 'பாடகம்' என்னும் அணிகலன் என்று குறைந்தபட்சம் அணியும் அணிகளின் வரிசைதான்! 'கூடியிருந்து குளிர்ந்து' என்று ஆண்டாள் முடிப்பதில் இருந்து, கண்ணன் அடியவர்கள் என்ற பக்தர் குழாத்தின் சேர்க்கையினால் வந்த கொண்டாட்டமும் கோலாகலமுமே அல்லாமல் வேறு எந்த ஆடம்பரத்துக்கும் அங்கு இடமில்லை என்று தெரிகிறது!

''எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும்
உன்தன்னோடு
உற்றோமே ஆவோம்; உமக்கே நாம் ஆட்
செய்வோம்;
மற்றை நம் காமங்கள் மாற்று!''

என்று வேண்டும் அடியவர் கூட்டத்தில் பகட்டான ஆடம்பரத்துக்கும் செல்வச் செருக்குக்கும் இடமேது? **(இன்னும் பார்ப்போம்)**

வண்ணப்படம்: **முத்துகிருஷ்ணன்**

● த.பரதன், திருவாரூர் ★

? ஒரு ஏர்வேஸ் நிறுவனத்தின் ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்யும்போது, மற்ற ஏர்வேஸ் நிறுவனங்கள் கட்டணத்தை வெகுவாக உயர்த்தியது பற்றி?

! பிறர் துன்பத்தில் பயனடையப் பார்ப்பது மிகவும் மோசமான நடத்தை. சிறந்த வியாபார யுக்தியும் அல்ல; தொழில் தர்மமும் அல்ல.

● அ.யாழினி பர்வதம், சென்னை - 78

? பாகிஸ்தான் மூலம் இந்தியாவுக்குள் கறுப்புப் பணம் புழக்கத்தில் விடப்படுவதேன்?

! ராணுவத்தால் பலவீனப்படுத்த முடியாது என்பது புரிந்துவிட்டது. பொருளாதாரத்தைச் சீர்குலைத்து அதன்மூலம் நாட்டை பலவீனப்படுத்திவிட முடியுமா என்கிற மறைமுக யுத்தம்!

● ஜி.ஹரிபாலாஜி, வேம்படிதானம்

? கிரிக்கெட் தர வரிசையில் இந்தியா முதலிடம் பிடித்திருப்பது பற்றி...?

! இது மழை நேர வானவில் மாதிரி. நீடிக்கும்வரை பார்த்து ரசிப்போம். மறைந்தாலும் மீண்டும் தோன்றும் என்று எதிர்பார்ப்புடன் காத்திருப்போம்.

● லெ.நா.சிவகுமார், சென்னை - 33

? ''கூட்டணி பற்றியே கணக்கு போட்டுக் கொண்டிருந்தால் அடுத்த தலைமுறை நம்மை மன்னிக்காது'' என்கிறாரே தா.பாண்டியன்?

நீங்கள் கேட்டவை
தராசு



★ சர்ச்சை கிளப்பும் முடிவு

குடியரசுத் தலைவரின் சொந்தங்கள் தேர்தலில் நிற்கலாமா?

! தலைவர்களைப் பற்றியே கவலைப்பட்டுக் கொண்டிருக்காமல், தலைமுறை குறித்தும் நினைத்துப் பார்க்கும் பாண்டியனுக்குப் பாராட்டு.



★ அனுமதிக்கும் அமைச்சர்

● சரா.ஏ.முரளி, கள்ளக்குறிச்சி

? நள்ளிரவுக்கு மேல் தொலைக்காட்சி சேனல்களில் வயது வந்தோருக்கு மட்டுமான நிகழ்ச்சிகள் ஒளிபரப்பும் திட்டத்துக்கு அனுமதி வழங்கியுள்ளாரே துறை அமைச்சர் அம்பிகா ஸோனி?

! நாள் முழுவதும் தொலைக்காட்சி ஒளிபரப்பும் பெரும்பாலான நிகழ்ச்சி

களே 'U' போர்வையிலான 'A' நிகழ்ச்சிகள் போல்தான் இருக்கின்றன! அப்பட்ட 'A'ரக நிகழ்ச்சிகள் நோக்கிய நகர்வு, மனிதர்களின் தூக்கத்தோடு மனங்களையும் கெடுக்கவே வழிவகை செய்யும்.

● **பா.அசோக், திருவில்லிப்புத்தூர்**

? ''வன்னியர்களுக்குத் தனி இட ஒதுக்கீடு அளிக்காவிட்டால் குஜ்ஜார் இன மக்களின் போராட்டத்தைக் காட்டிலும் நூறு மடங்கு தீவிர போராட்டம் வெடிக்கும்'' என்று மிரட்டல் விடுத்துள்ளாரே டாக்டர் ராமதாஸ்?

! ஒதுக்கீடு என்பது நடைமுறைக்கு வந்துவிட்டதால் சங்கிலித் தொடராகப் புதிய கோரிக்கைகள் வந்த வண்ணம்தான் இருக்கும். நூற்றுப்பத்து சதவிகிதம் ஒதுக்கீடு செய்த பிறகும் தொடரும்! தலைவர்கள் ஒன்றுகூடி 'ரிவர்ஸ் கியர்' போடச் சம்மதித்தால்தான் உண்டு. ஆனால், அரசியல் ஆதாயம் கருதி அதற்கு ஒப்பமாட்டார்கள்.

● **ஜி.பாலசுப்பிரமணியன், சேதுநாராயணபுரம்**

? மத்திய அரசின் சிக்கன நடவடிக்கை என்ன பலனைத் தரும்?

! அமைச்சர்கள், தலைவர்களின் வாழ்க்கை முறையில் நிஜமான சிக்கனம் கடைப்பிடிக்கப்பட்டு, அது அரசின் செயல்பாட்டிலும் செலவினங்களிலும் ஊடுருவினால் நற்பயன் விளையும். வெறுமே ஷோ காண்பித்தால் நகைப்புக்கு இடமளிக்கும்.

● **இரா.சக்கரபாணி, மதுரை**

? ''அவமானத்தைத் தாங்கத் தயாராயில்லை என்பதால் இன்றைய இளைஞர்கள் பொதுவாழ்வுக்கு வரத் தயாரில்லை'' என்று வைரமுத்து கூறியுள்ளாரே?

! ''தொடக்கத்தில் அவமானத்தைச் சந்திக்க நேர்ந்தாலும் பரவாயில்லை; தேச நலன் கருதி நேர்மையும் அறிவாற்றலும் மிக்க இளைஞர்கள் பொதுவாழ்வுக்கு வாருங்கள்; நாட்டின் எதிர்காலம் உங்கள் கையில்'' என்று ஆக்கபூர்வமாக இளைஞர்களுக்குச் சொல்வதே நல்லது.

● **சி.சசிகலா தேவி, விருதுநகர்**

? ராகுல்காந்தி பயணம் செய்த ரயிலை நோக்கி இளைஞர்கள் கல் எறிந்த சம்பவம்...?

! எதிர்ப்பு தெரிவிப்பது, ஜனநாயகத்தில் எதிர்க்கட்சிகளின் உரிமை. ஆனால், அது அமைதியாக நடக்க வேண்டும். கல்லெறிதல் போன்ற வன்முறைகள் உதவாது. இதை அனைத்துக் கட்சித் தலைவர்களும்

□ ரூ.150/-
பரிசு பெறுபவர்:
அ.சுகுமார், காட்பாடி

★ ரூ.75/-
பரிசு பெறுபவர்:
த.பரதன், திருவாரூர்



★ ஊக்குவிக்கும் பேச்சாளர்



★ குரல் கொடுக்கும் தலைவர்

தான் தொண்டர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும்.

● **சி.பூங்கோதை, சென்னை - 78**

? ***மகாகவி பாரதியாரை தேசிய கவியாக அறிவிக்க தமிழக அரசு முயற்சி செய்ய வேண்டும் என்று இல.கணேசன் கூறியுள்ளாரே?***

! "யாரப்பா அங்கே! உலக மகா கவியை தேசிய கவியாக அறிவிக்கப் போறாங்களாம்! விழா மேடையில் ஒருவருக்கொருவர் பரஸ்பரம் அணிவிக்க பத்து - பதினைந்து பொன்னாடைகளுக்கு ஆர்டர் கொடு!"

● **அ.சுகுமார், காட்பாடி**

? ***குடியரசுத் தலைவரின் 'ரத்த சொந்தங்கள்' தேர்தலில் கட்சி சார்பில் போட்டியிடுவது சரியா?***

! சட்டப்படி சரியாக இருக்கலாம். ஆனால் தர்ம நியாயப்படி சரியல்ல. ஆளுங்கட்சி சார்பில் குடியரசுத் தலைவரின் மகன் போட்டியிடுவது பல சந்தேகங்களை ஏற்படுத்தக்கூடிய செயல். தவிர்க்கப்பட வேண்டும்.



* பீலே பாண்டியன்!



* மிரட்டல் மாஸ்டர்!



* குற்றம் சாட்டும் கவிஞர்

● **எஸ். கதிரேசன், பேரணாம்பட்டு**

? ***2011ல் தே.மு.தி.க. ஆட்சியைப் பிடிக்கும் என்று விஜயகாந்த் உளறியிருக்கிறாரே?***

! இதை உளறல் என்று ஒதுக்கிவிட முடியாது. தொண்டர்களிடையே தன்னம்பிக்கையையும் வாக்காளர்களிடையே நம்பிக்கையையும் விதைக்க முனைகிற பேச்சு. செயல்திட்டம் எப்படி அமைகிறது என்பதைப் பொறுத்து, வெற்றியின் எல்லை தீர்மானிக்கப்படும்.

● **கிருஷ்ணன், மதுரை**

? ***விநாயகர் சதுர்த்திக்குப் பின் மெரினா கடற்கரையில் 65 டன் கழிவுகள் அகற்றப்பட்டனவாமே?***

! வினை தீர்ப்பவனின் பெயரைச் சொல்லிக் கொண்டு நாம் விதைக்கும் வினை!

● **பி.இராஜேந்திரன், லோயர் அணைக்கட்டு**

? ***"கருணாநிதியின் மனமும் ஆட்சியும் மாறினால்தான் இலங்கைப் பிரச்னை தீரும்" என்று விஜயகாந்த் கூறியுள்ளதைப் பற்றி...?***

! அது அரசியல் பேச்சு. ராஜபக்ஷவின் மனமும் ஆட்சியும் நியாயமாகச் செயல்பட்டால்தான் பிரச்னை தீரும் என்பது யதார்த்தம்.



விட்டல விட்டல ஜே ஜே விட்டல!

மிகவும் சிறிய டவுன் போலக் காட்சியளித்தாலும், நாலைந்து தெருக்களை விட்டு விட்டால் பக்காவான கிராமம் தான் டேர்.

முதலில் கோராகும்பர் வழிபட்ட காலேஷ்வர் ஆல யத்துக்குச் சென்றோம். ஆம், பிற பல விட்டல பக்தர்களைப் போலவே கோராகும்பர் சிவனை யும் வழிபட்டிருக் கிறார். தவிர அந்த ஊரில் இருந்தது சிவன் ஆலயம் மட் டுமே. விட்டலனோ கோராகும்பரின் மனத் தளவில் அருகே இருந் தாலும் சன்னிதி என்கிற அளவில் வெகுதொலை வில், பண்டரிபுரத்தில்.

கோரோபா என்கிற பெயரில் கோராகும்பருக்கும் சன்னிதி காணப்படு கிறது. உள்ளுக்குள்ளேயே நீலகண்டேஸ் வர மஹாதேவ மந்திர் எனப்படும் சிறிய சன்னிதி. வேறொன்றில் விட்டலன் மற்றும் ருக்மிணியின் உருவங்கள்.

கோராகும்பர் மண்பாண்டங்கள் செய்த 'நிஜமான' கிராமம் உள்ளடங்கி ஐந்து கிலோமீட்டர் தொலைவில் இருக்கிறது என்றார்கள். அதைப் பார்க்காமல் எப்படி? கிளம்பிச் சென்றோம்.

மிக எளிமையாக இரும்புத் தகடு வேய்ந்து காணப்பட்டது கோராகும்பர் வாழ்ந்த வீடு. அதில் சற்று மேடிட்ட மண். 'தொட்டுப் பாருங்கள். இன்னமும் கூட சூடாக இருக்கும்' என்றார் அருகில் வந்த ஒருவர். தொட்டுப் பார்த்தபோது மிருது வாகவும் வெப்பமாகவும் கையில் ஒட்டிக்கொண்டது.

நாலைந்து சிறுவர்கள் நம்மை வியப்புடன் பார்த்தார்கள். அவர் களில் ஒருவன், 'இவர் தான் கோராகும்பரின் வாரிசு' என் றான். மண்ணின் தன்மை பற்றி நமக்குக் கூறியவர்தான் அவர். பார்த்தபோதே ஏழ்மை புலப்பட் டது.

ராமநாதன் கண்கலங்கி, கைகூப்பி நின்றிருந்தார். கோராகும்பரின் சரிதம் அவர் மனத்துக்குள் ஓடிக்கொண்டிருந்திருக்க வேண்டும். ஜருகண்டிக்கும் கோராகும் பரின் மீதி சரிதத்தைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆர்வம் அதிகமாகிக் கொண்டே வந்தது. பேருந்து நிலையத்தை அடைவதற்காக ஆட்டோவில் நாங்கள் ஏறிய அடுத்த கணமே அவன் அதை வெளிப்படுத்த, ராமநாதன் கதையைத் தொடர்ந்தார்.

தங்கைக்குத் தன் கணவரை மணம் முடித்த பத்மாவதி, அவள் முகம் வாட்ட மாகவே இருப்பதை அறிந்து சந்தேகப்பட் டாள். தங்கையை விவரம் கேட்க, அவள் வெட்கமும் துக்கமுமாக நடந்ததை - அதாவது தனக்கும் கோராகும்பருக்கும்

அருண்ண சரண்யா

இல்லற வாழ்வு நடக்காததைக் கூறினாள்.

வேகமாகத் தன் கணவரிடம் சென்ற பத்மாவதி, 'என் மீதுள்ள கோபத்தை என் தங்கையிடம் காட்டவேண்டாம். அவளை மனைவியாக நடத்துங்கள். தாயாக்குங்கள்' என்று படபடத்தாள். அவளது தந்தை தம்மிடம் பெற்ற வாக்குறுதியைக் கூறினார் கோராகும்பர். இரு பெண்மணிகளும் திகைத்துப் போனார்கள். என்ன இது... விதி மாறி மாறி விளையாடுகிறதே!

அக்காவும் தங்கையுமாக யோசித்து ஒரு முடிவுக்கு வந்தார்கள். தயங்கித் தயங்கி தள்ளி இருப்பதால்தானே கோராகும்பர் விட்டல ஆணையையும் மாமானாருக்கு அளித்த வாக்குறுதியையும் நினைக்கிறார். அவரைச் சிந்திக்கவே விடாமல் உணர்ச்சி

கோராகும்பரின் வெட்டுண்ட கைகள் மேலெழும்பித் தாளமிட்டன!



25

தீராத விளையாட்டு விட்டலன்

வயமாக்கினால்?

அந்த முயற்சியிலும் அக்காள் - தங்கைக்குத் தோல்வி! அவர்கள் செய்த முயற்சிக்காக கோராகும்பர் தமது கைகளைத் தாமே வெட்டிக் கொள்ள முயன்றார். அவர் கைகள் விளங்காமல் போய்விட்டன!

அப்போது பண்டரிபுரத்தில் பிரம்



மோற்சவம் நடைபெற்றது. கோராகும்பர் கிளம்பினார். கூடவே அவர் மனைவி களும்

சன்னிதியில் விட்டலபக்தியின் மேன்மையை நாமதேவர் விவரிக்க, அதை மெய் மறந்து கேட்டார் கோராகும்பர். பிறகு நாமதேவர் செய்த பஜனையில் கோராகும்பரும் கலந்துகொண்டார். பஜனை உச்சக்கட்டத்தை அடைந்தது. வாயிலிருந்து விட்டல நாமங்கள் வெளிப்பட, கண்களிலிருந்து கண்ணீர் வெளிப்பட, தம்மை மறந்து பக்தி வெறியில் கோராகும்பர் பாடலுடன் ஆடவும் முயற்சிக்க, அவரது இரு கரங்களும் மேலெழும்பின; தாளமிட்டன. அவரது கைகள் முன்புபோலவே முழுமையாக இயங்கும் காட்சியைக் கண்ட அனைவருக்குமே பரவசம்.

பத்மாவதி கணவரின் கால்களில் விழுந்தாள். ஒரு மனைவியாக ஆனந்தக் கண்ணீர் உதிர்த்தாள். அடுத்தநொடியே அவளது தாய்மை உணர்வு பிறிட்டெழுந்தது. நாமதேவரிடம் சரணடைந்தாள். 'வெட்டுண்ட என் கணவரின் கைகள் முன்போல் ஆயின. அதுபோல என் குழந்தையையும் மீட்டுத் தாருங்கள்' என்று கதறினாள்.

'மனப்பூர்வமாக பாண்டுரங்கனைப் பஜனை செய்' என்றார் நாமதேவர். பத்மாவதியும் கதறி விட்டலனை வழிபட்டாள். கருவறைக்குள் ஓர் ஒளி தோன்றி மறைந்தது. 'அம்மா' என்ற மழலை ஒலி கேட்

அபங்க அமுதம் - 25

ஆபுல்யா மஹிமானே
தாது பரிஸே கேலே ஸோனே
தைஸீ ந மனீ மாஜே ஆதா
குணதோஷ பண்டரீநாதா
காவாமாகீல வோஹோள
கங்கா ந மனீ அமங்கள
துகா ம்ஹணே மாதீ
கேலீ கஸ்தூரீனே ஸரதீ

- துக்கோபாராய்

'பரிசக்கல் தன்னுடைய ஆற்றலால் இரும்பு போன்ற உலோகங்களையும் தங்கமாக மாற்றிவிடுகிறது. கிராமத்தின் பின்புறம் உள்ள கலங்கிய நீரை கங்கை அமங்கலமாகக் கருதுவதில்லை. கஸ்தூரி தன்னுடன் சேர்ந்த மண்ணுக்கும் தனது நறுமணத்தை அளித்துவிடுகிறது. அதுபோல என்னுடைய தவறான குணங்களையும் குற்றங்களையும் பொருட்படுத்தாமல் என்னை தயவுசெய்து அங்கீகரித்துவிடு விட்டலா'

டது. கோராகும்பரால் மிதியுண்டு இறந்த அவர் மகன் உயிர்ப்புடன் தவழ்ந்து வெளியே வந்தான். பத்மாவதி பாய்ந்தோடி தன் குழந்தையைத் தூக்கி முத்த மழை பொழிய, சிலிர்த்து நின்ற கோராகும்பரை நெருங்கினார் நாமதேவர். 'உன் பக்தி சிறந்ததுதான். ஆனால் உன்னை மணந்து கொண்ட இந்த இளம் பெண்களிடத்திலும் உனக்குக் கடமை



கோராகும்பர் சோதித்தார். அந்தச் சுவையான பகுதியை ஞானேஸ்வரர் சமாதியடைந்த இடத்தில் சொல்கிறேனே...''

''அது எந்த இடம்?''

''ஆலந்தி. அங்கும் போகப்போகிறோமே.''

''முக்தாபாய் என்று யாரையோ சொன்னீர்களே?''

''பாண்டுரங்க மகாத்மியத்தில் முக்தாபாய்க்கும் இடம் உண்டு. அதுமட்டு

பாண்டுரங்கப் பொக்கிஷத்தில் பருகவேண்டிய வேறுசில அமுதங்கள் இன்னும் இருக்கின்றன!

உண்டு' என்று உணர்த்தினார்.

பாண்டுரங்கன் சன்னிதியில் 'விட்டல விட்டல ஜே ஜே விட்டல' என்ற ஒலி நிறைந்து பரவியது. நாமதேவரும் கோராகும்பரும் தம்மை மறந்து ஆட, மற்றவர்களும் அந்தப் பேரின்ப அனுபவத்தில் பங்கு கொண்டனர். கோராகும்பரின் குழந்தை புன்னகைத்தது. சன்னிதியில் அனைத்தையும் பார்த்துக்கொண்டிருந்த விட்டலனும்தான்.

கதை முடிந்தது என்று அனைவரும் நினைத்திருக்க, ஜருகண்டி மட்டும் மறக்காமல் ஒன்றைச் சுட்டிக்காட்டினான். ''அப்பேற்பட்ட நாமதேவர் தலையைத் தடியால் தட்டியா அவரது பக்குவத்தை கோராகும்பர் சோதித்ததாகச் சொன்னீர்கள்?''

''ஆமாம்... நாமதேவர் மட்டுமல்ல ஞானேஸ்வர், முக்தாபாய் ஆகியோரையும்

மல்ல சமர்த்த துக்காராம், ஏகநாதர், கூர்மதாசர், சௌதாமாலி... இப்படிப் பலரும் வாழ்ந்த, மறைந்த பகுதிகளுக்கெல்லாம் போய் புண்ணியம் தேடிக்கொள்ளப் போகிறோம். தவிர பாண்டுரங்கப் பொக்கிஷத்தில் வேறு சில அமுதங்களையும் பருகப் போகிறோம்.''

கேட்கும்போதே சிலிர்ப்பாக இருந்தது.

மீண்டும் ஷோலாப்பூரை அடைந்து அடுத்து நாங்கள் செல்ல வேண்டிய பேருந்தில் ஏறி அமர்ந்தோம்.

''எங்கே போகணும்?'' என்று கேட்டார் நடத்துனர். மனத்தில் விட்டலனின் அந்தக் கோயில் கொடியசைந்தது.

(யாத்திரையின் இரண்டாம் பாகம் - சிறு இடைவேளைக்குப் பிறகு)

மின்னல் கதைகள்



முயற்சி இல்லாமல் முன்னேற ஆசையா?

ஒரு சமயம், சந்தை கூடும் உயர்ந்த இடத்தில் நின்ற முல்லா அங்குள்ள மக்களைப் பார்த்து, ''நீங்கள் கஷ்டமில்லாமல் சிறந்த அறிவு பெற ஆசைப்படுகிறீர்களா? பொய்யே இல்லாத முழு உண்மையை அறிய ஆசைப்படுகிறீர்களா? முயற்சி சிறிதும் இன்றி முன்னேற ஆசைப் படுகிறீர்களா?'' என்று கேட்டார்.

அங்குள்ள எல்லாரும் அவரைச் சுற்றி நின்று, ''ஆமாம், ஆமாம்... அதற்கு என்ன வழி?'' என்று மிகுந்த ஆவலுடன் கேட்டனர்.

''உங்களில் சோம்பேறிகள் எத்தனை பேர் என்பதை அறிந்து கொள்வதற்காக அவ்வாறு கேட்டேன்'' என்று அமைதியாகச் சொன்னார் முல்லா!

ஒரே ஒரு வினாடி!

ஒரு காலத்தில் மனிதன், கடவுளைத் திடீரென்று சந்திக்கும்படி நேர்ந்தது. ''மனித வாழ்க்கையில் பத்து லட்சம் ஆண்டுகள் என்பது உங்கள் கணக்கில் எவ்வளவு நாள்?'' என்று கடவுளிடம் மனிதன் கேட்டான்.

''அது எனக்கு ஒரே ஒரு விநாடிதான்!'' என்றார் கடவுள்.

மீண்டும் மனிதன் கடவுளிடம், ''எங்களுடைய நூறு கோடி ரூபாய் உங்களுக்கு எவ்வளவு மதிப்பு?'' என்று கேட்டார்.

''அது எனக்கு ஒரே ஒரு ரூபாய்தான்!'' என்றார் கடவுள்.

உடனே அந்த மனிதன் தன்னைப் புத்திசாலி என்று நினைத்துக் கொண்டு கடவுளிடம், ''அப்படியென்றால் உங்கள் கணக்குப்படி எனக்கு ஒரு ரூபாய் தானம் செய்யுங்களேன்!'' என்றான் அவசரமாக.

கடவுள் சிரித்துக் கொண்டே,



''ஒரு விநாடி பொறுத்திரு... தருகிறேன்!'' என்று சொன்னார்!

போளூர் ஆர்.பஞ்சவர்ணம்



வானம் என்பது இனி இல்லை!

'கேள்வி பிறந்தது அன்று... நல்ல பதில் கிடைத்தது இன்று...' டி.எம்.சௌந்தர்ராஜனின் கம்பீரமான குரலில் ஒலித்த அந்தப் பாடலைக் கேட்டபடி நண்பரின் வீட்டை நோக்கிச் சென்று கொண்டிருந்தேன். உள்ளே நான் நுழையும் முன்பே, ''வாங்க வாங்க, இப்பத்தான் உங்க வீட்டுக்கு ஃபோன் போட்டேன். நீங்க இங்கதான் வர்றதாகச் சொன்னவுடன் ஒரே மகிழ்ச்சி'' என்றார் நண்பர்.

''இன்றைக்கு உங்கள் வீட்டில் ஏதாவது விசேஷமா?'' என்றேன். ''ஆமாம், என் மகன் இந்த வாரம் மேல்படிப்புக்காக அமெரிக்கா புறப்படுகிறான். அதனால் சுற்றத்தார்கள் எல்லோரும் வந்திருக்கிறார்கள்'' என்றார்.

அதற்குள் வீட்டுக்குள்ளிருந்து ஒரு கூட்டமே சந்தோஷக் கூச்சலோடு எங்களை நோக்கி வெளியில் வந்தது. அமெரிக்கா செல்லும் நண்பரின் பையனும் மகிழ்வோடு வந்து, குனிந்து வணங்க, ''நன்றாக இருக்க வேண்டும். உங்கள் தந்தையின் கனவும் நனவாகப் போகிறது!'' என்று நான் மகிழ்வோடு அப்பையனை வாழ்த்தினேன்.

''என் தந்தையின் கனவு மட்டுமில்லை ஐயா, என்னுடைய கனவும் அதுதான். கிராமத்துப் பள்ளிக்கூடத்தில் நான் படித்தபோது தலைமை ஆசிரியர் அப்போதே அமெரிக்கா சென்று வந்ததைக் கதைகதையாகச் சொல்வார். அது எனக்குள் ஆழப் புதைந்தது. இன்று அது நனவாகக் காரணம் அந்த ஆசிரியர்தான்'' என்று சொன்னபோது எனக்கும் பெருமிதமாக இருந்தது.

''அதுமட்டுமில்லைங்க, பல்கலைக் கழகம் நடத்திய உலகளாவிய தேர்வில் இவன் உதவித்தொகை பெறும் மாணவர் பட்டியலில் இடம்பெற்றுள்ளான். நமக்குக் கொஞ்சம் சுமை குறையுது பாருங்க!'' என்று நண்பர் பெருமிதம் பொங்கக் கூறினார்.

'ஒளிமயமான எதிர்காலம் என் உள்ளத்தில் தெரிகிறது' என்று வானொலியின் பாட்டு அந்தச் சூழலுக்கு ஏற்பத் தொடர, ''அடடே, இன்றைக்கு ஒருபடப் பாட்டு நிகழ்ச்சியில்



கு.ஞானசம்பந்தன்

'பச்சைவிளக்கு' படப் பாடல்களா? அருமை, அருமை'' என்று நண்பரின் தமக்கையார் சொல்ல... எல்லோரும் சிரித்தார்கள்.

''ஏண்டா சிரிக்கிறீங்க. அத்தையம்மா சொன்னது சரிதான். நல்லவேளை புதுப் பாட்டு ஒண்ணும் போடலை. இல்லாட்டி நல்ல பேச்சு பேசிக்கிட்டு இருக்கப்ப, ஐயோ ஐயையோ என்று எவனாவது கத்திக்கிட்டு இருப்பான்'' என்று தாத்தாவும் சொன்னார்.

''தாத்தா அப்படியெல்லாம் புதுப் பாட்டை ஒதுக்காதீங்க. 'வானம் எல்லை என்பது இன்றில்லை' அப்படின்னு கமல் ஹாசனே தன் படமான 'உன்னைப்போல் ஒருவ'னில் தாமே சொந்தக்குரலில் பாடியிருக்கிறார் தெரியுமா?'' என்று நண்பரின் தங்கை மகன் சொன்னான்.

அதற்குள் பல்வகையான உணவுப் பொருட்கள் நிரப்பப்பட்ட தட்டுகளை எல்லோருக்கும் கொண்டுவந்து நண்பரின் மனைவி கொடுத்தபடி, ''சாப்பிட்டுக் கொண்டே பேசுங்கள்'' என்றார்.

''தம்பி உன்னோடு வேறு யாரும் வருகிறார்களா?'' என்று நான் கேட்க, ''ஆம் ஐயா, என்னுடைய நண்பர்கள் இருவர் வருகின்றனர். ஆனால் அவர்களுக்கு வேறு, வேறு இடங்களில் இடம் கிடைத்துள்ளன'' என்றார் அந்த இளைஞர்.

''தம்பி! நம் நாட்டுக்கு உழைத்தவர்களான மகாத்மா காந்தி, நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ், சர்.சி.வி. இராமன், பண்டிட் ஜவாஹர்லால் நேரு போன்றவர்களும் வெளிநாடுகளுக்குச் சென்று கல்வியையும் உயர்ந்த அனுபவங்களையும் பெற்று வந்துள்ளனர். நீங்களும் அத்தகைய பெருமைகளைப் பெற வேண்டும்'' என்று வாழ்த்தினேன்.

''அதுமட்டுமில்லடா, உயர்ந்த கல்வி, அரிய முயற்சி இவற்றின் மூலம் செயற்கரிய செயல்களைச் செய்யணும்'' என்று நண்பரும் சேர்ந்து சொன்னார்.

''உண்மைதான் தம்பி. பரமஹம்சரைப் பார்க்க வந்த துறவி ஒருவர் 'நான் பதினான்கு ஆண்டுகள் காட்டில், தனிமையில், ஊன் உறக்கம் இன்றித் தவமிருந்து அரிய சக்தியைப் பெற்றேன்' என்றாராம். பரமஹம்சரும் மகிழ்ந்து, 'அது என்ன சக்தி?' என்று கேட்க, 'இதோ பாருங்கள்' என்று சொல்லி, அருகில் நீர்நிறைந்து ஓடிக் கொண்டிருந்த ஹூக்லி நதியின்மேல் நடக்கத் தொடங்கினாராம். 'நம் படகுக் காரனிடம் காலணாக்காசு கொடுத்தால் அந்தக் கரையில் கொண்டுபோய் விட்டு



விடுவானே. இதற்காகவா பதினான்கு ஆண்டுகள் செலவிட்டீர்கள்?' என்று கவலையாகக் கேட்டாராம் குருநாதர். இந்தக் கதையின் நோக்கமே அரிய தவத்தின் பலன் பெரிதாக இருக்கவேண்டும். அது சமுதாயத்தை உயர்த்திட வேண்டும் என்பதுதான்.''

''ஐயா, நான் படிக்கப்போகும் பல்கலைக்கழகத்தில் என் துறையில் வேலை பார்க்கும் ஆசிரியர்களில் இருவர் சமீபத்தில் நோபல் பரிசுபெற்ற விஞ்ஞானிகள் என்பதை, அந்தக் கல்லூரி குறித்த வலைத்தளத்தில் பார்த்து வியப்படைந்தேன்'' என்றான் நண்பரின் மகன்.

''இரண்டுமுறை நோபல் பரிசு பெற்ற பெண்மணி யார் தெரியுமா?'' என்று கேள்வி கேட்டு நிறுத்த, ஐஸ்கிரீமை ஒரு பிடிபிடித்துக் கொண்டிருந்த ஒரு சிறுமி, ''மேரி கியூரி' என்று சொன்னதும் அப்பெண்ணின் தாயார் மகிழ்ந்துபோனார்.

''சரியாகச் சொன்னாய் பாப்பா. அந்த அம்மையாரின் மகளும், மருமகனும்கூட நோபல் பரிசு பெற்றவர்கள்தான். இதற்கு மேலும் ஒரு செய்தி உண்டு. அந்த மேரி கியூரி அம்மையார், தாம் கண்டுபிடித்த ஒரு கனிமத்துக்கு, தாம் பிறந்த போலந்து தேசத்தின் நினைவாக 'பொலோனியம்' என்று பெயரிட்டார்களாம்'' என்று சொன்ன நான், ''தம்பி நம் இளைய தலைமுறையினர் யாராவது புதிய பொருள் ஏதாவது ஒன்றைக் கண்டுபிடித்தோ உருவாக்கியோ காட்டவேண்டும். அதற்குத் 'தமிழ்' என்று பெயரிடவேண்டும்'' என்று சொன்னபோது, ''நிச்சயம் நடக்கும் ஐயா, என் போன்றோரோ, அல்லது என்னையடுத்த தலைமுறையோ நிச்சயமாக அதைச் சாதித்துக்காட்டும்.

ஏனென்றால் உலகிலேயே தற்

அரிய தவத்தின் பலன் பெரிதாக இருக்கவேண்டும். அது சமுதாயத்தை உயர்த்திட வேண்டும்.



போதைய கணக்குப்படி 52 கோடி இளைஞர்களைக் கொண்டிருப்பது நமது இந்தியாதானாம்'' என்றான் அந்த இளைஞன்.

''தன் மகனை உயர்ந்த சபையில் அமரும் அளவுக்கு உயர்த்துவது தந்தையின் கடமை. 'இப்படிப்பட்ட மகனைப் பெற இந்தத் தந்தை என்ன தவம் செய்தான்?' என்று உலகம் பெருமைப்பட நடப்பது மகனின் கடமை என்று நம் வள்ளுவப் பெருந்தகை கூறியுள்ளார். உங்கள் மகனை 'அவையத்து முந்தியிருக்கச் செய்த' உங்களுக்கும், 'இவன் தந்தை என்நோற்றான் கொல்' எனப் பெருமைப் பட வைத்த உங்கள் மகனுக்கும் வாழ்த்துக்கள்'' எனச் சொல்லி விடைபெற்றேன். அனைவரும் மகிழ்வோடு விடை தந்தனர்.

மீண்டும் சந்திப்போம்.

நண்பர்களே நன்றி.

பெருமழை வருமென வானம் கட்டியம் கூறியது.

நான் அந்த நூலகத்தினுள் நுழைந்தேன். காற்றில் ஜன்னல் கதவுகள் படபடத்தன.

நூலகத்தில் நிலவிய நிசப்தத்தை காற்றில் ஆடிய கதவுகள் கலைத்தன.

அந்த நூலகத்தில் நான் எழுதிய புத்தகம் இடம்பெற்றிருந்தது. நான் நேராக என் புத்தகம் இடம்பெற்றிருந்த அலமாரிக்கு அருகில் போய் நின்றேன்.

அடுத்த பிரிவில் புத்தகங்களை அலசிக் கொண்டிருந்த கல்லூரி மாணவிகள் என் புத்தகம் இருந்த அலமாரியை நெருங்கினர்.

ஒரு பெண் ஒவ்வொரு



புத்தம் புதிய புத்தகமே!

புத்தகமாக தன் விரல்களால் மெல்ல நகர்த்திக் கொண்டிருந்தார். இன்னொருத்தி ஏதோ புத்தகத்தைக் கையிலெடுத்து பக்கங்களை மேலோட்டமாகப் புரட்டிக் கொண்டிருந்தாள்.

ஒவ்வொரு புத்தகமாகப் புரட்டிக் கொண்டிருந்தவளைப் பார்த்தேன். தலைப்புகளையும் அட்டைப் படத்தையும் வைத்தே கணித்து ஒதுக்கிக் கொண்டு வந்தாள்.

என் புத்தகத்தின் அருகே மெல்ல நகர்ந்து வந்த அவளது விரல்கள், அட்டைப் படத்ததையும், என் பெயரையும் தடவி நின்றன.

என் மனம் கெண்டையாய்த் துள்ளியது. அந்தப் புத்தகத்தை எடுத்துப் படிக்க மாட்டாளா என்ற தவிப்பு எனக்குள் கூடியது.

ஆனால், வெகு அலட்சியமாக அப்புத்தகத்தை நகர்த்தி விட்டு, அவள் விரல்கள் அடுத்தடுத்த புத்தகங்களைத் தடவியபடி கடந்தன.

கடந்தவளைத் தொடர்ந்து வந்த மற்றவளைப் பார்த்தேன். ஒவ்வொரு புத்தகத்தையும் எடுப்பதும், பக்கங்களைப் புரட்டுவதுமாக மெதுவாகத்தான் தேடலைத் தொடர்ந்தாள். என் புத்தகத்தைக் கையிலெடுப்பாள் என்ற நம்பிக்கை இருந்தது.

நான் நினைத்தது போலவே என் புத்தகத்தை எடுத்தாள். அப்போதுதான் கவனித்தேன். என் புத்தகம் மறுபதிப்பு செய்யப்பட்டிருந்தது. சில பக்கங்களைப் புரட்டியவள், கீழுதட்டைப் பிதுக்கிவிட்டு தனக்கான புத்தகம் அதுவல்ல எனும் பாவனையுடன் எடுத்த இடத்திலேயே வைத்து விட்டாள்.

எனக்குச் சற்றே ஆதங்கமாக இருந்தது. உதட்டையாவது அவள் அப்படிச் செய்யாமலிருந்திருக்கலாம்.

நான் அங்கேயே நின்று கொண்டு அவர்களைக் கவனித்தேன். அப்படி என்னதான் பிரமாதமான புத்தகத்தைத் தேடுகிறார்கள்!

சற்று நேரத்தில் இருவரும் ஏதோ சில புத்தகங்களை எடுத்துக் கொண்டு அங்கிருந்து வெளியேறினர்.

அவர்கள் சென்றதும் அமைதி அடர்ந்தது.

தற்போதைய வாசிப்பு நிலவரம் முன்புபோல சொல்லிக் கொள்ளும்படியாக இல்லையெனத் தெரிகிறது.

வேலை, குடும்பம் என ஓடியாடுபவர்கள் ஓய்வாய்ச் சாயும் நேரங்களில்,

கொற்றவன்

ஓரேயடியாய் தொலைக்காட்சிப் பெட்டிகளுக்குள் முடங்கி விடுகிறார்கள்.

அதிலும் பயனுள்ளவற்றைப் பார்க்கிறார்களா என்றால் சந்தேகம்தான்!

மேலை நாடுகளில் இருக்கும் வாசிப்பனுபவம் நம் நாட்டில் என்று வருமோ என்ற ஏக்கம் எனக்குள் எழுந்தது.

வெளிநாடுகளில் எல்லாம் நமக்குத் தேவையான புத்தகம் ஒன்றைக் குறிப்பிட்டால் போதும். நூலகத்தில் அந்தப் புத்தகம் இல்லையென்றாலும், எப்பாடுபட்டாவது அதனைத் தமது வாசகர்களுக்காகத் தருவிக்கிறார்கள்.

இங்கே, வீட்டுத் தொல்லையிலிருந்து விடுபடுவதற்கும், பிரச்னையில்லாது பொழுதுபோக்குவதற்குமான இடமாக பெரியவர்கள் சிலருக்கு நூலகங்கள்தான் அடைக்கலம்!

இளைய சமுதாயம் நூலகங்களை அதிகமாகக் கண்டுகொள்வதில்லை என்ற நெருடல் நெஞ்சுக்குள் இருக்கிறது. அங்குமிங்கும் அலைந்து திரிந்து எப்படியோ நேரத்தைத் தொலைத்துக் கொண்டிருக்கிறார்களே என்ற ஏக்கம் என்னை உலுக்கும்போதெல்லாம் இந்த நூலகத்துக்குள் புகுந்துகொண்டு இளைய தலைமுறையின் வருகையைக் கணக்கெடுத்துக் கொண்டிருப்பது என் வாடிக்கை!

சன்னல் வழியே வெளியே எட்டிப் பார்த்தேன். வாகனங்கள் இரைச்சலுடன் விரைவதும், மக்கள் சலசலப்புடன் அலைவதும் தெரிந்தன.

நூலகத்தில் வெறிச்சோடிய அமைதி நிலவியது.

திடீரென வானம் பிளந்ததுபோல வெடிச் சத்தத்துடன் இடி இறங்கியது. இடியைத் தொடர்ந்து மழை பிடித்தது.

திடுமெனப் பெய்த மழைக்குப் பயந்து ஒதுங்கியவர்களில் சிலர், மழை இன்னமும் நெடுநேரம் நீடிக்குமெனத் தெரிந்ததில் உள்ளே நுழைந்தனர். படிப்பதான பாவனையுடன் நாற்காலிகளை அடைத்துக் கொண்டனர்.

மழை தன் உச்சத்தைத் தொட்டபோது சொட்டச் சொட்ட நனைந்தபடி ஓர் இளைஞன் நூலகத்தினுள் நுழைந்தான். தன் அடையாள அட்டையை நூலகரிடம் ஒப்புவித்துவிட்டு, நேராக புத்தக அலமாரியினை நோக்கி வந்தான்.

நான் சுதாரிப்படைந்து வந்தவனைக் கவனித்தேன். மழையையும் பொருட்படுத்தாது ஏதோவொரு தேடலுடன் வந்திருக்கும் அவன், இளம் தலைமுறையின் மீதான நம்பிக்கையை மெய்ப்பித்தான்.

வரலாற்றுப் பிரிவுக்குள் நேராக நுழைந்தவன், விடுதலைப் போராட்டம் குறித்த இரண்டு புத்தகங்களைத் தெரிவு செய்து கொண்டு, என் அலமாரிக்கு வந்தான். சில புத்தகங்களை எடுப்பதும், பக்கங்களைப் புரட்டுவதுமாக இருந்தவன், சட்டென என் புத்தகத்தைக் கையிலெடுத்தான்.

எனக்குள் மின்னல் வெட்டியது.

சில பக்கங்களைப் புரட்டியவன், நெற்றி சுருக்கி ஏதோ நினைத்தபடி அங்கே சுவரோரமாக இருந்த நாற்காலியில் போய் அமர்ந்தபடியே படிக்க ஆரம்பித்தான்.

எனக்குத் தலைகால் புரியவில்லை.

என் புத்தகத்தை எடுத்துப் படிக்க மாட்டாளா என்ற

ஆவலாய் அவனுக்கு அருகில் அமர்ந்துகொண்டு, அவன் படிப்பதைக் கூர்ந்து கவனிக்கத் தொடங்கினேன்.

அவன் படித்துக் கொண்டிருப்பது நான் எழுதிய முதல் நூல். அதனை எழுதியதையும், அதன் பின்னணியையும் என்னால் மறக்கவே முடியாது. இன்னமும் பசுமையாக எனக்கு அது நினைவிருக்கிறது.

ஒரு நாள் நண்பருக்காக வெகுநேரம் காத்திருக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டு விட்டதில் வேறு வழி இல்லாமல் அங்கிருந்த ஒரு நூலகத்தில் நுழைந்து ஒரு புத்தகத்தை எடுத்துக் கொண்டு அமர்ந்தேன். அதுதான் என் வாழ்க்கையில் திருப்புமுனை ஆனது.

நான் கையிலெடுத்த அந்தப் புத்தகம் ஒரு பேரறிஞர் எழுதியது. அவர் மறைந்து பல ஆண்டுகள் ஆகிவிட்டபோதும், அவரது எழுத்து சீரிய கருத்துக்களும் அழகான நடையுமாய்ப் படிக்கப் படிக்க எனக்குள் ஆவலை அதிகரித்ததோடு மட்டுமல்லாமல், என்னையும் எழுதத் தூண்டியது. அவரையே மானசீகக் குருவாக ஏற்றுக் கொண்டு எழுதத் தொடங்கி, புகழ்பெற்ற எழுத்தாளனாகவும் பின்னாளில் வளர்ந்து விட்டேன்.

அப்படி வளர்ந்த என் முதல் புத்தகம்தான் பல பதிப்புகள் கண்டு இப்போது இந்த இளைஞன் கையில் இருக்கிறது.

முழுமூச்சாய் கருத்தூன்றியவனின் முகத்தில் உணர்வுகளின் பிரதிபலிப்புகள் ஏற்ற இறக்கங்களாகத் தெரிந்தன. முழுதும் படித்து முடித்தவன், பின் அட்டையில் இருந்த ஆசிரியர் குறிப்பைப் பார்த்தான்.

ஏதோ பொறி தட்டியவனாய், பேனாவைக் கையிலெடுத்தான். புத்தகத்தின் முதல் தாளில் என்னவோ எழுதத் துவங்கினான். நான் ஆர்வமாய் அவனுக்குப் பின்னால் நின்றபடி அவன் எழுதுவதைப் பார்த்தேன்.

''பல ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்த நிகழ்வுகளை அப்படியே கண்முன் நிறுத்தி, 'அவர் வாழ்ந்த அந்தக் காலகட்டத்தில் நாம் வாழ்ந்திருக்கக் கூடாதா?' என்ற ஏக்கத்தை ஏற்படுத்தும் இந்த அமர எழுத்தாளரின் எழுத்துக்கள் என்னையும் எழுத்தாளனாகத் தூண்டுகின்றன. இவர் மறைந்து இருபதாண்டுகள் ஓடிவிட்டாலும், தம் எழுத்துக்களில் இன்னமும் உயிர் வாழ்ந்துகொண்டுதான் இருக்கிறார்!'' என்று எழுதிக் கையெழுத்திட்டான்.

அதைப் படித்ததும் பரவசமானேன்.

பல ஆண்டுகளுக்கு முன் எனக்கு ஏற்பட்ட அதே உணர்வு இப்போது இவனுக்கும் ஏற்பட்டிருக்கிறது. இனி இன்னொரு தலைமுறை எழுத்தாளன் கிடைத்துவிட்டான் என என் மனமெல்லாம் மகிழ்ச்சி பரவியது.

●



தவிப்பு எனக்குள்!

சேனல்

"நம்மைச் சுற்றியிருப்பவர்களின் பிரச்னைகளை நம்மால் தீர்க்க முடியாது. ஆனால், எந்தக் கோயிலுக்குச் சென்று எந்தத் தெய்வத்தை வணங்கினால் பிரச்னைகள் தீரும் என்று நம்மால் வழிகாட்ட முடியும்'' என்று உணர்வுபூர்வமாகப் பேசுகிறார் சன் டி.வியில் தெய்வ தரிசனம் நிகழ்ச்சியை இயக்கும் ரவிக்குமார்.

"தமிழகத்தில் பலருக்கும் தெரிந்த கோயில்களைத் தாண்டி எத்தனையோ குக்கிராமங்களில் கூட வெளியுலகுக்குத் தெரியாத பெரிய கோயில்கள் உள்ளன. இந்தக் கோயில்களின் சிறப்பம்சங்களையும் பக்தர்கள் தெரிந்து கொள்வதுதான், இந்நிகழ்ச்சியின் முக்கிய நோக்கம்.

ஒருமுறை படப்பிடிப்புக்காக சமயபுரம் கோயிலுக்குச் சென்றோம். கோயில் நிர்வாகத்தினர், 'கருவறையில் இருக்கும் அம்மனைப் படம் பிடிக்கக்கூடாது. வெளிப்பிராகாரத்தை மட்டும் படம் பிடித்துக் கொள்ளுங்கள்' என்றனர். நாங்களும் கோயிலின் வெளிப் பிராகாரத்தைப் படம் பிடித்து, படப்பிடிப்பை முடித்தோம். பின்பு எடிட்டிங்கின்போது பார்த்தபோது அம்மனின் கருவறைச் சிலை பதிவாகியிருந்தது. எங்கள் கேமராமேனும் கருவறைக்கு மிகவும் தொலைவில் இருந்து படம் பிடித்ததாகவும் கேமராவின் மானிட்டரில் கருவறை அம்மனின் முகம் பதிவாகாமல் கவனமாகப் பார்த்துக் கொண்டதாகவும் உறுதியாகக் கூறினார். இது எனக்கு மிகவும் ஆச்சரியம்.

பின்பு அம்மனின் கருவறை உருவத்தை எடிட் செய்துவிட்டுத்தான் சமயபுரம் கோயில் பற்றிய நிகழ்ச்சியை ஒளிபரப்பினோம்.

மலேசியாவில் உள்ள முருகன் கோயிலைப் பற்றிக்கூட ஒளிபரப்பியுள்ளோம். நான் படம்பிடித்த

தெய்வ

கோயில்களிலேயே ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயில் எனக்குப் பிடித்த ஸ்தலம். இங்கு ஒரு நாளைக்கு ஐந்தாறு முறை கருட சேவை நடப்பதுதான் காரணம். கோயிலைப் பற்றி புராண இதிகாசத் தகவல்களை மட்டும் தராமல், அந்தந்தக் கோயில்களின் வழிபாட்டு முறைகளைப் பற்றியும் தெய்வ தரிசனத்தில் கூறுகிறோம்.

ஒருமுறை எங்களைத் தொடர்பு கொண்ட






* ரவிக்குமார்

பக்தர் ஒருவர், நவக்கிரக கோயில்களைப் பற்றி ஒளி பரப்பும் நீங்கள் அந்தக் கோயில்களில் மூலவராக வீற்றிருக்கும் சிவபெருமானின் பெருமையைப் பின்னுக்குத் தள்ளுவது போலத் தெரிகிறதே என்று குறைப் பட்டுக் கொண்டார். அதற்கு நான், 'நவக்கிரகங்களுக்குச் சிறப்பையும் பெருமையையும் அளித்ததே சிவ பெருமான்தான். எனவே கிரகங்களின் பெருமையைக் கூறுவது சிவனின் பெருமையைக் கூறுவது போன்றுதான்' என்று விளக்கினேன்.

கோயில் தொடர்பான தகவல்களைத் திரட்டித் தருவதில் நிகழ்ச்சியின் எழுத்தாளர்களான அனிருத், மயன் போன்றவர்களுக்கு முக்கியப் பங்கு இருக்கிறது. எத்தனையோ பேர் தங்களின் குறைகளைச் சொல்லி ஆலோசனை கேட்கிறார்கள். ஜோதிடரைப் போல பரிகாரம் சொல்ல முடியாது. ஆனால், எந்தக் கோயிலுக்குச் சென்றால் பிரச்னை தீரும் என்று வழிகாட்ட முடியும்'' என்று சொல்லும் ரவிக்குமார் ஸ்ரீரங்கம், திருப்பதி கோயில்களைப் படம் பிடிக்க ஆர்வமாக இருக்கிறார்!

- ராகவ்குமார்

தரிசனம்!





அழகி!

பைனாகுலரை எடுத்துக் கண்ணில் பொருத்திக்கொண்டு மதில் சுவரின் உச்சியில் பார்வையைச் செலுத்தினேன். ஏதோ சில நிழல் வடிவங்கள் தெரிந்தன. அவை சித்திரமா, சிற்பமா, உயிருள்ள வடிவங்களா என்று தெரியவில்லை. உயிர் உள்ளவர்களாயிருந்தால், அவர்களுடைய கவனத்தை எப்படிக் கவர்வது என்று சற்று நேரம் யோசித்தேன்.

ஏதோ ஒரு மெல்லிய சத்தம் - தாழ்ப்பாள் திறப்பது போன்ற சத்தம் கேட்டது. சத்தம் வந்த திசையை நோக்கித் திரும்பினேன். மதில் சுவரின் அடிப்பக்கத்தில் ஒரு சிறிய துவாரம் தென்பட்டதுபோல் இருந்தது. அடுத்த நிமிஷம், அந்தத் துவாரத்தில் ஒரு முகம் காணப்பட்டது. ஆகா! அது ஒரு பெண்ணின் முகம். பைனாகுலரை உடனே எடுத்துக் கண்ணில் வைத்துக்கொண்டு பார்த்தேன். பைனாகுலர் என்னை ஏமாற்றுகிறதா, அல்லது பசி தாகத்தினால் நான் சித்தப்பிரமை அடைந்து விட்டேனா? பல நாடுகளுக்குச் சென்றிருக்கிறேன்; பல சாதி, பல இனங்களைச் சேர்ந்த பெண்



அமரர் கல்கி

களைப் பார்த்திருக்கிறேன். நேரிலும் பார்த்திருக்கிறேன். சினிமாக்கள், நாடகங்கள், டெலிவிஷன் காட்சிகள் ஆகியவற்றிலும் பார்த்திருக்கிறேன். ஆனால், இம்மாதிரி அழகிய ஒரு பெண்ணை நான் பார்த்ததில்லை. அழகு மட்டுமல்ல; உலகில் எத்தனையோ அழகிகள் இருக்கிறார்கள். ஆனால் இந்தப் பெண்ணினுடைய முகத்தில் தோன்றிய வசீகரம், இதுவரை நான் பார்த்திராத தெய்விக வசீகரமாயிருந்தது.

பார்த்துக் கொண்டிருக்கையிலேயே, வானத்தில் தோன்றிய மின்னல் மறைவது போல் அந்த முகம் மறைந்துவிட்டது. மறுகணம், துவாரத்தையும் காணவில்லை. மதில் சுவர்தான் இருந்தது.

நான் பார்த்தது வெறும் மனப்பிரமையாக இருந்தாலும் இருக்கலாம். பாலைவனத்தில் பிரயாணம் செய்கிறவர்களின் கண்ணுக்கு வெறும் மணல் படர்ந்த இடத்தில் குளிர்ந்த நீர்நிலை தோன்றும் என்பார்கள். அதுபோன்ற ஒரு கானல் நீர்க் காட்சிதானோ என்னமோ இது? ஆயினும் அங்கே சென்று பரிசோதனை செய்து பார்த்துவிட விரும்பினேன்.

('மயில்விழிமான்'
நெடுங்கதையிலிருந்து...)

• ஆனந்த கிருஷ்ணன், சென்னை

பகவத் கீதையின் இரண்டாம் பாகம் (சாங்கிய யோகம்) கூறும் முக்கியமான கருத்து என்ன?

''இல்லாத(து) என்றும்மெய் இல்லை,
இருப்பது
இல்லாத(து) ஆகாது;
இவ்வுண்மை - அல்லாது
வேறொன்றும்
இல்லையென கூறிடும்
ஞானியர்
சாரம் உணர்தல் சிறப்பு''



கிரேஸியைக் கேளுங்கள்...

• கேஎஸ்.கிருஷ்ணவேணி, கும்பகோணம்

அப்செட் ஆகும் சமயத்தில் எப்படி நடந்து கொள்வீர்கள்?

தலைகீழாக நடந்து கொண்டு upsetஐ setup செய்து விடுவேன்.

'அப்செட் வருங்கால்
அதனைநீர் செட்டப்பாய்
ஆப்செட் புரிவீர்
நகைத்து'

பி.கு: இந்த வாரம் 'சிரிக்குறள்' ஒன்று கேட்ட தி.நகர் எஸ்.ஜானகிக்காக. ஒரே கல்லுல ரெண்டு பதில்!

• ஜெயராமன், சென்னை

எனக்கு எழுபது வயதாகிறது; என் கனவில் 'தமன்னா' வருகிறார்.?

நியாயமா பாத்தா எழுபது வயசுல 'எமன்னா வரணும்!' 'தமன்னா' வந்தது, கனவுல ஸ்பெல்லிங் மிஸ்டேக்!

• ஜி.அப்துல்பாரி, பழனி

'பொய்', 'உவமை' இரண்டுக்கும் என்ன வேறுபாடு?

உவமைக்காக மல்லிப் பூ போல இருக்கும் எனச் சொல்லப்பட்ட இட்லியை, தலையில் சூடிக் கொள்ள முடியாது. ஆனால் மனைவி மல்லிப் பூ போல என்று சொல்லி நம் தலையில் கட்டிய இட்லி ஜல்லிப் பூ போல கல்லாக இருந்தாலும், மனைவிக்காகவும், பசிக்காகவும், நாம் அந்த இட்லியை அல்லது பொய்யை ஜீரணிக்கலாம்.

• ஜி.ரெஜினா பானு, பழனி

கிரேஸி ஸார்... பாம்புக்குக் காது இருக்கா? இல்லையா?

அது தெரியாது. ஆனா, அரண்டவன் காதுக்கு உருண்டதெல்லாம் பாம்பு!

• ஆ.லெட்சுமி, சென்னை

'புது துடைப்பம் நன்கு பெருக்கும்' இதன் விளக்கம் என்ன?

'விளக்குமாறை' பற்றி விளக்குமாறு கேட்டால் என்ன சொல்ல!

• ரேவதிப்ரியன், ஈரோடு

நீங்கள் 'ஆம் சாமி'யா இல்லை... ஆமாம் சாமியா?

அடியேன் 'ஆசாமி'... உம்மைப் போல் ஒருவன்!

• என்.சண்முகம், திருவண்ணாமலை

சித்திரம் கைப் பழக்கம்; செந்தமிழ் நாப் பழக்கம்; நகைச்சுவை?

நகைச்சுவை பழக்கமல்ல; உண்ணுதல், உறங்குதல் போல உடலுக்கு இயல்பான வழக்கம். வந்த சிரிப்பை வெளிக்காட்டா

அதென்ன

மல் இருக்க சிலர் தங்களைக் கஷ்டப் படுத்திக் கற்றுக்கொள்ளும் பழக்கம்.

● விஜயலக்ஷ்மி வெங்கடேசன்,
கொட்டிவாக்கம்

அவன் ஒரு 'ட்யூப் லைட்' என்கிறார்களே... என்ன அர்த்தம்?

இது கூடவா புரியல...சரியான...!

● வி.ஜி.சத்தியநாராயணன்,
நங்கநல்லூர்

முன் காலத்தில் ஊரின் நடுவே கோயில்தான் இருக்கும். ஆனால் இப்போ ஊரின் நடுவே 'டாஸ்மாக்' கடை இருக்கிறதே?

'குடி' இருந்த கோயில்!

● என்.பாலகிருஷ்ணன்,
மதுரை

இந்தியா பணக்கார நாடா? ஏழை நாடா?

ஏழுமலையான் நாடு. ஆன்மிகச் செல்வமும் அதிகம்; அயல் நாட்டு குபேரனிடம் பட்ட கடனும் அதிகம்!

● பா.அசோக்,விருதுநகர்

தமிழ் முத்தம் - ஆங்கில முத்தம் என்ன வித்தியாசம்?

இப்போது நிலவும் அசுகாதாரத்தில், என்னதான் தெய்விகக் காதலாக இருந்தாலும் முத்தத்தை சென்ஸார் செய்யுங்கள் ப்ளீஸ்... தமிழ் முத்தம் பன்றிக் காய்ச்சல். ஆங்கில முத்தம் swine flu.

● சீதாலஷ்மி, டெல்லி

உலக மகா கஞ்சன் யார்?

செலவுக்குப் பயந்து காலமான பின்பும் கஞ்சத்தனமாக சுடுகாட்டுக்கு நடந்து செல்ல ஆசைபடுபவன்.



ஆங்கில முத்தம்?










''1984-ல் கேமரா வாங்கினேன். இப்போ என்னிடம் அஞ்சு கேமிரா இருக்கு. பதினைஞ்சு கண்காட்சிகள் நடத்தியிருக்கேன். ஓவிய ஆசிரியரா வேலை செஞ்சாலும் கருத்தையும் கலைத்துவத்தையும் கண் வழியா மூளைக்குக் கடத்த, 'ஹைக்கூ' மாதிரி 'டக்கு'ன்னு சொல்லி 'பட்டு'ன்னு பேர் வாங்க கேமராதான் பெஸ்ட். இப்போ குறும்படம், விவரணப்படம்னு நகர்ந்திருக்கேன். இதுவரை ஆறு



தலைமுறை இருட்டை தவிடுபொடியாக்கும்
எங்கள் எழுத்து வெளிச்சம் இது!



அச்சமில்லை அச்சமில்லை
பாரதி இதைதான் பாடினாரோ!

இருட்டறை வெளிச்சங்கள்



✱ ந.செல்வம்

படங்கள் வெளியிட்டிருக்கேன். 'இருட்டறை வெளிச்சங்கள்' என்ற பெயரில் ஒரு கேமரா கதை சொல்கிற பாணியில் புகைப்படங்களை மட்டுமே கதாநாயகர்களாக்கி 2008-ல் ஒரு ஆவணப்படத்தை எடுத்தேன். பரவலான பாராட்டுகளை அப்படம் எனக்குப் பெற்றுத் தந்தது'' என்கிறார் புகைப்படக் கலைஞரான நெய்வேலி ந.செல்வம்.

- அமிர்தா


கல்கி அடுத்த இதழ்
தீபாவளி ஸ்பெஷல்
கரகர...மொறுமொறு...தொடர்கள்....
அதிக அதிக பக்கங்கள் ரூ.15/- (தீபாவளி ஸ்பெஷல் மட்டும்)
அஜயன் பாலா எழுதும்
பகல் மீன்கள்
- தொடர்கதை
சபீதா ஜோசப் எழுதும்
இவர்கள் இப்படித்தான்!
- நட்சத்திரங்களின் மறுபக்கம்
டாக்டர் ஏ.வி.ஸ்ரீனிவாசன் எழுதும்
மிஸ்டர் & மிஸ் மேல்மாடி!
- சீக்ரெட் ஆஃப் ப்ரெய்ன்
❖ நட்சத்திர சிறுகதைகள் ❖ பரவசப் பயணம் ❖ ஆலய விஸிட்
❖ ஸ்டார் பேட்டி ❖ ஓவியம் ❖ பன்முகப் பார்வையில் கமல்

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / CC (S) DN / 144 / 09 - 11* Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN / CC (S) DN / 70 / 09 - 11* Registered as a Newspaper in Srilanka.

